SAPTHAGIRI (TAMIL)
ILLUSTRATED MONTHLY
Volume:1, Issue: 8, Pages:56
March-2022, Price Rs.5/-

திருமலை திருப்பதி தேவஸ்தானம்

# ஸப்தகிரி

சமய மாத இதழ்

மார்ச் 2022 விலை ரூ.5/-

## நாகுலாபுரம்
## ஸ்ரீவேத நாராயண ஸ்வாமி
## தெப்போத்ஸவம்
## 24-03-2022 முதல் 28-03-2022 வரை





திருமலை திருப்பதி தேவஸ்தானம்

# ஒண்டிமிட்டா ஸ்ரீகோதண்டராம ஸ்வாமி பிரம்மோத்ஸவம்

## 2022 ஏப்ரல் 10 முதல் 18 வரை

10-04-2022
ஞாயிற்றுக்கிழமை
பகல் : துவஜாரோஹணம்
இரவு : சேஷ வாகனம்

11-04-2022
திங்கட்கிழமை
பகல் :
வேணுகானாலங்காரம்
இரவு : ஹம்ச வாகனம்

12-04-2022
செவ்வாய்க்கிழமை
பகல் :
வடபத்ரசாயி அலங்காரம்
இரவு : சிம்ம வாகனம்

13-04-2022
புதன் கிழமை
பகல் :
நவநீத கிருஷ்ணாலங்காரம்
இரவு : ஹனுமத்சேவை

14-04-2022
வியாழக்கிழமை
பகல் : மோஹினி சேவை
இரவு : கருட சேவை

15-04-2022
வெள்ளிக்கிழமை
பகல் : சிவதனுர்பாணாலங்காரம்
இரவு : வரவேற்பு,
கல்யாணோத்ஸவம், யானை வாகனம்

16-04-2022
சனிக்கிழமை
பகல் : திருத்தேர்

17-04-2022
ஞாயிற்றுக்கிழமை
பகல் :
காளியமர்தனாலங்காரம்
இரவு : குதிரை வாகனம்

18-04-2022
திங்கட்கிழமை
பகல் : சக்கரஸ்நானம்
இரவு :
துவஜாவரோஹணம்



*யேஷாமர்தே$_2$ காங்க்ஷிதம் நோ*
*ராஜ்யம் பே$_4$ாக$_3$ா: ஸுக$_2$ாநி ச ।*
*த இமேऽவஸ்தி$_2$தா யுத்$_3$தே$_4$*
*ப்ராணாம்ஸ்த்யக்த்வா த$_4$நாநி ச ॥*

**நமக்கு, எவர்களுக்காக அரசும் போகங்களும் சுகங்களும் விரும்பத்தக்கனவோ, அத்தகைய இவர்களே செல்வத்தையும் உயிர் மேல் உள்ள ஆசையையும் துறந்து யுத்தத்தில் நிற்கிறார்கள்.**

*– ஸ்ரீமத் பகவத் கீதை 1–33*



*அஸ்யேசாநா த்வமஸி ஜகத: ஸம்ச்ரயந்தீ முகுந்தம்*
*லக்ஷ்மீ: பத்மா ஜலதி தநயா விஷ்ணு பத்நீந்திரேதி ।*
*யந்நாமாநி ச்ருதி பரிபணாந்யேவ மாவர்த்தயந்தோ*
*நாவர்த்தந்தே துரித பவந ப்ரேரிதே ஜந்ம சக்ரே ॥*

**லக்ஷ்மி, பத்மா, ஜலதிதநயா (கடலின் புதல்வி), விஷ்ணு பத்நி, இந்திரை என்று வேதங்களுக்கு மூலதனமாயுள்ள எவளுடைய திருநாமங்கள் இவ்வாறு உருப்போடுமவர்கள் பாபங்களாகிய காற்றால் சுழற்றப்பட்ட பிறவிச் சக்கரத்தில் சுழல மாட்டார்களோ (அத்தகைய) நீ எம்பெருமானை அடைந்தவளாய் இந்த ப்ரபஞ்சத்திற்கு ஈச்வரியாக இருக்கின்றாய்.**

*– ஸ்ரீஸ்துதி 8*



# ஸ்ரீகபிலேஸ்வர ஸ்வாமி திருக்கோயில், திருப்பதி

**கபிலதீர்த்தம் விசேஷம் :**

முன்பு ஒரு காலத்தில் அந்தணர் ஒருவர் திருத்தலங்களையெல்லாம் தரிசித்து, தீர்த்தங்களில் நீராடி தேசம் முழுவதும் சென்று கொண்டிருந்தார். அதனால் அவர் மிகவும் நெலிந்து, சக்தியற்றவராய் நடக்கக்கூட முடியாமல் ஓரிடத்தில் ஓய்வு எடுக்க படுத்தார். படுத்தவர் மிகவும் ஆழ்ந்த உறக்கத்திற்குச் சென்றார். அவருடைய எண்ணத்தையும் அவருடைய இயலாமையையும் கண்ட எம்பெருமான் அவருடைய கனவில் தோன்றி, “ஓ பிராம்மணோத்தமனே! உன்னுடைய இந்த முயற்சி முடியாத ஒன்று. உனக்கு மட்டுமில்லை யாருக்குமே முடியாத ஒன்று. என்றைக்கும் நிறைவேறாதது ஆகும். ஆனால் வேங்கடாசல க்ஷேத்திரத்தில் “கபில தீர்த்தம்” முதல் மிக முக்கியமான பதினேழு தீர்த்தங்கள் உள்ளன. அவற்றில் சாஸ்திரபடி, நியமமாக ஸ்நானம் செய்தால் போதும். உலகத்தில் உள்ள அனைத்து தீர்த்தங்களில் நீராடிய பலன் கிட்டும். அதில் எவ்வித மாற்று கருத்தும் இல்லை. அதனால் நீங்கள் அந்த பதினேழு தீர்த்தங்களில் நீராடுங்கள். உங்கள் விருப்பம் நிறைவேறும்” என்றார்.

அந்த கனவின் அடிப்படையில் தன்னுடைய தீர்த்த யாத்திரையை நிறைவு செய்து வேங்கடாசல க்ஷேத்திரத்திற்குச் சென்று அங்கே இருக்கும் கபில தீர்த்தம் முதலாக உள்ள பதினேழு தீர்த்தங்களையும் வணங்கி முக்தி அடைந்தார்.

*“கைலாச சிகராவாஸ பரப்ரஹ்மஸ்வரூபிணே*
*காமாக்ஷி வல்லபாயாஸ்து கபிலேஸாய மங்களம் ||”*

பாதாள உலகத்தில் “போகவதி” நதிக்கரையில் தனது ஆசிரமத்தில் தவம் செய்து கொண்டிருந்த கபில மஹரிஷி ஒரு சிவலிங்கத்தை பூஜித்து வந்தார். அந்த சிவலிங்கம் தேஜோமயமாக ஜொலித்து அபாரமாக வளரத் தொடங்கியது. அந்த சிவலிங்கம் வேங்கடாசலத்தில் பூமியை பிளந்து கொண்டு சுயம்புவாக வெளிப்பட்டது. இந்த சிவலிங்கத்தின் வளர்ச்சியைக் கண்டு, அதனை கட்டுப்படுத்தும் முயற்சியில் மஹாவிஷ்ணு கோபாலனாகவும், பிரம்மா கபிலதேனுவாகவும் மாறி அந்த சிவலிங்கத்தின் மேல் க்ஷீராபிஷேகம் (பால் அபிஷேகம்) செய்து சிவலிங்கத்தின் வளர்ச்சியை கட்டுப்படுத்தினர். போகவதி நதி கபில தீர்த்தமாக இங்கு வெளிப்பட்டது. கபில மஹரிஷி முதன்முதலில் பூஜித்த காரணத்தினால் இந்த சிவலிங்கம் “கபிலேஸ்வரர்”, “கபிலேஸ்வர மஹாலிங்கம்” என பெயர் பெற்றது. இந்த தீர்த்தத்தில் நீராடியவர்கள் பாபங்கள் எல்லாம் தொலைந்து புண்ணியர்கள் ஆவர். ஒவ்வொரு ஆண்டும் கார்த்திகை மாதத்தில் திருவாதிரை நக்ஷத்திரத்தன்று லக்ஷ வில்வார்ச்சனை நடைபெறும். கார்த்திகை மாதத்தில் கார்த்திகை நக்ஷத்திரம் அன்று பிரதோஷ வேளையில் கார்த்திகை தீபோத்ஸவம் நடைபெறும். ஒவ்வொரு வருடமும் மஹா சிவராத்திரியை முன்னிட்டு 10 நாட்கள் சைவாகமசாஸ்திரப்படி பிரம்மோத்ஸவம் நடைபெறும்.





வேங்கடமே விண்ணோர் தொழுவதுவும் மெய்ம்மையால்
வேங்கடமே மெய்வினைநோய் தீர்ப்பதுவும்

# ஸப்தகிரி


சமய மாத இதழ்

மலர் 01 இதழ் 08

மார்ச் 2022



*சிறப்பு ஆசிரியர் :*
Dr. K.S. **ஜவஹர் ரெட்டி,** ஐ.ஏ.எஸ்.,
செயலாட்சித் தலைவர், தி.தி.தே.
*வெளியீட்டாளர்-பிரதான ஆசிரியர் :*
Dr. K. **ராதாரமணா,** எம்.ஏ., எம்.பில்., பி.எச்டி.,
ஆசிரியர் :
Dr. V.G.**சொக்கலிங்கம்,** எம்.ஏ., பி.எச்டி.,
அச்சிடுபவர் :
**திரு. பி.ராமராஜு,** எம்.ஏ.,
சிறப்பு அலுவலர்
தி.தி.தேவஸ்தான அச்சகம், திருப்பதி.
டி.டி.பி.
*பிரதான ஆசிரியர் அலுவலகம்,*
தி.தி.தே. திருப்பதி.
*புகைப்படங்கள் :*
**திரு.** P.N. **சேகர்**
**திரு.** B. **வெங்கடரமணா**



***பிரதிகளுக்கு:***
THE CHIEF EDITOR,
"Sapthagiri", T.T.D., Tirupati-517 507.
**0877- 2264543, 2264359**
**ஆசிரியர் : 2264360**


நீங்கள் ஸப்தகிரி இதழை
**www.tirumala.org**யில் பார்த்து,
படித்து மகிழலாம். ஆலோசனைகள்/
கருத்துக்கள்/புகார்களுக்கு
**sapthagiri.helpdesk@tirumala.org**

| | |
|---|---|
| **தனிப்பிரதி** | **ரூ.5/-** |
| **வருடச்சந்தா** | **ரூ.60/-** |
| **ஆயுள் சந்தா** | **ரூ.500/-** |
| **அயல்நாட்டு வருடச்சந்தா** | **ரூ.850/-** |


இதழில் வெளியாகும் கட்டுரைகளுக்கும், கருத்துகளுக்கும்
அவ்வவ்வாசிரியப் பெருமக்களே பொறுப்பாவர் -பிரதான ஆசிரியர்


## உள்ளுறை


| | பக்கம் |
|---|---|
| **பிராட்டி வைபவம்** *- டாக்டர் ஏ.வி. ரங்கசாரி, காட்டுமன்னார் கோயில்.* | 7 |
| **தி.தி.தே. நமாமி கோவிந்தா –பஞ்சகவ்ய பொருட்கள்** *- திரு. அத்தி. ரங்கராஜன், திருப்பதி.* | 9 |
| **மண்ணகத்தில் எந்நாளும் மங்கையரின் திருநாளே!** *- திரு. எஸ். ஸ்ரீதுரை, காஞ்சிபுரம்.* | 12 |
| **திங்கள் தோறும் ஒரு திருவேங்கடப் பாசுரம் : நம்மாழ்வாரிடம் மயங்கும் திருவேங்கடமுடையானும் பக்தர்களும்** *- பேராசிரியர் எஸ். கோகுலாச்சாரி, புவனகிரி.* | 15 |
| **தாஸ சாகித்யத்தில் திருவேங்கடவன்** *- திரு. வி. வேங்கடரமணா, திருப்பதி.* | 18 |
| **ஸ்ரீராமனின் திருக்கல்யாண குணங்கள் : வித்வான்** *- திரு. உ.வே. வேளுக்குடி கிருஷ்ணன் ஸ்வாமி, சென்னை.* | 21 |
| **ஜோதிட சாஸ்திரம் : வாஸ்து சாஸ்திரம்** *- முனைவர் ஆ.முத்து கிருஷ்ண ஆச்சாரி, திருவல்லிக்கேணி.* | 24 |
| **பொன்மலைமேல் ஏதேனும் ஆவேனே!** *- திரு. பி.ப. ராஜஹம்ஸாசார்யர் ஸ்வாமி, காஞ்சிபுரம்.* | 31 |
| **நந்தி தரிசனம்** *- திரு. டி.ஆர்.பரிமளரெங்கன், திருச்சி.* | 35 |
| **திருவேங்கடவன் திருவருள்** *- திரு. பி. இராமன், தேவமங்கலம்.* | 36 |
| **108 திவ்வியதேச வைபவம் – திருப்புலியூர்** *- உருப்பட்டூர் சௌந்தரராஜன், சென்னை.* | 37 |
| **அப்பிள்ளை அருளிய ஆழ்வார் ஆசார்யர்கள் வாழித் திருநாமமும் உரையும்** *- உ.வே. டாக்டர். மாடபூசி வரதராஜன் ஸ்வாமி, சென்னை.* | 40 |
| **உத்தரகோச மங்கைக்கு பெருமை தந்த மாணிக்கம்** *- திரு. கே. ஆர். சந்தான கோபாலன், சென்னை.* | 42 |
| **ஸ்ரீமத் பகவத்கீதை** *- டாக்டர் சி.கோவிந்தசாமி, புத்தூர்.* | 44 |
| **அலசுவோம் அறிவோம் ஆதிகாவிய நாயகர்களை : கசன் தேவயானி** *- திரு. சத்யதாரா, சென்னை.* | 46 |
| **ஆயுர்வேதம் – சுக்கு** *- திருமதி. வி.உஷா,திருப்பதி.* | 49 |
| **நீதிக்கதைகள் : லட்சுமி கடாக்ஷம்** *- திரு. எம்.முத்துராம் சுந்தர், ஆழ்வார் குறிச்சி,* | 51 |
| **சித்திரக்கதை : வாயில்லா ஜீவன்களுக்கும் முக்தி** | 52 |


**அட்டைப்பட விளக்கம்**

முன்னட்டை : ஸ்ரீவேதவல்லி சமேத வேதநாராயண ஸ்வாமி, நாகுலாபுரம்.

பின்னட்டை : ஸ்ரீலக்ஷ்மி நரசிம்ம ஸ்வாமி, தரிகொண்டா.

# பெண்மையைப் போற்றிடுவோம்




பெண்மை எங்கு போற்றப்படுகின்றதோ, பாராட்டப்படுகின்றதோ அங்கு உள்ள சமுதாயமும் மேன்மை அடைகின்றது. என்று, எங்கு பெண்மைக்கு இழுக்கு நேருகின்றதோ, அதற்குக் காரணமான சமுதாயமும் நரகத்திற்குச் செல்கின்றது. இது இம்மண் காட்டியுள்ள உண்மை சம்பவங்களாகும். இம்மண்ணில் விளைந்த சரித்திரமும் இதுவேயாகும்.

தாய் என்றும், சகோதரி என்றும், மனைவி என்றும் பெண்ணானவள் ஒரு ஆணுடைய வாழ்க்கையில் இடம் பெறுகின்றாள். இவ்வாறு பல நிலைகளில் திகழ்ந்திடும் பெண்ணின் சிறப்பினைக் கொண்டே மண்ணையும், விண்ணையும், நாட்டையும், நீரினையும், மொழியையும் பெண்ணாகப் போற்றிம் உள்ளனர். ஓர் ஆணின் சரிவு என்பது அக்குடும்பத்தை மட்டுமே சாய்த்திடும். ஆனால், ஒரு பெண்ணின் சரிவு என்பது ஒரு சமுதாயத்தையே சீரழித்து விடும். அன்பினால் திருத்திய மங்கயைர்கரசியும், ஆடலால் திருத்திய குமுதவல்லியும், அழகால் திருத்திய ரத்னாவும், கடமையால் திருத்திய அரசமாதேவியும், பாசத்தால் திருத்திய திலகவதியாரும் இச்சமுதாயத்தை மேம்படுத்திட்ட மங்கையர்களுக்கு ஒரு முன்னுதாரணங்களாவர்.

குடும்பம் ஓர் மரமென்றால் அம்மரத்தில் உள்ள கிளைகளும், இலைகளும் கணவன் உள்ளிட்ட பல உறவுகளாக விளங்கிட, மரத்தின் ஆணி வேராக விளங்குபவள் அக்குடும்பத்தின் தலைவியாவாள். இலை பழுத்தாலோ, கிளை முறிந்தாலோ மரம் பட்டு விடாது. ஆனால் வேர் பட்டுவிட்டால் மரமே சாய்ந்து விடும். ஓர் தாய் அல்லது மனைவி எனும் மங்கை நல்லாள் ஒருவளால் மட்டுமே குடும்பம் தலைநிமிர்ந்து நடக்கும்.

இயற்கையின் பின்னணியில் இவ்வுலக உயிர்கள் இயங்குவதால்தான் இயக்கும் அச்சக்தியை அன்னையாக, சாகாம்பரியாக தேவி மகாத்மியமும், *"மாயா பூமி: புத்ரோ அஹம் ப்ருத்வியா:"* என்று குறிப்பாக பூமியை அன்னையாக அதர்வண வேதமும் குறிப்பிடுகின்றது. *"குபுத்ரோ ஜாயதே குவச்சதபி குமாதா ந பவதி"* என்ற கூற்றானது "கொடிய மகன் ஒருவன் இம்மண்ணில் நடமாடலாம். ஆனால் கொடிய தாய் ஒரு நாளும் இருக்க மாட்டாள்'' என்று தெரிவிப்பதிலிருந்து தாய்மையின் பெருமை காட்டப்படுகின்றது.

பெண்ணின் அறிவையோ, திறமையையோ, வீரத்தையோ, வேத உபநிஷத்துக்களோ, இதிகாச புராணங்களோ மற்றும் இலக்கியங்களோ, வரலாறுகளோ என்றும் குறைத்து மதிப்பிட்டதில்லை. அவ்வாறு ஒரு குறை இம்மண்ணில் இருந்திருந்தால் ஞானச் சுடர்களான அபாலா, கார்க்கி, மைத்ரேயி போன்றோரும், தத்துவ முத்துக்களான ஆண்டாள், மீரா, காரைக்கால் அம்மையார் போன்றோரும், வீராங்கனைகளான ஜான்சி, பத்மினி, ருத்ரம்மா, சம்யுக்தா, வேலு நாச்சியார் போன்றோரும் தோன்றியிருக்க மாட்டார்கள். ஆண்களுக்கு சரிசமமாக பெண்களும் வணங்கப்பட வேண்டும் என்பதற்காகவே பிரம்மன் கலைமகளை தன் நாவினிலும், திருமால் திருமகளை தன் இதயத்திலும், மகாதேவன் மலைமகளை தன் உடலிலொருபாகமாகவும் கொண்டு விளங்குகின்றனர்.

இவ்வாறு தொன்றுதொட்டு புகழப்பட்டு, பெருமைபடுத்தப்பட்டு வந்த பெண்மையின் பெருமை இன்றோ கேள்விக்குறியானது. பெண்களால் பெருமைபடுத்தப்பட்ட ஆணினம், அப்பெண்மைக்கு சிறப்பு சேர்க்காமல் பெண் இனத்தை கதிகலங்க வைக்கின்றனர். அபலையின் கண்ணீர்த் துளியினை அவளது பலவீனமாகக் கொண்டு, அவை அவளுடைய பொறுமைக்கு வைக்கப்படும் முற்றுப்புள்ளி என்பதை மறந்தனர். அக்கண்ணீரே திராவகமாக மாறினால் உலகம் என்னவாகும் என்பதை கண்ணகி அன்று நிரூபித்துக் காட்டினாள். ஆணினம் இதனை மறக்க நேர்ந்தால் விளைவு மோசமாகும் என்பதை தவறு செய்யும் ஒவ்வொரு ஆணும், அதனை தடுத்து நிறுத்த முன்வராத ஒவ்வொருவரும் உணரவேண்டும். ஆவதும் பெண்ணாலே என்பது அழிவதும் பெண்ணாலே எனும் கூற்றினை அது மெய்ப்பிக்கும். எனவே பெண்மைக்கு கலங்கம் ஏற்படா வண்ணம் காப்பது நம் ஒவ்வொருவரின் தலையாய கடமையாகும்.

பெண்மையைக் காத்திடுவோம்! பெண்மையைப் போற்றிடுவோம்!

# பிராட்டி வைபவம்

**முன்னுரை :**

உலகைப் படைத்து காக்கும் ஸ்ரீமந்நாராயணன் கருணையுள்ள பிராட்டி உடன் இருந்தே அகில உலகையும் ரட்சிக்கின்றான் என்று எல்லா சித்தாந் தங்களிலும் தெரிவிக்கப்பட்டுள்ளன. இதனையே நம்மாழ்வார் *"அகலகில்லேன் இறையும் என்று அலர் மேல் மங்கையுறை மார்பா"* என்று பாடியுள்ளார். இவள் திருமாலைப் பிரியாமலே இருப்பவள். இவளுடன் சேர்ந்திருந்தே பகவான் ஜகத் ரக்ஷணம் செய்கிறான். ஆதலால், உபாயமாகவும் புருஷகார மாகவும் இருக்கிற பிராட்டியை அனைவரும் அறிய வேண்டும். இதனைக் கூரத்தாழ்வான் ஸ்ரீஸ்தவம் என்னும் இந்தத் தோத்திரத்தில் பிராட்டியின் ஸ்வரூ பம், ரூபம், குணம், கருணை அடிப்படையில் புரியும் செயல்பாடுகள் ஆகியவற்றைத் தெரிவிக்கிறார்.

**ஸ்ரீஸ்தவம் விளக்கம் :**

எல்லா உலகங்களைப் படைத்தல், காத்தல், அழித்தல் ஆகிய மூன்றையும், சுவர்க்கத்தையும், நரகத்தையும், வீடு பேற்றையும் அவரவர் செய்கின்ற செயல்களுக்கு உள்ள பேறுகளையும் மற்றும் உள்ள எல்லாவற்றையும் உண்டு பண்ணுகின்ற எம்பெருமான் பிராட்டியினுடைய முகக்குறிப்பை நோக்கிக் கொண்டு அந்த முகத்தின் புருவ நெறிப்பு முதலிய குறிப்புகளின் பின் சென்றவராய் படைப்பு முதலான அனைத்தையும் உண்டு பண்ணுகிறார்.

எம்பெருமானால் படைக்கப்பட்ட அனைவரும் அவரவர் வினைப்பயனை அனுபவிக்கும் பொருட்டு சொர்க்கம், நரகம், இன்ப வீடாகிய பரமபதத்தையும் அளிக்கும் போது, பிராட்டியின் முகக்குறிப்பைப் பின் சென்று அவளுடைய நோக்கத்திற்கு இணங்கவே எல்லாவற்றையும் அளிக்கிறார். இதனால் பிராட்டியின் முகக்குறிப்பில் எம்பெருமான் உலக ரக்ஷணம் செய்கிறான் என்றபடி.

முதல் சுலோகத்தை விண்ணப்பித்தவுடன் பிராட்டியார் ஆழ்வானை நோக்கி உமக்கு நான் என்ன சிறப்புகளை அளிக்க வேண்டும்? ஐச்வர்யம் வேண்டுமா? பிள்ளைப் பேறு வேண்டுமா? வேண்டியதைக் கேளும் என்றார். அதற்குப் பதிலாக 1) உம்மைத் துதிப்பதற்குத் தகுதியான சொற்களை அருள வேண்டும். 2) அன்பு மிகுந்த அறிவை வளரச் செய்ய வேண்டும். 3) உம்மை விட்டுப் பிரியாத பரமபக்தியை வளரச் செய்ய வேண்டும். 4) பரம பக்தி காரணமாக உம்முடைய தொண்டர்களான அடி யோங்களை அடிமை கொண்டு ஆனந்தப்பட வேண் டும். ஸ்ரீலக்ஷ்மீ தேவியே! அதனால் இந்த அடியோங் களும் உம்முடைய அருட்கண் பார்வைகளாகிற அலைகளின் பரவலுக்கு இலக்காகக் கடவோம்.

ஹே தேவியே! பண்டிதர்கள் எதைத் தோத்திரமாகச் சொல்லுகிறார்கள் என்று பார்த்தால் துதிக்கத்தக்கவரிடத்தில் இல்லாதவைகளையும் வேறு இடத்தில் இருக்கக் கூடிய குணங்களை ஏறிட்டுச் சொல்லுவது அதாவது இல்லாத குணங்களை இருப்பதாக ஏறிட்டு புகழ்வதும் உம் விஷயத்தில் வீணானது. அப்படிப்பட்டது உம்மள வில் பண்ண முடியாது. மாறாக உம்மிடம் உள்ள குணங்களை வர்ணிப்பதைத் துதியாகச் சொல்லு பவர்களாகில் உம்முடைய கல்யாண குணங்களாகிற கடலில் அபாரமாக உள்ள உமது கல்யாண குணங்களைப் பற்றிச் சொல்லுவது வாக்குக்கு



டாக்டர் ஏ.வி. ரங்காசாரி, காட்டுமன்னார் கோயில்.

வல்லவனான பிருஹஸ்பதியாலும் முடியாது. அதாவது உம்முடைய குணங்களை கவிதையாக்கி வர்ணிக்கிற வாக்கு பிருஹஸ்பதியாலும் முடியாத போது என்னால் எப்படிச் செய்ய முடியும்? உள்ளதை முழுமையாகச் சொல்ல முடியாது. கற்பனையாலும் வருவித்துச் சொல்ல முடியாது என்று தன் அடக்கத்தைத் தெரிவிக்கிறார்.

ஹே பிராட்டியே! மக்களுக்கு கீழுலகம் மேல் உலகம் முதலிய எல்லா இடங்களிலும் உண்டாகக் கூடிய செல்வமானது லட்சுமியாகிற உம்முடைய அருள் நோக்குப் பார்வையாகவே விளைகின்றது. அந்த அருள் நோக்குப் பார்வையில் ஆச்சரியப்பட மாட்டோம். ஏனென்றால் உலகங்களுக்கெல்லாம் தலைவனாயும், தனக்குத்தானே ஈசனாயும் உள்ள ஸ்ரீமந்நாராயணனும் கூட உம்முடைய அருட் பார்வை பெறுவதனால் தன்னை அருள் பெற்ற பாக்கியவானாக நினைக்கிறாரிரே. இதனால் உலகத்தில் ஒவ்வொருவரும் மேன்மை பெற்று இருப்பது, அழகு பெற்றிருப்பது எல்லாம் லக்ஷ்மி சம்பந்தத்தாலே என்கிறார்.

பிராட்டியே! உலகிலுள்ள எல்லா மக்களிடத்திலும் உள்ள செல்வம், அவயவங்களின் அழகு (சௌந்தர்யம்), வடிவழகு (லாவண்யம்). இவை உலகத்தில் மங்களகரம் என்று பெயர் பெற்றது எல்லாம் உமது ஆணைக்கு அடங்கி இருப்பதால் அவை எல்லாம் உமது



பெயரான "ஸ்ரீ" என்ற சொல்லாலே உண்டாகி பிரசித்தி அடைகின்றன. பிராட்டியே! உம்முடைய சிறப்புகளை உம்மாலும் உமது கணவரான ஸ்ரீமந்நாராயணனாலும் இவ்வளவு என்று அறியப்படுவதில்லை. வாஸ்தவத்தில் உம்முடைய மகிமைக்கு எல்லை இல்லை.

பிராட்டியே! உமது பெருமையின் எல்லையானது எம்பெருமானாலும் அறியப்படுவதில்லை. உம்மாலும் அறியப்படுவதில்லை. இப்படி ஒருவராலும் அறியப்படாதிருந்த போதிலும் உங்கள் இருவர்களுடைய எல்லாம் அறிந்தவர் என்ற பட்டம் குறைவு படுவதே இல்லை. ஏன் என்றால் அது உலக இயல்பு. எந்தப் பொருளானது உலகில் அடியோடு கிடையாதோ அந்த இல்லாத பொருளை அறிந்து கொள்ளாமல் இருப்பதை எல்லாம் அறிந்த தன்மைக்கு ஒத்தாக விவேகிகள் அறிகின்றார்கள். எனவே, சிறந்த பேச்சுத் திறமையை எனக்கு அளித்தருள வேண்டும்.

முன்பு பிரளய காலத்திலே பிராட்டியின் அருட்பார்வை பெறாமையில் வாட்டம் அடைந்திருந்த உலகம் பிராட்டியினுடைய கடைக்கண்ணாலே மெல்ல நோக்க வேண்டும் என்கிற குறிக்கோளாலே எந்த எண்ணம் உண்டான நொடியிலேயே கொழுந்து விட்டுக் கிளர்ந்து விளங்கிற்றோ அந்த பிராட்டியை அடி பணிகிறோம். பிரளய காலத்திலே அனைத்து ஜீவ ராசிகளும் சிறகு ஒடிந்த பறவை போல எப்பணிக்கும் தகுதி இல்லாமல் துவண்டு விழுந்த போது, அனைத்து ஜீவராசிகளும் நன்கு செயல்பட வேண்டுமே என்றும் மிகவும் விரும்பிய பிராட்டி அவர்களைக் குளிர நோக்கிய அளவிலே தானே அனைத்து துவட்சியும் நீங்கி, தளிரும் முறியுமாய் விளங்கி ஓங்குமோ அந்தப் பிராட்டியைச் சரண் அடைந்தேன் என்கிறார்.

எந்தப் பிராட்டியினுடைய கடைக்கண் நோக்கிற்கு ஒரு நொடிப் பொழுதாகிலும் இலக்காகப் பெற்றவர்கள் பெருஞ் செல்வம் பெற்றவர்களாக ஆவார்களோ அந்த ஸ்ரீரங்க நாச்சியாராகிய பிராட்டி அடியேனையும் தம்முடைய அருட் பார்வையால் நோக்கி பாக்கியவான் ஆக்க வேணும். தொண்டு செய்வதை அடியேனும் பெற்றேனாம்படி அருள் புரிய வேண்டுகிறார்.

**நிறைவு :**

இந்த ஸ்தோத்திரத்தினால் எம்பெருமானைக் காட்டில் பிராட்டிக்கு உலகைக் காப்பதில் அதிக அக்கரை உள்ளது. அதற்குக் காரணம் பிராட்டி பிரியத்தை பண்ணுபவர். எம்பெருமான் ஹிதத்தைப் பண்ணுபவர் என்பதாகும். எனவே நாமும் மகாலட்சுமியின் அருள் நோக்கு பெற்று தொண்டு செல்வம் முதலிய அனைத்துச் செல்வங்களையும் பெற்று விளங்குவோமாக.

திருமலை திருப்பதி தேவஸ்தானம்

# "நமாமி கோவிந்தா"

– திரு. அத்தி. ரங்கராஜன், திருப்பதி, 98490 99246.

TIRUMALA TIRUPATI DEVASTHANAMS, TIRUPATI


NAMAMI GOVINDA

Panchagavya Products Manufacturing Centre, Tirupati

## பஞ்சகவ்ய பொருட்கள்

பஞ்சகவ்யம் என்பது பசுவிலிருந்து பெரும் ஐந்து பொருட்களின் கலவை. அவை என்ன வென்றால் பால், நெய், தயிர், சாணம் மற்றும் மூத்திரம். "பஞ்ச" என்றால் ஐந்து. "கவ்யம்" என்றால் பசுவிலிருந்து பெரும் பொருட்கள் என்று அர்த்தம். "பஞ்சகவ்யம்" என்றால் பசுவிலிருந்து பெரும் ஐந்து பொருட்களை குறிக்கும். நமது பழம் பெரும் ஆயுர் வேத வைத்திய முறையின்படி இந்த பஞ்சகவ்யத்திற்கு அமுதத்திற்கு ஈடான மதிப்பு உண்டு. சில நோய்களுக்கு இது மருந்தாக மட்டும் அல்ல, பற்பல நோய்களை அண்டவிடாமல் வரும்முன் காக்கும் கவசமாக இந்த பஞ்சகவ்யம் ஆயுர்வேதத்தால் போற்றப்படுகிறது.

அந்த திருவேங்கடமுடையான் தரிசனத்தை போல, இப்பொழுது தேவஸ்தானத்தினர் மக்களுக்கு அளிக்கும் மற்றுமொரு அமுதம் இந்த பஞ்சகவ்ய பொருட்கள். கோயில் நிர்வாகத்தினர் சமீப காலத்தில் பசுவை ஆதாரமாகக் கொண்டு பல நிகழ்ச்சி களை கொண்டு வந்தார்கள். பசு சார்ந்த விவசாயம், கோவிந்தனுக்கு கோ சார்ந்த நைவேத்தியம், கோயி லுக்கு ஒரு கோமாதா, அனைத்து கோயில்களி லும் "கோ" பூஜை, திருமலையில் நவநீத சேவை, மலை அடிவாரத்தில் கட்டப்பட்ட "கோ மந்திரம்" எனும் பசுவிற்கான கோயில் போன்றவையாகும்.



இதைத் தொடர்ந்து பஞ்சகவ்யத்தால் ஆன பொருட்கள் தயாரித்தல் என்னும் இந்த பெரும் முயற்சி மக்களிடையே பெரும் எதிர்பார்ப்பை உண்டாக்கி உள்ளது. நூற்றுக்கணக்கான தேசிய வகை பசுக்கள் கொண்ட மிகப் பெரிய கோசாலையை நிர்வகிக்கும் தேவஸ்தானத்தினர் தங்களிடம் உள்ள கோ மூத்திரத்தை யும், சாணத்தையும், பாலையும் சரியான முறையில் விநியோகிப்பதற்கு இந்த முயற்சி வழிவகுக்கும்.

ஆயுர்வேத முறைப்படி பஞ்சகவ்யத்தால் பல சிக்கலான துல்லியமான முறையில், பெரும் உப யோகங்கள் கொண்ட மருந்துகளையும் தயாரிக்கலாம். ஆனால் தேவஸ்தானத்தினர் மிகவும் எளிமையான முறையையும், தக்க தொழில் நுட்பத்தையும் கையாண்டு மக்களுக்கு நித்தம் அவசியமாகும் பொருட்களை வழங்க திட்டமிட்டுள்ளனர். சொல்லப்போனால், தனது மாட்டுத் தொழுவத்திலிருந்து வெளியாகும் விலை மதிப்பில்லாத கோமியம் தான் இந்த முயற்சிக்கு முதலீடு. கொரோனா பெருந்தோற்று வந்த பிறகு மக்களிடையே ஆரோக்கியத்தின் மேல் விழிப்புணர்வும், இயற்கை முறை வைத்தியத்தின் மேல் மதிப்பும் வளர்ந்த நிலையில்,

திருப்பதி தேவஸ்தானத்தின் இந்த முயற்சி வெகுவாக வரவேற்கப்படுகிறது. திருமலையின் அடிவாரத்தில் உள்ள அலிபிரியில் தான் இந்த தொழிற்சாலை உருவாகி உள்ளது. இங்கு மூலிகைகளால் ஆன சோப்பு, பல்பொடி, கை கழுவும் திரவம், மூக்கில் விடும் மருந்து, ஊதுவத்தி, "கோ அர்க்க" எனும் (பருக உகந்த) சுத்திகரிக்கப்பட்ட கோ மூத்திரம், முகத்திற்கு அழகூட்டும் பசை, விபூதி, ஹோமங்களுக்கு உபயோகிக்கும் சாண வறட்டி, தூபக்கட்டி, தூபப்பொடி மற்றும் தூப கோப்பை


# பஞ்ச கவ்ய பொருட்கள்






ஒவ்வொரு பொருளும் கோ சாணம், கோ மூத்திரம் அல்லது நெய்யைக் கொண்டு தயாரிக்கப்படுகின்றன. ஏழுமலையான் திவ்ய அருளினால் வெளிவரும் இந்த பொருட்களின் வரிசைக்கு "நமாமி கோவிந்தா" என்று பெயரிட்டுள்ளனர். இதில் வரும் ஒவ்வொரு பொருளுக்கும் தனித்தனியாக ஒரு பெயர் உண்டு. இவை அனைத்தும் பூமியைக் குறிக்கும் பெயர்களாகும். உதாரணத்திற்கு தூபப்பொடிக்கு "அவனி" என்றும், ஊதுவத்திக்கு "தரணி" என்றும், சாம்பிராணி கோப்பைக்கு "தாத்ரி" என்றும், தூபக் குச்சிகள் "வைஷ்ணவி" என்றும், தூப குமிழுக்கு "வாராஹி" என்றும், விபூதிக்கு "பிருத்வி" என்றும், பற்பொடிக்கு "தன்ஷிகா" என்றும், முகப்பவுடருக்கு "ஹிரண்மயி" என்றும், மூக்கில் விடும் மருந்துக்கு "ஊர்வி" என்றும், கோ அர்க்கத்திற்கு "நந்தினி" என்றும் பெயரிட்டுள்ளனர். வலி நிவாரண மருந்திற்கு "ரூமஸாப்" எள்றும், மருத்துவ குணமுள்ள மூக்கில் விடும் மருந்துக்கு "நிம்ப நாஸ்யம்" என்றும், வாயில் கொப்பளிக்கும் பொடிக்கு "ஸ்வஸ்திய கண்டுஷா" என்றும், மாத்திரைகளுக்கு "அம்ருதா" என்றும், கிருமி நாசினி புகை தரும் பொடிக்கு "ரக்ஷோஞு தூபம்" என்றும் பெயரிட்டுள்ளனர். இந்த உலகத்தில் உள்ள அனைத்துமே இந்த மண்ணை சார்ந்து தான் இருக்கும், எதுவுமே இந்த மண்ணுக்குத் தான் சொந்தமானது என்ற உண்மையை மக்களுக்கு விளக்குவது தான் எல்லா பொருட்களுக்கும் பூமி சம்மந்தமான பெயர்கள் வைப்பதற்கு பின் உள்ள தத்துவம். அதேபோல், "நமாமி கோவிந்தா" என்ற பெயரின் மூலம் நாம் பரம் பொருளான அந்த கோவிந்தனை வணங்குவது மட்டும் அல்ல. இவை அனைத்தும் "கோ" என்ற பசுவைக் கொண்டு தயாரான பொருட்களாகும் என்பதை நினைவூட்டவே.





தயாரிக்கப்படுகின்றன. சாணத்தால் ஆன கொசுவிரட்டி சுருள்கள் ஆராய்ச்சியில் உள்ளது. அவற்றின் செயல்திறன் நிரூபணமானப் பின் வெளியிடப்படும்.

தேவஸ்தானத்திற்கு சொந்தமான கோசாலை நிர்வாகத்தினர் இந்த பொருட்கள் தயாரிப்பதற்கான மூலப் பொருட்களை அளிக்கின்றனர். அதே போல், தேவஸ்தானத்தின் மற்றொரு அங்கமான ஸ்ரீநிவாஸா ஆயுர்வேத மருந்தகம் இந்த பொருட்களுக்கான செயல்முறை மற்றும் மருத்துவ சூத்திரங்கள் கொடுக்கின்றனர். கோயம்புத்தூரை சேர்ந்த ஆசிர்வாத் ஆயுர் வேதா என்ற அமைப்பு இந்த பொருட்களை மிகப் பெரிய அளவில் தயாரிக்க தேவையான தொழில் நுட்பத்தை வழங்குகின்றனர்.

இந்த அனைத்து பொருட்களையும் பார்த் தோமானால் தூபத்திற்கு அதிக முக்கியத்துவம் அளிக்கப்பட்டு இருப்பது தெரிய வருகிறது. நமது இந்த வழிபாட்டு முறையில், கோயில்களில் நடைபெறும் சாஸ்திர சம்பந்தமான சடங்குக ளிலும் தூபத்திற்கு மிக முக்கிய இடமுண்டு. பங்குண்டு. தூபப்புகை போட்டால் அது காற்றில் உள்ள கிருமிகளை அழித்து வீட்டை சுத்தமாக வைத்திருக்க உதவும் என்பது கோவிட் பெருந் தொற்று நமக்கு உணர்த்திய பாடம். அதற்காகவே இந்த தொழிற்சாலையில் வறட்டிகளை மிகப் பெரிய அளவிலும், வடிவிலும் தயார் செய் கிறார்கள். இவை வெளியில் விற்பனைக்கு மட் டும் அல்லாமல், தேவஸ்தானத்தினர் தங்களின் கோயில்களில் நடக்கும் ஹோமங்களில் தினசரி தேவைக்கும் உபயோகப்படுத்துவர்.

விபூதி தயாரிப்பு ஒரு மிகவும் சிரமமான முறை. ஆனால் இங்கு அது சிறப்பாக செயல் படுத்தப் படுகிறது. மாட்டு சாணத்தை ஐந்து முறை வெவ்வேறு ஹோம குண்டத்தில் கொளுத்து வதன் மூலம் தரமான விபூதி தயாரிக்கப்படுகிறது. பஞ்ச பூதங்களான நீர், நிலம், ஆகாயம், நெருப்பு மற்றும் பூமியை குறிக்கும் ஐந்து ஹோம குண்ட லங்களில் நூறு கிலோ சாணத்தை கற்பூரம், அருகம்புல் மற்றும் நெல் உமியுடன் எரிப்பார்கள். இவ்வாறு எரிக்கப்பட்டு இறுதியாக தூய்மை யான வெளிர் நிறம் கொண்ட விபூதி தங்கும். தரம் வாய்ந்த சிமெண்ட், களிமண் மற்றும் செங்கற் களை கொண்டு ஹோம குண்டங்கள் கட்டப் பட்டுள்ளன. எடை அதிகம் கொண்ட சாணத்திலிருந்து எடை குறைவான விபூதி அடைய, மிகவும் பாரமான பூமியைக் குறிக்கும் குண்டத்திலிருந்து லேசான ஆகா யத்தை குறிக்கும் குண்டத்திற்கு மாற்றுவார்கள். இது விபூதி தயாரிப்பில் தொன்று தொட்டு வரும் சம்பிர தாயம்.

பசுமாட்டை சார்ந்த பொருட்களை மக்களுக்கு வழங்குவதற்கு தேவஸ்தானத்தின் இந்த செயல் பாரெங்கும் போற்றப்படுகிறது. இது ஆயுர்வேத முறையில் மக்களுக்கு மிகுந்த நம்பிக்கையை உண்டாக்கும் என்பதில் மாற்றுக்கருத்து இல்லை. அதே போல், இது ஒரு மேன்மையான, ஆரோக்கியமான உலகத்தை உண்டாக்கும் முயற்சியும் கூட.

## STATEMENT ABOUT OWNERSHIP AND OTHER PARTICULARS ABOUT

## SAPTHAGIRI

**(MONTHLY)**

**FORM IV**

*See Rule 8*

| | | |
|---|---|---|
| 1. Place of Publication | : | TIRUPATI |
| 2. Periodicity of its Publication | : | Monthly |
| 3. Printer's Name | : | Sri P. Ramaraju, M.A. |
| Whether citizen of India | : | Yes |
| Address | : | S.O.,T.T.D.Press Compound, K.T.Road, Tirupati. |
| 4. Publisher's Name | : | **Dr. K. Radha Ramana**, M.A.,M.Phil., Ph.D. |
| Whether citizen of India | : | Yes |
| Address | : | Chief Editor Office, T.T.D.Press Compound ,K.T.Road, Tirupati. |
| 5. Editor's Name | : | **Dr. V.G.Chokkalingam**, M.A., Ph.D. |
| Whether citizen of India | : | Yes |
| Address | : | Chief Editor Office, T.T.D.Press Compound ,K.T.Road, Tirupati. |
| 6. Name and address of individuals who own the News paper and partners or share holders holding more than one percent of the Total Capital | } | Tirumala Tirupati Devasthanams |

*I, K. Radha Ramana, hereby declare that the particulars given above are true to the best of my knowledge and belief.*

TIRUPATI — **(Sd.) Dr. K. Radha Ramana**

Date : 28-2-2022 — *Signature of the Publisher*

# மண்ணகத்தில் எந்நாளும் மங்கையரின் திருநாளே!

**திரு. எஸ். ஸ்ரீதுரை, காஞ்சிபுரம்,**
**9486139685**



*"மாத்ரு தேவோ பவ! பித்ரு தேவோ பவ! ஆசார்ய தேவோ பவ! அதிதி தேவோ பவ!"* என்று நம் கண்ணால் காணக்கூடிய பெரு மக்களை நம்முடைய வணக்கத்திற்குரியவராக்கி வழிபடச் சொல்கிறது நம்முடைய கலாச்சாராம்.

நம் ஒவ்வொருவரையும் பத்து மாதம் வயிற்றில் சுமந்து, நம்மைப் பெற்றெடுக்கும் போது கனவிலும் நினைத்துப் பார்க்க முடியாத வலியையும் சிரமங்களையும் அனுபவித்து நம்மை இந்த உலகிற்குக் கொடுக்கும் அன்னையரையே நாம் முதலில் வணங்க வேண்டும் என்று சொல்லித் தருகிறது நமது மரபு.

அதன் பிறகே நம் உயிர்ப்புக்குக் காரணமாகிய தந்தை, ஞானம் புகட்டும் ஆசான், நாம் அளிக்கும் உணவை ஏற்றுக் கொண்டு நம்மைப் புண்ணியசாலிகளாக உயர்த்தும் விருந்தினர் என்ற வரிசைக் கிரமத்தில் வணங்கக் கற்றுக் கொடுக்கிறது நமது மண்ணின் வாழ்வியல் நெறி.

இவர்களுக்குப் பிறகே நமது ஊனக் கண்களால் பார்க்க முடியாத தெய்வத்தை வணங்குகின்றோம்.

எல்லா உயிர்களின் படைப்பிற்கும் மூல காரணமான பரம்பொருளாகிய தெய்வத்தை வணங்குவதற்கு முன்பாக நம்முடைய கண்களால் பார்க்க முடிகின்ற பிரத்தியட்ச தெய்வங்களாகிய தாயார், தந்தையார், ஆசாரியர், விருந்தினர் என்ற நால்வரையும் வணங்கித் தொழுதால் பரம்பொருளின் இன்னருள் தானாகவே நமக்குக் கிடைத்து விடும்.

இந்த நால்வரிலும், தாயாருக்கே முதல் இடம் கொடுக்கப்பட்டிருப்பதிலிருந்தே நம் பெரியோர்கள் பெண் இனத்திற்குக் கொடுத்த முக்கியத்துவம் எளிதில் விளங்கிவிடும். இது மட்டுமல்ல. பாலதிரிபுரசுந்தரி, கன்னியாகுமாரி என்று பல்வேறு பருவத்திற்குரிய பெண் கடவுள்களையும் வழிபடும் பண்பாடு நம்முடையது.

பயிர்கள் வளரத் துணையாக இருந்து நமது பசியைப் போக்கி, கூடுதலாக நமது தாகத்தையும் போக்கி வாழ்விக்கின்ற நதிகளுக்கெல்லாம் நம்முடைய முன்னோர்கள் பெண்களுக்குரிய திருப்பெயர்களையே சூட்டி வணங்கி வந்திருக்கின்றனர்.

நம்முடைய பாவங்களைப் போக்கும் புனிதத் தன்மை உடையவர்களாகவும், நதிகளைப் போற்றி வழிபடுகின்ற பண்பாடு காலம் காலமாக இருந்து வருகின்றது.

இவ்விதம், தாய்மை, இரக்கம், இயல்பாகப் பெருக்கெடுக்கும் கருணை, புனிதம் போன்றவற்றைப் பெண்மைக்கு இலக்கணமாக்கிப் போற்றி வருவது நமது கலாச்சாரம்.

நவீனக் கல்வியும் பழக்க வழக்கங்களும் வெகுவாகப் பரவி வருகின்ற இன்றைய காலத்தில், குறிப்பிட்ட

**பண்பாட்டு ஆடை**

- ⇨ திருமலையானின் வி.ஜ.பி. தரிசனத்திற்கும் மற்றும் ஆர்ஜித சேவைக்கு வரும் பக்தர்கள் பாரத பண்பாட்டு ஆடைகளையே அணிந்து வர வேண்டும்.
- ⇨ ஆண்கள் : வேட்டி, மேற்துண்டு அல்லது குர்தா பைஜாமா.
- ⇨ பெண்கள் : புடவை, இரவிக்கை/பாவாடை, தாவணி/பஞ்சாபி டிரஸ்–சுடிதார்.






தினங்களுக்கு விதவிதமான பெயர்களைச் சூட்டிக் கொண்டாடுவது என்ற வழக்கம் ஏற்பட்டிருக்கிறது. முற்றிலும் மேல் நாட்டுக் கலாச்சாரத்தைச் சேர்ந்த அத்தகைய கொண்டாட்டங்கள் நம் நாட்டிலும் பரவி வருவது பொருத்தமற்றதாக இருப்பதுடன் நம்முடைய இளைய சமுதாயத்தினரின் சிந்தனைகளை திசை திருப்புவதாகவும் அமைந்துள்ளது.

மகளிர் தினக் கொண்டாட்டங்கள் ஆண் பெண் சமத்துவத்தை முன்னெடுப்பதாகக் கூறப்படும் அதேவேளையில், நமது பாரம்பரியம் பெண்களை அடிமைபடுத்தி வைத்திருந்தது போன்ற மிகையானதொரு தோற்றத்தை ஏற்படுத்துகின்றது.

பண்டைய காலத்துப் பெண்கள் கல்வி அறிவு பெற அனுமதிக்கப் படவில்லை என்றும், ஆண்களின் கருத்துக்கு எதிராக எதுவும் கூற இயலாது என்றும் தவறான கருத்துக்களைக் கூறுபவர்களால் இன்றைய இளம் பெண்களுக்கு சிந்தனைக் குழப்பம் ஏற்பட வாய்ப்புள்ளது. யாக்ஞவல்கியரின் மனைவியான மைத்ரேயி வேதாந்தப் பொருட்கள் குறித்து ஆராய்ந்து விவாதம் செய்பவராக இருந்திருக்கிறார்.

ஸ்ரீராமபிரானுடைய மனைவியாகிய ஸ்ரீசீதாதேவியார், தன்னையும் வனவாசத்திற்கு அழைத்துச் செல்ல வேண்டும் என்று ஆணித்தரமாக வாதிட்டிருக்கிறார். முனிவர்களின் வேண்டுகோளுக்கு இணங்க அரக்கர்களை அழித்தொழிப்பதாக ஸ்ரீராமபிரான் வாக்களித்த போது, “நமக்கு நேரிடையாக எந்தத் தீங்கும் செய்யாத அரக்கர்களை நீங்கள் எதற்காக அழிக்க வேண்டும்?” என்று கேள்வி எழுப்பியுள்ளார்.

இக்கலியுகத்தை எடுத்துக்கொண்டால் தன்னுடைய பாசுரங்களால் அந்த அரங்கனையே ஆண்டவளாகிய ஸ்ரீஆண்டாள், சிவபெருமானால் “அம்மையே” என்று அழைக்கப்பட்ட காரைக்கால் அம்மையார், ஸ்ரீராமாநுஜரின் ஆசாரியரான ஸ்ரீபெரிய நம்பிகளின் மகளாகப் பிறந்து அரங்கனின் திருத்தேரினையே தடுத்து நிறுத்திய அத்துழாய், பற்றற்ற வாழ்க்கைக்கு எடுத்துக்காட்டாக விளங்கிய ஸ்ரீகூரத்தாழ்வானின் தேவியார் ஆண்டாள், பக்த மீராபாய் என்று எண்ணற்ற மாதர் குல திலகங்கள் அவதரித்து நமது தேசத்தை அலங்கரித்துள்ளார்கள்.

ஔவையார் உள்ளிட்ட பெண்பாற் புலவர்கள் தமிழகத்தை ஆண்ட பல அரசர்களின் அவைகளையும் அலங்கரித்திருக்கின்றனர். இரு நாட்டு மன்னர்களிடையே போர் நிகழாமல் தடுக்கத் தூது செல்லும் அளவுக்கு வாக்குவன்மை படைத்தவராக ஔவையார் விளங்கியுள்ளார்.

திருநாவுக்கரசர் வழி தவறி நடந்த போது அவருடைய தமக்கையார் திலகவதியார் அவரை நெறிப்படுத்திச் சைவ சமயத்தில் சேர்த்து, அவரை ஒரு நாயன்மாராகவும், சைவ சமயக் குரவர் நால்வரில் ஒருவராகவும் உயர்த்தியுள்ளார்.

அருணகிரி நாதரையும் அவருடைய மூத்த சகோதரியார் நெறிப் படுத்தியதால்தான், முருகனருளைப் பெற்று சாகாவரம் பெற்ற

"திருப்புகழ்" பாசுரங்களை இயற்ற அவரால் முடிந்தது. வட இந்தியாவில் தன்னிடம் தணியாத மோகம் கொண்ட தம் கணவராகிய துளசிதாசரை அவருடைய மனைவி கடிந்து கொண்டதால்தான் காலத்தால் அழியாத "துளசிராமாயணம்" நமக்குக் கிடைத்தது.



ஜான்சி ராணி, லட்சுமி பாய், ராணி மங்கம்மாள் ஆகிய மாதரசிகள் ஆட்சி புரிந்ததும் இங்கேதான் நடந்திருக்கிறது. பெண்களுக்கு அபலை என்றொரு பெயருண்டு. பலம் அற்றவள். அதாவது ஆண்களுக்கு நிகரான பலம் அற்றவர் என்பதே அதன் பொருள். இது இயற்கையிலேயே நேர்ந்துவிட்ட ஒன்று. ஆனால், மனோபலத்தில் ஆண்களை விடப் பெண்களே சிறந்து விளங்குவதைக் காணலாம். இந்த சந்தர்ப்பத்தில் பெண்கள் தம்முடைய உடல் ரீதியான பலவீனத்தின் காரணமாகவே குடும்ப வன்முறைகளுக்கு ஆளாகின்றனர் என்பதில் ஓரளவு உண்மை இருக்கவே செய்கிறது.



ஆனால், இதற்கு காரணம் நமது பாரம்பரியம் அல்ல. சாத்விதமான உணவு, சாத்விதமான சிந்தனைகள் ஆகியவை நிலவும் எந்த ஒரு குடும்பத்திலும் பெண்கள் வன்முறைகளுக்கு ஆளாவதில்லை என்பதில் உண்மை. கள்ளுண்ணாமை, புலால் தவிர்த்தல் போன்ற அறநெறிகளைத் திருவள்ளுவர் உள்ளிட்ட பலரும் போதித்து வந்துள்ளனர். அவ்வழியில் நடந்து வரும் ஆண்மக்களால் பெண்ணினத்திற்கு எவ்விதத் துன்பமும் ஏற்படுவதில்லை.

எத்தனையோ நல்லறிவுகளைப் புகட்டித் தங்கள் குடும்பங்களை நெறிபடுத்தும் தாய்க்குலத்தினர் திருவள்ளுவர் காட்டிய இந்த நெறிகளையும் புகட்டத் தலைப்பட்டால், பெண்களுக்கு எதிர்காலத்தில் உடலியல் ரீதியாக ஒரு துன்பமும் நேராது என்பதே உண்மை.



நவநாகரீக உடைகளை அணிந்து கொள்வதும், கேளிக்கை விடுதிகளுக்குச் செல்வதும் ஒரு போதும் ஆண் பெண் சரிநிலையைக் கொண்டு வராது. மாறாக இவ்வழியில் செல்லும் பெண்களுக்குப் பிற ஆண்களால் மேலும் மேலும் தொல்லைகளே ஏற்படும். கணினி, கைப்பேசி என்று நவீன சாதனங்கள் பெருகியுள்ள இக்காலத்தில் பெண்கள் சமுதாயத்தினர் முன்பை விடக் கூடுதல் கவனத்துடன் இருக்க வேண்டும்.

முந்தைய காலங்களை விட, விஞ்ஞானம் உள்ளிட்ட பல துறைக் கல்வியறிவைப் பெறும் வாய்ப்பு தற்காலப் பெண்களுக்கு அதிகரித்திருக்கிறது. பற்பல துறைகளில் பணியாற்றும் வாய்ப்புகளும் அதிகரிக்கின்றன.



இவற்றின் மூலம் கிடைக்கின்ற பரந்த அறிவு, வருமானப் பெருக்கம் ஆகியவற்றால் சிந்தை தடுமாறாமலும், நமது பாரம்பரிய நெறிகளை இகழாமலும் இருந்து தங்களுடைய ஆளுமையையும் மதிப்பையும் நமது தேசத்தின் பெண்கள் வளர்த்துக் கொள்ள வேண்டும். அம்முயற்சியில் பெண்கள் வெற்றி பெற்று விட்டால் மார்ச் எட்டாம் தேதி மட்டுமல்லாது ஆண்டின் ஒவ்வொரு நாளுமே மகளிர் தினமாக அமையும் என்பதில் ஐயமில்லை.

நம்மாழ்வார் நான்கு வேதங்களுக்கு இணையாக நான்கு பிரபந்தங்களை அருளிச் செய்தார் என்பது நாம் எல்லோரும் அறிந்த செய்தி.

அவை திருவிருத்தம், திருவாசிரியம், பெரிய திருவந்தாதி, திருவாய்மொழி. இதில் முதல் பிரபந்தம் திருவிருத்தம். "முன்னுரைத்த திருவிருத்தம் நூறு பாட்டும்" என்று ஸ்வாமி தேசிகன் பிரபந்த சாரத்தில் எடுத்துக் கூறுகின்றார்.

ஒருவன் கருவிருத்தக் குழியில், அதாவது திரும்பத்திரும்ப "ஜனனம் மரணம், ஜனனம் மரணம்" என்ற சுழற்சியிலிருந்து விடுபட வேண்டும் என்று சொன்னால், சுவாமி நம்மாழ்வார் அருளிய திருவிருத்தத்தை ஒரு முறையாவது படிக்க வேண்டும்.

அந்தத் திருவிருத்தத்தில் ஒரு சில பாசுரங்கள் தவிர, மற்றப் பாசுரங்கள் அனைத்தும் அகத் துறையில் அமைந்தவை. பக்தியில் தோய்ந்த பிரேம பாவம் அற்புதமாக வெளிப்படும் உயர்ந்த பாசுரங்கள் இந்தப் பாசுரங்கள்.

இதில் திருமலையைப் பற்றி ஓர் அழகான பாசுரம் பாடுகின்றார். அந்தப் பாசுரம் இது.

*"மாயோன் வடதிரு வேங்கடநாட*
*வல்லிக்கொடிகாள்*
*நோயோ வுரைக்கிலும் கேட்கின்றி லீருரையீர் நுமது*
*வாயோ? அதுவன்றி வல்வினை யேனும் கிளியுமெள்கும்*
*ஆயோ? அடும்தொண்டையோ அறையோ! இதறிவரிதே"*

ஒரு அழகான காட்சியைச் சித்திரிக்கின்றார்.

ஒரு தலைவியும் தலைவனும் அன்போடு பழகி இருந்து, திடீரென்று பிரிந்து விட்டார்கள். தலைவன் அவள் நினைவாகவே இருக்கின்றான்.

மறுபடியும் அவளோடு சேர வேண்டி, அப் பெண்ணின் தோழியிடம் சென்று தனது நிலையைத் தெரிவிக்கின்றான். ஆனால், அவளோ இது குறித்து எந்த விதமான பதிலும் சொல்லவில்லை. தன்னுடைய முயற்சி தோல்வி அடைந்ததை நினைத்து வருந்துகிறான்.


இனி என்ன செய்வது என்ற தவிப்பு அவன் நெஞ்சத்தில் இருக்கிறது. எப்படியாவது அவர்களைச் சந்தித்து தன்னுடைய நிலையைக் கூறி தலைவியோடு சேர வேண்டும் என்று நினைக்கின்றான்.






# நம்மாழ்வாரிடம் மயங்கும் திருவேங்கடமுடையானும் பக்தர்களும்

– பேராசிரியர் எஸ். கோகுலாச்சாரி,
புவனகிரி, 94434 39963.



எங்கே சென்று சந்திக்கலாம் என்று நினைத்த பொழுது ஒரு செய்தி அவனுக்கு நினைவு வருகிறது.

அவளும், அவள் தோழியும் அவ்வப்பொழுது விளையாடுவதற்காக திருமலையில் உள்ள ஒரு தினை புலத்துக்கு வருவார்கள். அங்கே சென்றால் அவர்களைச் சந்தித்து விடலாம் என்று தலைவன் நினைத்து செல்கின்றான். இதுவரை சந்திக்காத புதிய மனிதன் போல தன்னை அறிமுகப்படுத்திக் கொண்டு, தோழியிடம் சில வார்த்தைகள் பேசுகின்றான். தன்னுடைய எண்ணம் போலவே தோழியின் எண்ணத்தையும் மாற்றி அமைத்து விட்டால், அந்த தோழியின் மூலமாக, தலைவியின் அன்பைப் பெற்று அவளோடு கூடி விடலாம் என்பது இவனுடைய எண்ணம்.

இந்த எண்ணம் பலித்ததா? பலிக்கவில்லையா? என்பதை அழகியலோடு சொல்வதுதான் இந்தப் பாசுரம். *“மாயோன் வடதிருவேங்கட நாட வல்லிக் கொடிகாள்”* என்று ஊரின் பெயரைச் சொல்லி இனிமையாக அழைப்பதில் தொடங்குகிறது பாசுரம்.

சில செயல்கள் புரிந்து கொள்ள முடியாது. சில செயல்கள் வியப்பாக இருக்கும். அப்படி இருந்தால் அது “மாயம்” என்பதில் அடங்கும்.எம்பெருமான் செயல்களை யாரால் புரிந்து கொள்ள முடியும்?

கலியுக தெய்வம் திருவேங்கட நாதன் இப்படிப் பட்ட மாயங்களைச் செய்வதற்குத்தானே வட வேங்கடத்தில் வந்து நிற்கிறான். அதனால் “மாயோன் திருவேங்கட நாட” என்று அழைக்கிறார்.

அவன் செயல்களைப் போலவே, தலைவியின் எண்ணங்களும் மாயத்தன்மையோடு புரிந்து கொள்ள முடியாதபடி இருப்பதால் “மாயோன், வட திருவேங்கடநாட” என்று அழைக்கிறார் என்றும் எடுத்துக் கொள்ளலாம்.

“நீ அந்த ஊர்க்காரன்தானே! அப்படிதான் உன் செயல், பேச்சு இருக்கும் என்று சொல்வதில்லையா. அது போல், வெறுமனே வேங்கடம் என்று சொல்லாமல், “வட” என்ற சிறப்பு எதற்கு என்றால், தென் திருவேங்கடம் என்றும் ஒரு திவ்ய தேசம் இருக்கிறது. அதனால் குறிப்பிட்டு கூறுவதற்காக வடக்கிலுள்ள வேங்கடம் என்று சொல்லுகிறார். ஆழ்வார் அவதரித்த தமிழ்நாட்டுக்கு வடக்கு என்பதால் இப்படிக் குறிப்பிடுகின்றார்.

“வல்லிக்கொடிகாள், என்னுடைய வேதனை களை, நான் சொன்னாலும் கேட்க இயலாத மன நிலையில் இருக்கின்றீர்கள். நான் என்ன செய்வது? அது என்னுடைய பொல்லாத காலம். என்னுடைய தீவினைகள் செயல்படும் நேரம். நீங்கள் பாவம். என்ன செய்வீர்கள்?

“வல்லிக்கொடிகாள்” என்று பன்மையில் அழைப்பதால் தோழியும் தலைவியும் சேர்ந்து இருக்கும் இடம் என்பதும், கிளி பற்றிய பேச்சு வருவதினால், அது புனம் காத்து இருக்கும் ஒரு தோட்டம் என்பதும் தெரிகிறது. காரணம் அங்கேதான் கிளி முதலிய பறவைகள் தானியக் கதிர்களை உண்பதற்காக வரும். அவற்றை அந்தப் பெண்கள் விரட்டுகிற போது ஆயலிடுகிற சொல் “ஆயோ” என்பது; (அதுவோ?)

தலைவன் சொல்கிறான். “பெண்களே! என்னு டைய நிலையைப் பார்த்தால் நான் தளர்ந்து இருப்பது உங்களுக்குத் தெரியவில்லையா? என்னுடைய கஷ்டம் தெரியாமல் இருக்கிறீர்களே. ஒருவரைப் பார்த்தாலே அவனுக்கு என்ன துன்பம் என்பது அவனுடைய உடல் மொழியை வைத்துக் கொண்டு தெரிந்து கொள்ளாமல் இருக்கிறீர்கள் என்று சொன்னால் பிறருடைய துன்பத்தைப் பற்றி நீங்கள் கவலைப் படாமல் இருக்கின்றீர்கள் என்றல்லவா ஆகிவிடும். என்னைப் பார்த்தவுடனே என்னுடைய துன்பத்தை உணரவில்லை என்பது கூட பரவாயில்லை. ஆனால் நான் படும் வேதனையை உங்களிடம் வாய் திறந்து சொல்லி ஆறுதல் பெறலாம்

திருமலை தரிசனத்திற்கு வரும் முன்...



▸▸ திருமலை தரிசனத்திற்கு வரும் பக்தர்கள் தவறாமல் இரண்டு (2) தவணை கோவிட் தடுப்பூசி செலுத்தி கொண்டதற்கான சான்றிதழ் கொண்டு வருதல் வேண்டும்.

அல்லது

▸▸ 48 மணி நேரத்திற்கு முன்னர் ஆர்.டி.பி.சி.ஆர் கொரோனா பரிசோதனையை செய்து, கொரோனா தொற்று இல்லை என்பதற்கான சான்றிதழை கொண்டு வருதல் வேண்டும்.



என்றாலும் கூட, அதை காது கொடுத்து கேட்காமல் உங்கள் வேலையைப் பார்த்துக் கொண்டு இருக்கிறீர்களே! உங்கள் குரல் இனிமையைப் பார்த்து கிளிகள் கூட குரல் இனிமைக்கு தோற்று பின் செல்கின்றன. வெட்கப்படுகின்றன.

*"மென்னடை அன்னம் பரந்து விளையாடும்"* என்ற தொடரில் ஆண்டாளிடம் நடை அழகு கற்றுக் கொள்வதற்காக வில்லிபுத்தூர் வந்து, ஆண்டாள் நடக்கின்ற நடை அழகைப் பார்த்து வெட்கப் படுகின்றன என்பதுபோல, இவர்களுடைய சிவந்த வாயும், அந்த வாயிலிருந்து வருகின்ற மொழிகளும் தலைவனையும் மொழியில் சிறந்த கிளிகளையும் பின்னடைய வைக்கின்றன.

இங்கே, "வல்வினையேனும் கிளியுமெள்கும்" என்று கிளியோடு தன்னையும் சேர்த்துப் பாடுவது எதற்காக என்று சொன்னால் தோல்வி என்பது இருவருக்கும் பொதுவாக இருக்கிறது என்பதை உணர்த்துவதற்கேயாகும். இவனுக்கு காதல் தோல்வி, கிளிகளுக்கு தங்கள் குரல் இனிமையாக இல்லையே என்ற தோல்வி.தலைவனை மூன்று விஷயங்கள் துன்புறுத்து கின்றன. ஒன்று இவன் பேசுவதை அவர்கள் கேட்கவில்லை. இரண்டாவது அவர்களுடைய செவ்வாய். மூன்றாவது குரலோசை. இவற்றில் எது எங்களைத் துன்புறுத்துகிறது என்பதைப் பிரித்து அறிய முடிய வில்லை. நீங்களாவது எடுத்து சொல்ல மாட்டீர்களா என்று தலைவன் தோழியை நோக்கி கூறுவதாக அமைந்த பாசுரம் இந்தப் பாசுரம். திருமலையின் சூழலை இயற்கையின் நிகழ்வுகளோடு காதலையும் கலந்து சொல்லும் பாசுரம் இது.

ஸ்வாபதேசத்தில், ஆழ்வாரைப் பிரியமாட்டாத ஒரு பாகவதர், அவரது அவயவ விளக்கத்திலும், அருளிச் செய்யும் வாய் மொழிகளிலும் ஈடுபட்டுச் சொல்லுகிற வார்த்தை இது என்று கொள்க. அற்புதமான எம்பெருமான் உலகை காப்பதற்காக பரமபதத்தை விட்டுத் திருமலையில் வந்து நிற்கின்றான். நீர்மையை நாடுகின்றவரும், கொடி போல் பாரதந்திரிய ஸ்வரூபத்தை உடையவருமான ஆழ்வாரே! என்று ஆழ்வாரை விளிக்கும் பாசுரம் இது.

"ஆழ்வார்! உம்மிடத்து அன்பு மிகுதியால் நாங்கள் படும்பாட்டை விண்ணப்பஞ் செய்தாலும் (உமது பரவசத்தால்) கேட்கின்றீரில்லை. உம்முடைய திருமுக மண்டல மலர்ச்சியோ? அதுவல்லாமல், உம்மைப் பிரிந்துபோக முடியாதபடி கட்டுகிற வலிய பாசபந்தத்தையுடைய யாமும் பைங்கிளி வண்ணனான எம்பெருமானும் ஈடுபடும்படியான உமது சொற்போக்கோ? அப்படிப்பட்ட சொற்களைக் கூறும் வாயிதழ்களோ? அல்லது குரலோசையோ? எம்மை நெகிழச்செய்யும். இவை தனித்தனியே வருத்தச் செய்யுந் தன்மையனவாதலால் இவற்றில் எம்மை வருத்துவது இன்னதென்று பகுத்தறிதல் அரிது. நீர் தாமே இதனை நிச்சயித்துச் சொல்வீர் என்றதாயிற்று என்பதே இதன் உள்ளுறைப் பொருள்.

நம்மாழ்வாரின் தமிழில் திருவேங்கடமுடையானும், இறையடியார்களும் கொண்ட ஈடுபாட்டை இந்தப் பாசுரம் மறைமுகமாக விளக்குகிறது.

பாசுரம் படிப்போம்...

*சென்ற இதழின் தொடர்ச்சி...*

எம்பெருமானின் திருக்கரங்கள் விதுரனின் வீட்டில் பாலைக் குடித்தவை. சங்கு சக்கரத்தை தரித்தவை. குசேலன் கொடுத்த அவலை உண்டவை. தூய்மை யான மனம் படைத்தவர்க்கு முக்தியை வழங்குபவை. முத்திரைகளுடன் கூடி யவை. கோவர்த்தன கிரியை ஏந்தியவை. காளிங்கநர்த்தனம் ஆடும்போது அதன் வாலைப் பிடித்தவை. கஜராஜனை இரட்சித்தவை. இவையே வைகுண்டம் என்று காண்பிக்கக்கூடியவை. உலகைக் காப்பாற்றுபவை. உதவி புரியக் கூடி யவை. சுதந்திரமானவை. துஷ்டர்களை அழித்து பக்தர்களைக் காப்பாற்றுபவை. அனைத்திற்கும் காரணமானவை திருவேங்கடவனின் அபய ஹஸ்தம்.



இவ்வுலகில் உள்ள அனைத்தும் ஸ்ரீநிவாசனின் வயிற்றில் உள்ளன . அவ்வயிற்றினை மத்வாச்சார்யர் இவ்வாறு துதித்துப் பாடியுள்ளார்.

**''உதரம் சிந்த்யமாசஸ்ய தனுத் வேப்யகிலம் பரம்''**

அவ்வாறே ஸ்ரீவிஜயீந்தர தீர்த்தரும் வருணித்துப் பாடியுள்ளார்.

தாமரைப்பூவில் வீற்றிருக்கும் பிரம்மனின் பிறப்பிடமாக ஒளிமயமாகப் பிரகாசிப்பவை. துதிப்பவருக்கு அதிசயத்தை உண்டாக்குபவை. இளஞ்சிறுவனாக இருந்தபோது பூமிமேல் உருண்டவை. பவளம் முதலான இரத்தினங்களால் கோர்க்கப் பட்ட ஹாரத்தை அணிந்தவை. அவை சூரியனின் ஒளியைப் போன்று காட்சித்தருபவை எண்ணிக்கையில் அடங்காத உயிர்களுக்கு நிலையமானவை. வேதத்திற்கு தென்படாதவை. தாயான யசோதாவிற்கு மூவுலகங்களைக் காட்டியவை. ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு விதமாகத் தோன்றுபவை. தேவதைகளுக்கு அதிசயத்தை உண்டு செய்பவை. எக்காலத்திலும் பசியை உண்டு செய்யாதவை. மகரந்தங்கள் நிறைந்த மலர்களால் பூஜையை ஏற்பவை. அறியாமையை உடைய மனிதர்களுக்கு ஞானத்தை வழங்குபவை. பக்தர்களுக்கு அருளை வழங்குபவை. கோபாலர்களுடன் கலந்து உண்டு, தொப்பையை வளர்த்தவை. இத்தகைய பெருமைகளை எல்லாம் உடையவை என்று ஸ்ரீநிவாசனின் வயிற்றினைப் பற்றிக் கூறுகிறார்.


அடுத்து ஸ்ரீநிவாசனின் முகத்தைப் பற்றி ஸ்ரீவிஜயதாசர் வருணிக்கிறார்.

ஸ்ரீஹரியின் வாய் நித்யானந்தமானது என்கிறார்.

**''ஸ்ரீரமணிகூட ஏகாந்த வாடுவ வதன... விசித்ரவதன''**

ஸ்ரீரமணியுடன் ஏகாந்தமாகப் பேசக் கூடியவை! வேதங்களின் நிலையமானவை. பிரம்மதேவருக்கு உபதேசமளித்தவை! திருட்டாக வெண்ணெய் உண்டவை. எப்பொழுதும் சிரித்துக்

# தாஸ சாகித்யத்தில் திருவேங்கடவன்



கொண்டு முத்துக்களை உதிர்ப்பவை. யசோதா தேவியின் கரங்களால் உண்டவை. அசுரனான பூதனையின் விஷத்தை எடுத்தவை. குழந்தையாக இருந்தபோது மண்ணை உண்டவை. பிரம் மாண்டத்தை காண்பித்தவை. பாலைக் குடித்தவை.

சிறு குழந்தைகளின் மேல் உமிழ்ந்தவை. சந்திரனைப் போன்றவை. ஆனந்தமானவை. அழகானவை. சபரி கொடுத்த பழத்தை உண்டவை. வேணுவை ஊதியவை. பரமபக்தர்களான ஹரிதாசர்களுடன் ஆடியவை.

தாய் தேவகிக்கு தத்துவத்தை தெரிவித்தவை. தவாக்னியை விழுங்கியவை, வராஹ தரங்க மானவை. தாம்பூலரசம் போன்று ஒளி மயமாகக் காட்சி தருபவை. உலகத்தை உமிழக் கூடியவை. சக்தியைப் பெற்றவை. குசேலனின் அவலைத் தின்றவை. "அம்மா" என்று பசுக் கூட்டத்தை அழைப் பவை. பிரம்மா ருத்ரனை ஆளக் கூடியவை. இதுவே விஷ்வவதனனான ஸ்ரீநிவாசனின் திருவாய் சிறப்பாகும்.

அடுத்து மகர குண்டலங்கள் அணிந்த ஸ்ரீநிவாச னின் திருச்செவிகளை வர்ணிப்பதனை காண்போம்.

ஸ்வாமியின் மகர குண்டலங்கள் ஒளிமயமாகப் பிரகாசிப்பவை. பக்தர்களின் புகழைக் கேட்பவை. கஜேந்திரன் அழைத்ததனை காதில் கேட்டவை. ஆஞ்சனேயருடன் ஏகாந்தமாக இருந்தவை. பிரம்ம ஸ்தோத்திரங்களை சிரத்தையுடன் கேட்பவை. அற்பப் பிறவிகளின் பிரார்த்தனைகளை ஏற்பவை. அனைவரின் குரல்களையும் ஒரே விதமாக கேட்கக் கூடியவை. சாதுவான மக்கள் நின்று அன்புடன் அழைத்தவருக்கு மிகுந்த ஞானத்தை வழங்குபவை. கோபத்துடன் விவாதங்களை செய்பவர்களுக்கு நரகத்தைக் காட்டுபவை. அனைவரின் கூக்குரலையும் கேட்டு அருள் புரிபவை. துஷ்டர்கள் எவ்வளவு அழைத்தாலும் காதில் விழாதவர் போல் இருப்பவை. இவ்வாறு ஸ்ரீநிவாசனின் திருச்செவிச் சிறப்புகளை வருணித்து உள்ளார்.

தெலுங்கு மூலம் : திரு. எஸ். நாகராஜாசார்யுலு
தமிழாக்கம் : திரு. வி. வேங்கடரமணா

தொடரும்...

திருமலை திருப்பதி தேவஸ்தானம், திருப்பதி

## திருப்பதியில் தரிசிக்க வேண்டிய ஆலயங்கள்

### ஸ்ரீ கோவிந்தராஜ ஸ்வாமி கோயில் :

இங்கு எழுந்தருளியுள்ள மூல மூர்த்தி வைணவத் திலகமான ஸ்ரீராமாநுஜரால் பிரதிஷ்டை செய்யப்பட்டதாக புராணங்கள் கூறுகின்றன. இங்கு உள்ள மூலவர் கிடந்த கோலத்தில் காட்சியளிக்கிறார். ஸ்ரீஆண்டாள், ஸ்ரீபார்த்தசாரதி மற்றும் ஸ்ரீவேங்கடேஸ்வர ஸ்வாமியும் இக்கோயிலில் இடம் பெற்றுள் ளனர்.

☎ 0877–2264592.

### ஸ்ரீ கோதண்டராம ஸ்வாமி கோயில் :

இக்கோயில் திருப்பதி இரயில் நிலை யத்திலிருந்து சுமார் ஒரு கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது. இக்கோயில் ஸ்ரீராமர் லக்ஷ்மணர் மற்றும் சீதை இலங்கையிலிருந்து திரும்பி வரும்போது திருப்பதிக்கு வந்ததின் நினைவாக எழுப்பப்பட்டதாகும்.

☎ 0877–2264584.

### ஸ்ரீ கபிலேஸ்வர ஸ்வாமி கோயில் :

இங்கு அமைந்திருக்கும் சிவன் கோயில் திருப்பதி நகரத்திலிருந்து சுமார் 3 கி.மீ. தொலைவில் உள்ளது. கபிலமஹரிஷி யால் இங்குள்ள சிவலிங்கம் தோற்றுவிக்கப் பட்டதால் இந்த மூலவருக்கு கபிலேஸ்வரர் என்று பெயர் வந்தது. இங்கு உள்ள தீர்த்தமும் கபிலதீர்த்தம் என்றே அழைக்கப்படுகிறது.


☎ 0877– 2264587.

### அலர்மேல்மங்காபுரம் (திருச்சானூர்) :

இது திருப்பதிக்கு 5 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது. இதுவும் பழமை வாய்ந்த புனிதத் திருத்தலமாகும். திருவேங்கடவனின் தேவியான ஸ்ரீபத்மாவதி தாயார் மூலவராக இக் கோயிலில் எழுந்தருளியுள்ளார்.

☎ 0877–2264586.

# வைணவக் குறுக்கெழுத்துப் புதிர் - 68



தொகுப்பு :
**திரு. எஸ். ராஜகுமார், சென்னை, 81249 30259**

புதிருக்கு விடை அறிய 26ம் பக்கம் பார்க்கவும்...

## இடமிருந்து வலம்

4. திருக்கச்சி நம்பிகள் இயற்றிய கிரந்தம்.....(9)
5. அஷ்ட லட்சுமிகளில் ஒருவர்.....(8)
8. குரங்கு கொடியைக் கொண்டவன் அர்ஜுனன். ஆதலால் அவன் பெயர்.......(6)
10. திருப்பாவையின் மொத்த பாசுரங்கள்....(4)
11. ஆந்திராவில் நரசிம்மர் அருள் புரியும் தலங்களில் ஒன்று.....(6)
12. இராமனின் சகோதரி.....(3)
17. விலங்குகளுக்கும் சிவபெருமான் மோட்சம் அளித்த தலம் ...... (6)
20. மகாபாரதப் போர் முடிந்த பிறகு பஞ்சபாண்டவர்களில் அர்ஜுனன் மன அமைதி வேண்டி கேரளாவில் புதுப்பித்த கோயில்.....(7)

## வலமிருந்து இடம்

2. மூலவர் குருவாயூரப்பனின் விக்ரகம் ....(8) கல்லில் வடிக்கப்பட்டிருக்கிறது.
9. சுக்ராச்சாரியார்.......(4) மாறி மகாபலியின் தானத்தை தடுத்தார்.
13. காலச் சூழ்நிலையின் காரணமாக மகாபாரதப் போரில் கௌரவர்களின் படைகளுக்கு முதல் பத்து நாட்களுக்கு தலைமை தாங்கியவர்....(4)
15. ஸ்ரீராமன் வனவாசம் செல்ல கைகேயியை தூண்டியவள்.....(4)
16. திருக்கடல்மல்லை என்னும் திவ்விய தேசம்....(7)
19. நெற்றிக்கண்ணுடன் நரசிம்மர் அருள் புரியும் தலம்.....(10)
21. துருபதனின் மகள்.....(5)

## மேலிருந்து கீழ்


1. நாரதரை .......(8)என்றும் அழைப்பர்.
3. திரௌபதியின் சகோதரன்....(10)
6. மத்திய ரங்கம் என அழைக்கப்படும் ஊர்...(8)
7. முதலில் உதயமான ஏகாதசி....(9)

## கீழிருந்து மேல்

14. தேவர்களுக்கு அமுதம் கிடைக்க வேண்டி மேருமலையைத் தாங்க மகாவிஷ்ணு எடுத்த அவதாரம் .....(4)
18. திருதராஷ்டிரருக்கு நீதி போதனைகளைக் கூறியவர்....(4)

# ஸ்ரீராமனின் திருக்கல்யாண குணங்கள்

9



# வித்3வான்

*அனைத்தையும் எல்லா நேரத்திலும் அறிந்தவர்*

- திரு. உ.வே. வேளுக்குடி கிருஷ்ணன் ஸ்வாமி, சென்னை.


### மாரீசன் பின் சென்றது அறியாமையா?

இராவணனால் ஏவப்பட்ட மாரீசன் எனும் அரக்கன் ஒரு பொன்மான் உருவத்தோடு பஞ்சவடியில் உலாவ, அதனை சீதா தேவி பிடித்துத் தரக்கேட்டாள். லக்ஷ்மணன் தடுத்தும் கேளாமல் அதனை உண்மையான மானாக ஏற்பவர்போல் நம்பி இராமன் அதன் பின் தொடர்ந்தார். இறுதியில் அதன் மேல் அம்பெய்ய, மாரீசன் இராமன் குரலில் “ஹா சீதே! ஹா லக்ஷ்மணே!” என்று அலறி மாண்டான். ஓர் ஐயம் – அனைத்தும் அறிந்த வித்வானான இராமன் மாரீசனிடம் ஏமாந்தது எப்படி? குறுகிய கண்ணோட்டம், இடைக்கால இலக்கு ஆகியவற்றை விட தீர்க்க தர்சனம், நீண்ட கால இலக்கு ஆகியவற்றை உடையவனே வித்வான் எனப்படுகிறான். மாரீசனிடம் ஏமாறாமல் இருந்திருந்தால், உலகுக்கே தீமை செய்து வந்த இராவணனையோ அல்லது அவனுக்கு உதவி புரிந்த மாரீசனையோ அழித்திருக்க முடியாது. ஆகவே இடைக்காலத்தில் விட்டுக் கொடுத்தாலும் நீண்ட காலத்தில் இலக்கை எட்டுபவனே வித்வான் (பேரறிவாளன்).

**கருத்து:**

**இறை அறிவின் இலக்கணம்:**

*கடவுளை முழுவதுமாக அறிந்தேன் என்பவன் அறிவிலி; கடவுளை அறிவுக்கு எட்டாதவர் என்று அறிபவனே அறிவாளி*



### அனுமனின் ஐயம் போக்கிய அறிவு

சீதையைத் தேட சுக்ரீவன் நாற்புறத்திலும் வானரப் படையை அனுப்புகிறான். பிரம்மசாரியான அனுமனுக்கு, இராமன் தன் மனைவியின் பிரிவால் அனுபவிக்கும் துன்பத்தினைப் புரிந்து கொள்ள இயலவில்லை. தெற்கு நோக்கிப் போக வேண்டிய அவர் உத்ஸாஹம் இன்றி அமர்ந்திருந்தார். ஆஞ்சநேயரின் மனப்பாங்கினை அறிந்த இராமன் அவருக்கு சீதையின் பெருமையைப் புரிய வைக்க எண்ணி அவரை அருகே அழைத்து, தன் பெயர் பொறிக்கப்பட்ட மோதிரத்தை அடையாளமாக அளித்தார். அந்த மோதிரத்தின் மகிமையால் எந்தக் குரங்கும் கடலைத் தாண்டியிருக்கும். ஆனால் தேர்ந்தெடுத்து அனுமனிடம் அதனை அளித்தார். மாருதி கடலைத் தாவி சீதையைக் கண்டவுடன் “இந்த மாதரசியைப் பிரிந்து இன்னமும் இராமன் எப்படித்தான் உயிர் வாழ்கிறானோ! இந்த இராமன் அன்பே

**வாசகர்களே...**

ஏழு மலைகள் நிறைந்த திருமலையில் நித்திய வாசம் செய்யும் கலியுக கண்கண்ட தெய்வமான திருவேங்கடவன் தங்களுடைய வாழ்வில் நிகழ்த்திய திருவிளையாடல்கள் அதாவது ஸ்வாமியின் திருலீலைகளை ஸப்தகிரி பத்திரிகையில் வெளியிடுவதற்கு ஏதுவாக அதை எழுதி ஸப்தகிரி அலுவலகத்திற்கு அனுப்புமாறு கேட்டுக் கொள்கிறோம்.

*எங்கள் முகவரி :*

**பிரதான ஆசிரியர்,**
**“ஸப்தகிரி”, தி.தி.தே.,**
**கபிலத்தீர்த்தம் சாலை,**
**திருப்பதி - 517 507.**
**0877 - 2264543, 2264359.**



இல்லாத கல் நெஞ்சனோ!” என்றெல்லாம் எண்ண வைத்தது சீதையின் கற்புநெறி.


கற்றதையும் கேட்டதையும் மட்டுமே ஆராய்பவன் அறிவாளிதான்! ஆனால் கண்ணுக்கு இலக்காகாத உள்ளத்தையும் ஊடுருவிப் பார்ப்பவனே வித்வான் (பேரறிவாளன்).

## குற்றம் பார்ப்பது எதற்கு?

*“வித்வான் விபச்சித் தோஷஜ்ஞ:”* எனும் வாக்கின்படி வித்வான்கள் எப்போதும் பிறர் குற்றமே பார்ப்பர். ஒருவன் தான் எழுதிய கவிதையை ஒரு வித்வானிடம் கொடுத்துப் படிக்கச் சொன்னான். அந்த வித்வான் கவிதையில் எதையோ தேடினார். உடனே புலவர் “ஏதாவது குற்றம் கிடைக்குமா என்று தேடுகிறீரோ” என்றார்.

அதற்கு வித்வான் “இல்லை! ஏதாவது நல்லது கிடைக்குமா என்று தான் தேடுகிறேன்” என்றாராம்! இப்படி வித்வான்கள் குற்றம் பார்த்து கைவிடுவர். இராமனும் குற்றம் பார்ப்பார். ஆனால் கைவிட அல்ல; ஏற்றுக் கொள்ளவே!

வசிஷ்டர் போன்ற குற்றமில்லாதவர்களுக்கு அருள் புரிந்தால் அதுவா இராமனுக்குப் பெருமை? வேடுவன் குகன், வானரன் சுக்ரீவன், அரக்கன் விபீக்ஷணன் போன்ற குறை உள்ளோர்க்கும் அருளியதன்றோ இராமனுக்குப் பெருமை! மழைக்காலம் முடிந்து சீதையைத் தேடி வருகிறேன் என்று உறுதி அளித்த சுக்ரீவன், அதனை மறந்து போனான்.



அவனுக்கு தண்டனை அளிக்க வேண்டும் என்று வெகுண்டெழுந்த லக்ஷ்மணனை சமாதானப்படுத்திய இராமன், “நீ போய் சுக்ரீவனைக் கண்டு “வாலி போன மார்க்கம் இன்னும் மூடப்படவில்லை; அதில் விழுந்து விடாதே” என்று மட்டும் சொல்லி வா என்று கூறி அனுப்பினார். சுக்ரீவனின் குற்றத்தை உணர்த்தியதே அவனை மன்னித்து ஏற்றுக் கொள்ளத் தான்! நம்மிடம் நிறைகள் இல்லாதிருந்தும் பிறர் குறைகளையே கண்டு வெறுப்புக் காட்டுவதையாவது தவிர்க்கலாமே!

*வளரும்...*

# ஸம்ஸ்க்ருதம் அறிவோம்

## पञ्चदशः पाठः பாடம்-15

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| तूष्णीम् | = வெறுமனே | किन्तु | = ஆனாலும் | अस्मत् | = எங்கள், எங்களால் |
| तर्हि; चेत् | = ஆனால் | गृहम् | = வீடு, வீட்டினுடைய | युष्मत् | = உங்கள், உங்களால் |
| कुर्वन्तु | = செய்வீர்களாக | कुरुत | = செய்வான் | करवाम | = செய்வோமாக, செய்வீர்களாக |

### வினாக்கள்

1. तत्र किमर्थम् आसीः?
2. अहं तूष्णीम् आसम्।
3. तर्हि त्वं पाकं कुरु।
4. नोचेत् वयं करवाम।
5. चेत्किम्?
6. अस्मद्गृहे शाकानि न सन्ति।
7. ते कुत्र सन्ति वा खलु?
8. ते युष्मद्गृहे भोजनं कुर्वन्ति।
9. कुर्वन्ति चेत् कुर्वन्तु।
10. यूयं तूष्णीं स्त।

1. உங்கள் வீட்டில் யார் இருக்கிறார்கள்?
2. எங்கள் வீட்டில் எல்லா பிள்ளைகளும் குளித்துக் கொண்டிருக்கிறார்கள்.
3. அவர்கள் சமையல் செய்வார்களாக.
4. நான் சமையல் செய்தேன்.
5. ஐயோ நீங்கள் அங்கு வெறுமனே இருந்தீர்களா?
6. சிறிது (கொஞ்சம்) சமையல் செய்வான்.
7. நான் முதலில் பலவிதமாக செய்தேன்.
8. ஆனாலும் அவர்கள் எங்கள் வீட்டில் இல்லை
9. நீங்கள் இப்போது குளிக்க வேண்டாம்.
10. முதலில் நாங்கள் குளியல் செய்வோம்.

### விடைகள்

1. அங்கு எதற்கு இருந்தாய்?
2. நான் வெறுமனே இருந்தேன்.
3. ஆனாலும் நீ சமையல் செய்வாயாக.
4. இல்லாமையால் நாங்கள் செய்வோம்.
5. ஆனால் என்ன?
6. எங்கள் வீட்டில் காய்கறி இல்லை.
7. அவர்கள் எங்கிருக்கிறார்களோ என்னவோ?
8. அவர்கள் உங்கள் வீட்டினில் சாப்பாடு செய்து கொண்டிருக்கிறார்கள் (சாப்பிடுகிறார்கள்)
9. செய்வதானால் செய்வாயாக.
10. நீங்கள் வெறுமனே இருங்கள்.

1. युष्मद्गृहे के सन्ति?
2. अस्मद्गृहे सर्वे बालकाः स्नानं कुर्वन्ति।
3. ते पाकं कुर्वन्तु।
4. अहं पाकम् अकरवम्।
5. अहो! यूयं तत्र तूष्णीम् आस्त किम्?
6. किञ्चित् पाकं कुरुत।
7. अहम् आदौ अनेकधा अकरवम्।
8. किन्तु ते अस्मद्गृहे न सन्ति।
9. यूयम् इदानीं स्नानं न कुरुत।
10. आदौ वयं स्नानं करवाम।

தெலுங்கு மூலம்: மகாமகோபாத்யாய காசி கிருஷ்ணாசாரி, தொகுப்பு: மகாமகோபாத்யாய சமுத்ரால லக்ஷ்மணய்யா
தமிழாக்கம்: டாக்டர் கே.கே.ஏ.ரங்கராஜன்

# வாஸ்து சாஸ்திரம்

முனைவர் ஆ.முத்து கிருஷ்ண ஆச்சாரி,
சென்னை,
9444392595

*சென்ற இதழின் தொடர்ச்சி...*

**ஈசான மூலை :**

ஈசான மூலை (வடகிழக்கு) வழியே சகல சௌபாக்கியங்களும் வீட்டிற்குள் வருகின்றது. எனவே இம்மூலையை சுத்தமாக வைக்க வேண்டும். ஈசான மூலையில் பூஜையறை, குழந்தைகள் படிப்பறை, படுக்கையறை, வயதுமுதிர்ந்தவர்களின் படுக்கையறைகளை அமைக்கலாம். ஈசான மூலையை அடைப்பது போல் நிலைப் பேழை வைக்கக்கூடாது. அம்மி ஆட்டுக்கல், விறகு, சுமை, தேவையற்ற பழைய பொருட்களையும் கழிப்பறை, குளியலறை, செப்டிக்டேங்க், துணி துவைக்கும் கல் போன்ற வைகள் இருக்கக்கூடாது. ஈசான மூலையில் பரணில் பொருட்களை வைக்கக் கூடாது. வீட்டின் ஈசான மூலை கீழ்நிலைத் தொட்டி, கிணறு போன் றவை அமைக்க வேண்டிய இடம். ஈசான மூலை யில் நீரோட்டம் இல்லாத போது, தென்மேற்கு, தென் கிழக்கு தவிர்த்து கிணறு தோண்டவும், பிறகு ஈசான மூலையில் கீழ்நிலைத் தொட்டி அமைக்கவும். இவை நம் பண விரயத்துக்கு தடை போடும். வடகிழக்கு மற்றும் வடக்கு திசைகளில் கனமான பொருட்களை, பீரோவை வைக்கக் கூடாது.

பூஜை பொருட்களை அல்லது கடவுள் படங்களை ஏதாவது உத்திரம் அல்லது நிலை அடுக்கின் கீழ் வைக்கக் கூடாது. அப்படி வைத்தால் அது மன அழுத்தத்தை தரும்.

**வாயிற்படி அறைகளின் அளவு :**

வாயிற்படி, வீட்டின் தலைவாயிற்படி முக்கிய மாக கவனிக்கத்தக்க அம்சமாகும். பொதுவாக கிழக்கு, வடக்கு திசைகளில் தலைவாசல் இருப்பின் நலம். தெற்கு, மேற்கு வாசல் படி இருப்பின் கொல்லைப் புறம், வடகிழக்கு தென்கிழக்காக அமைந்து ஈசான மூலையும், அக்னி மூலையும் பலம் இழக்க பழுதுபட நேரிடும்.

மனையடிப்படி அறைகளின் உட்கூடு அளவுகளின் 7,9,12,13,14,15 கண்டிப்பாகத் தவிர்க்கப்பட வேண்டும். முழுமையான அளவுகளில் உட்கூடு அமைவது அவசியம். இடம் வீணாகக் கூடாது என 8,5,7,5,10,5 போன்ற அளவுகளைத் தவிர்க்கவும். மாடிப் படிகளுக்கு



# கண்ணன் கருத்துரை



*யத்ருச்சாலாப ஸந்துஷ்டோ த்வந்த்வாதீதோ விமத்ஸர: ।*
*ஸம: ஸித்தாவஸித்தெள ச க்ருத்வாபி ந நிபத்யதே ॥*

(4-22)

**ஆண்டவன் அருளாலும், நல்வினை வாய்ப்பாலும் எதிர் பாராமல் கிடைத்தவற்றில் திருப்தி அடைந்து குளிர், வெப்பம் முதலான இருமைகளுக்கு அடிமை ஆகாமலும், பொறாமை இல்லாமலும், எடுத்த செயலில் வெற்றி பெற்றாலும் பெறாவிட்டாலும் அனைத்தையும் சமமாகக் கருத வல்லவன் கர்மம் செய்தாலும் அது அவனைக் கட்டுப்படுத்தவது இல்லை.**

தொகுப்பு :
பேராசிரியர் அமரர் பொன் சௌரிராஜன்,
திருப்பதி.



அடியில் இடத்தைப் பொருத்து சாமான் வைப்பறை வைக்கலாம். மாடிப்படிக்கட்டுகள் வடக்கு, வட கிழக்கு, தென்கிழக்கு, கிழக்கு பக்கங்களை அடைக்கும் படிகட்டுகள் கட்டக் கூடாது. தெற்கிலிருந்து வடக்காகவும், மேற்கிலிருந்து கிழக்கு நோக்கியும் செல்லும்படி மாடிப்படிக்கட்டுகளை அமைத்தல் நலம்.



**தொழில் வாஸ்து :**

தொழில் நிறுவனங்கள், கடைகளுக்கும் வாஸ்து பார்க்க வேண்டுமா என்ற கேள்வி இயல்பானது. தொழிற்சாலைகள் முதல் ஒரு சிறிய கடை வரை வாஸ்துபடி அமைந்தால் அதன் வளர்ச்சி அபரிமிதமாக இருப்பதை அனுபவப்பூர்வமாக கண்டு உள்ளோம். அலுவலகத்தில் எந்த திசையில் இருந்து வரும் வாடிக்கையாளர்களை எதிர் நோக்க வேண்டும். நாம் எந்த திசையில் அமர வைண்டும் என்று பார்ப்போம். வாடிக்கையாளர்கள் உள் நுழையும் போது அவர்களுக்கு முதுகைக்காட்டிய படி அமரக்கூடாது. அடுத்து அவர்கள் வடக்கில் அமர்ந்து நாம் தெற்கே அமரக் கூடாது.

தென் மேற்கில் அமர்ந்து கிழக்கு நோக்கி இருக்கலாம். வடக்கில் இருந்து கிழக்கிலிருந்து வரும் வாடிக்கையாளர்களை தெற்கிலிருந்து வரும் வாடிக்கையாளர்களை வரவேற்கலாம். நமக்குப் பின் நம் முன்னோர்களின் படங்களை வைக்கலாமா என்ற சந்தேகம் சிலருக்கு உண்டு. தாராளமாக வைக்கலாம். நமக்குப்பின்னே அழகிய இயற்கைக்




ஸ்ரீகாஞ்சீ பூர்ணர், காஞ்சீ முனி, பேரருளாள தாசர், கஜேந்திர தாசர், திருக்கச்சி நம்பிகள், பார்க்கவ ப்ரியர், கமலாபதி நந்தனர், ராமாநுஜ மாந்யர் என பல நாமங்களும் இவருக்கு உண்டு. ஆசார்ய நிர்வாஹகரான ஆளவந்தார் திருவடிகளிலே ஆச்ரயித்தவர். அத்திகிரி அண்ணலுக்கு திருவாலவட்ட கைங்கர்யம் புரிந்து பலரின் சந்தேகங்களை எல்லாம் தேவப்பெருமாளிடம் விண்ணப்பித்து அப்பெருமாளின் திருவுள்ளத்தை எல்லோருக்கும் அருளிச் செய்தவர்.

காட்சிகள், மலைகள், ஓடும் குதிரை படங்களை வைக்கலாம். நம் அலுவலகத்தில் வடகிழக்கு மூலையில் தண்ணீர் விட்டு அதில் மலர்களைப் போட்டு வைக்கலாம். மணிக்கொடி போன்ற நிழலில் வளரும் செடிகளை வைக்கலாம். பணப்பெட்டி அல்லது பீரோ தென் மேற்கில் இருப்பது மிக நல்லது. கல்லாப்பெட்டியை கைக்குலாவகமாக வைத்துக் கொண்டு தென்மேற்கில் அலமாறி வைத்து பயன் படுத்தலாம். தென்கிழக்கு, வடகிழக்கு, வடமேற்கில் அலமாறி வைப்பதைக் கண்டிப்பாக தவிர்க்கவும்.

### வாஸ்து குறைகளைப் போக்கும் சிறு பரிகாரங்கள்:

ஈசான மூலையில் (வடகிழக்கு) சிறிய பாத்திரத்தில் தண்ணீர் விட்டு வைத்தல், வண்ண மீன் தொட்டி வைத்தல், பசுமையான செடிகளை வளர்த்தல் (மணிக்கொடி போன்றவை), மஞ்சள் குழைத்து வீட்டுக் கதவு சன்னலில் சுவஸ்திக், ஓம், சூலம் போன்ற குறிகளை இடல், மாவிலைத் தோரணம் கட்டல் அவ்வப்போது பஞ்ச கவ்யத்தை பசுவின்பால், தயிர், நெய், சாணம், கோமியம் ஆகிய வற்றின் கலவை வீட்டை சுற்றியும் உள்ளேயும் தெளித்து விடல் இனிமையாக ஒலிக்கும் "வின்ட்செம்" களை வீட்டினுள் கட்டி விடுதல், பிரமீடுகளை வைத்தல், கண்ணாடியை வீட்டின் தலை வாயிற் படியின் மேல் மாட்டி விடல் தகுந்த மூலைகளில் தக்க பொருட் களை மட்டும் வைத்தல்.

### நவக்கிரகங்களும் திசைகளும் :

சுக்கிரனின் ஒளியானது கிழக்கே இந்திர மூலையிலும், செவ்வாயின் ஒளியானது தென் கிழக்கே அக்னி மூலையிலும், கேதுவின் ஒளியானது தெற்கே எமன் மூலையிலும், புதனின் ஒளியானது தென் மேற்கே நிருதி மூலையிலும், சந்திரனின் ஒளியானது மேற்கே வருண மூலையிலும், ராகுவின் ஒளியானது வடமேற்கே வாயு மூலையிலும், குருவின் ஒளியானது வடக்கே குபேர மூலையிலும், சனியின் ஒளியானது வடகிழக்கே ஈசான்ய மூலையிலும் பதிகின்றன. சூரியனின் ஒளியாகப்பட்டது அண்டம் முழுவதும் பரவியிருக்கக் கூடியது. இந்த கிரகங்களின் ஒளியை தான் நாம் கிரக பார்வை எனக் கூறுகின்றோம்.

## வைணவக் குறுக்கெழுத்துப் புதிர் - 68க்கான பதில்

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 தி | | | ம் | ன | ச | ஞ் | அ | ள | தா | 2 பா | 3 தி |
| ரி | | 4 தே | வ | ரா | ஜ | அ | ஷ் | ட | க | ம் | ரு |
| லோ | 5 ச | ந் | தா | ன | ல | ட் | சு | மி | 6 சி | 7 உ | ஷ் |
| 8 க | பி | த் | வ | ஜ | ன் | க | பா | ண் | 9 வ | த் | ட |
| ச | | | ம் | | 10 மு | ப் | ப | து | ச | ப | த் |
| ஞ் | | | 11 ம | ங் | க | ள | கி | ரி | மு | த் | து |
| 12 சா | ந் | தை | ர் | ம | ஷ் | 13 பீ | | | த் | தி | யு |
| ரி | | ர் | 14 கூ | | ரை | த | ந் | 15 ம | தி | ஏ | ம் |
| | ம் | ர | பு | லி | ப | கா | 16 ம | | ர | கா | ன |
| | | து | 17 ஸ்ரீ | கா | ள | ஹ | த் | தி | ம் | த | ன் |
| | ல் | 18 வி | கோ | ள் | மா | ரு | பெ | க | ங் | 19 சி | |
| 20 தி | ரு | வா | ர | ன் | வி | னை | | தி | ப | ரௌ | 21 தி |


திருமலை திருப்பதி தேவஸ்தானம்
திருமலையப்ப ஸ்வாமி
தெப்போத்ஸவம்
13-03-2022 முதல்
17-03-2022 வரை



13-01-2022 அன்று வைகுண்ட ஏகாதசியை முன்னிட்டு திருமலை ஆலயத்தை பூக்கள் மற்றும் மின் விளக்குகளால் அலங்கரிக்கப்பட்ட திருக்காட்சி

வைகுண்ட ஏகாதசியை முன்னிட்டு திருமலை மாடவீதிகளில் உபயநாச்சிமார்களுடன் திருமலையப்ப ஸ்வாமி தங்கத்திருத்தேரில் உலா வந்த திருக்காட்சி



# திருமலை திருப்பதி தேவஸ்தானம்



27-01-2022 அன்று "நமாமி கோவிந்தா" என்ற பெயரில் பஞ்சகவ்ய ஆதார பொருட்களின் வாயிலாக தயாரிக்கப்பட்ட பல்வேறு ஆயுர்வேத பொருட்கள் விற்பனையை துவக்கி வைத்த தி.தி.தே. பொறுப்பாண்மைக்குழுத்தலைவர் திரு. ஒய்.வி. சுப்பாரெட்டி அவர்கள். இந்நிகழ்ச்சியில் தி.தி.தே. செயலாட்சித் தலைவர் டாக்டர் கே.எஸ். ஜவஹர் ரெட்டி ஐ.ஏ.எஸ். அவர்கள், தி.தி.தே. கூடுதல் செயலாட்சித் தலைவர் திரு. ஏ.வி. தர்மா ரெட்டி ஐ.டி.இ.எஸ். அவர்கள், தி.தி.தே. இணைச்செயலாட்சித்தலைவர் திரு. வி.வீரபிரம்ஹம் ஐ.ஏ.எஸ். அவர்கள், முதன்மை பாதுகாப்பு மற்றும் கண்காணிப்பு அதிகாரி திரு.கோபி நாத் ஜெட்டி அவர்கள், திருப்பதி மேயர், திருப்பதி சட்டமன்ற உறுப்பினர் மற்றும் உயர் அதிகாரிகள் பங்கு கொண்டனர்

















05-01-2022 அன்று தி.தி.தே. எஸ்.வி. சங்கீதம் மற்றும் நாட்டிய கல்லூரிக்கு வருகை புரிந்த காஞ்சி பீடாதிபதி ஸ்ரீஸ்ரீஸ்ரீ விஜயேந்திர சரஸ்வதி ஸ்வாமிகள். உடன் தி.தி.தே.இணைச்செயலாட்சித் தலைவர் (திருப்பதி) திருமதி சதா பார்கவி ஐ.ஏ.எஸ். அவர்கள்



21-01-2022 முதல் 27-01-2022 வரை திருச்சானூர் ஸ்ரீபத்மாவதி தாயார் ஆலயத்தில் வெகு வைபவமாக நடைபெற்ற "நவகுண்டாத்மக ஸ்ரீ யாக"த்தின் பூர்ணாஹுதி திருக்காட்சி





26-01-2022 அன்று 73வது குடியரசு தின விழாவில் உரையாற்றும் தி.தி.தே. செயலாட்சித் தலைவர் டாக்டர் கே.எஸ். ஜவஹர் ரெட்டி ஐ.ஏ.எஸ். அவர்கள்



26-01-2022 அன்று 73வது குடியரசு தின விழாவில் கொடியேற்றி அணிவகுப்பு மரியாதையை ஏற்கும் தி.தி.தே. செயலாட்சித்தலைவர் டாக்டர் கே.எஸ். ஜவஹர் ரெட்டி ஐ.ஏ.எஸ். அவர்கள். இந்நிகழ்ச்சியில் பங்கு கொண்ட தி.தி.தே. கூடுதல் செயலாட்சித் தலைவர் திரு. ஏ.வி. தர்மா ரெட்டி ஐ.டி.இ.எஸ். அவர்கள், தி.தி.தே. இணைச்செயலாட்சித்தலைவர்(திருப்பதி) திரு. வி.வீரபிரம்ஹம் ஐ.ஏ.எஸ். அவர்கள், முதன்மை பாதுகாப்பு மற்றும் கண்காணிப்பு அதிகாரி திரு. கோபிநாத் ஜெட்டி அவர்கள், கூடுதல் பாதுகாப்பு மற்றும் கண்காணிப்பு அதிகாரி திரு.சிவகுமார் ரெட்டி அவர்கள், எஸ்.வி.பி.சி. முதன்மை நிர்வாக அதிகாரி திரு. சுரேஷ் குமார் அவர்கள், நிதி ஆலோசகர் மற்றும் முதன்மை கணக்கு அலுவலர் திரு. ஓ. பாலாஜி அவர்கள் மற்றும் உயர் அதிகாரிகள்

ஆழ்வார்களுள் இராமாவதாரமான பூர்ணாவதார அனுபவத்தை மிகவும் விரும்பியவர் குலசேகரப் பெருமாள். இக்காரணம் கொண்டே “பெருமாளை அறியாதார் பெருமாளை அறியாதாரே” என்கின்ற பழமொழி தோன்றிற்று. அதாவது குலசேகரப் பெருமாளை அறியாதவர்கள் இராமபிரானையும் அறியாதவர்களே என்று பொருள்படுகிறது. இப்பெருமையையுடைய குலசேகரப் பெருமாள் அருளிச் செய்த பெருமாள் திருமொழியின் 4வது பதிகமான ஊனேறு செல்வத்தின் வைபவத்தை இக்கட்டுரையின் மூலமாக அனுபவிக்க முயல்வோம்.

முதற் பாசுரத்திலே சரீரம் வேறு ஆத்மா வேறு என்று பகுத்து அரிகைக்குத் தகுதியான மனிதப் பிறவியை எடுத்த பின்பும், குடிமக்களைக் காக்க வேண்டிய கடமையையுடைய இந்த அரசப் பிறவி பகவத் பாகவத கைங்கர்யங்களுக்கு தடையாய் இருக்கையாலே எனக்குத் தேவையில்லை. காரணம் மாம்ஸமாகிற கொழுப்பு அதிகரிக்கச் செய்கின்ற செல்வமுடைய தன்மையையும் இம்மானிடப் பிறவியையும் நான் விரும்ப மாட்டேன். அப்போது உமக்குத் தேவையானது எது? என்று கேட்க அதற்கு பதிலளிக்கிறார். நப்பின்னை பிராட்டியை மணம் புரிவதற்காக ஏற்படுத்தப்பட்ட தடை கல்லாக இருந்த ஏழு எருதுகளை வென்ற எம்பெருமானுக்கு அடிமை செய்வதையே விரும்புகிறேன். அவ்வடிமையையும் இளைய பெருமாள் போலவும், நம்மாழ்வார் போலவும் எல்லா தேசங்களிலும், எல்லா காலங்களிலும், எல்லா விதங்களிலும் எம்பெருமான் உகப்புக்கான அடிமையை ஸ்ரீபாஞ்ச ஜன்ய ஆழ்வான் போலே நித்ய கைங்கர்யம் கொள்ளும் இடமான திருவேங்கடத்துக் கோனேரியில் தேடி ஆத்ம வேறுபாடு தெரியாததாய், பிறரைக் காப்பதற்கு பயன்படாததாய், பாபத்தினால் விளைந்த பிறவியான பறவையாகப் பிறந்தாலும் போதும். திருமலையின் எல்லைக்குள்ளேயே பிறக்க வேண்டும் என ஆசைப்படுகிறார். கீழே, உடல் பிறவி யான் வேண்டேன் என்றவர், “குருகாய்ப் பிறப்பேனே” என்பதனாலே, திவ்ய தேச வாசத்தை விரும்பி அவ்விடத்தில் பிறப்பதை பிறவியாகவே ஆழ்வார் கருதவில்லை என்ற கருத்து மேலோங்கி நிற்கிறது.

இரண்டாம் பாட்டினாலே இவ்வுலக போகங்கள் வேண்டாம் என்றார். முதற்பாட்டில் இவ்வுலக போகங்களைக் காட்டிலும் நீடித்திருப்பவையாய் ஒரு அளவாக இராமல் பேரளவுடையதாய் இருக்குமதே ஸ்வர்க்கத்தின் போகம். அந்த ஸ்வர்க்க போகம் உமக்கு வாய்க்கப் பெற்றால் என் செய்வீர்? என்றும் கேள்வி எழ, அரம்பை, ஊர்வசி, மேனகை முதலானவர்கள் நடமாடக் கூடிய இடமான ஸ்வர்க்கமும் அவர்கள் இவரைச் சூழ்ந்து கொள்வதும் நம் வசப்படுத்த நினைத்தாலும் அப்போகங்களை யான் விரும்ப மாட்டேன். அப்பொழுது எத்தை விரும்புகின்றீர் எனக் கேட்க, தேன் மிகுந்த பூக்களோடு கூடிய சோலைகள் நிறைந்த திருவேங்கட மலையிலுள்ள சுனையில் ஒரு மீனாகப் பிறக்க ஆசைப்படுகிறார். குருகாய் பிறந்தால் அதற்குண்டான சிறகை அடித்துக் கொண்டு திருமலையின் எல்லையைத் தாண்டிக்

# பொன்மலைமேல் ஏதேனும் ஆவேனே





கொண்டு செல்லக்கூடிய தகுதியுண்டு. அவ்வாறு தாண்டிப்போக முடியாமல் திருமலையில் சுனையி லேயே பிறந்து, வாழ்ந்து, அழியும் மீனாகப் பிறக்க வேண்டும். அதுவும் உடனே பிறக்க வேண்டும் என்பதில்லை. அடுத்த ஜன்மத்திலே மீனாய்ப் பிறக்கை உறுதி என்பது ஏற்பட்டால் போதும் என்கிறார்.

மூன்றாம் பாட்டிலே ஒன்றோடொன்று பின்னியிருக்கும் சடையையுடையவனான சிவனும், முன்னே சொல்லப்பட்ட சிவனையும் பிறப்பித்த பிரம்மாவும், எம்பெருமான் உள்ளே இருந்து கொண்டு நடத்தும் இந்திரனும், ஒருவருக்கொருவர் நெருக்கிக் கொண்டு புகப் பார்த்தாலும் புக முடியாத பூலோக வைகுண்டமாகிற நீண்ட வாசலிலே, மின்னலை வளைத்தாற்போல் ஒளி வீசும் படியானதாய், எப்போதும் சுற்றிக் கொண்டே இருக்கும் வாயையுடையதான சக்கரத்தாழ்வாரை தன் கைகளிலே தரித்திருக்கும் வேங்கடக்கோன் சந்நிதியில், அவன் திருப்பவளவாயிலிருந்து உமிழ்ந்தருளும் நீரையேந்தும் பொன் வட்டில் பிடிக்கும் பணியைச் செய்ய ஆசைப்படும் இக்குலசேகரரை மட்டும் உள்ளே விடு என்னும் நியமனத்தைப் பெரும் ஆசையாலே, அந்தரங்க கைங்கர்யத்தைச் செய்யும் அடியார்கள் திரளிலே தாமும் ஒருவராய்ப் பெறப் போகும் பாக்கியத்தைப் பெறக்கடவேணும் என ஆசைப்படுகிறார்.

நான்காம் பாட்டிலே, ஒளி பொருந்திய பவளங்களின் மூலமாக உலாவும்படியான அலை களையுடையதாய், அவ்விடத்தை அடைந்தவர் களுடைய களைப்புத் தீரும் படியான திருப் பாற்கடலில் "கிடந்ததோர் கிடக்கை" என்று சொல்லலாம்படி சயனித்திருக்கும் அழகையுடையவ னான எம்பெருமானுடைய கழலிணைகளை அங்கு சென்று பற்ற முடியாது. அக்குறை தீர நம்மாலே கண்களால் காணலாம் படியான திருமலையிலே நின்றருளி காட்சி கொடுக்கிறான். இதனால் திருப்பாற்கடலை விடவும் திருமலையே நமக்குத் தேவை என்கிற அர்த்தம் உள்ளுறை பொருளாகக் கிடைக்கிறது. இப்பேற்பட்ட வேங்கடத்துள் செண்பக மரமாய் நிற்கும் செல்வம் அடியேனுக்கு வேண்டும். இம்மரத்திலிருந்து பூக்கும் செண்பகப் பூக்களை திருவேங்கடமுடையான் சாற்றிக் கொண்டு அழகுற சேவை சாதிப்பான் என்றருளிச் செய்கிறார்.

ஐந்தாம் பாட்டிலே, பார்த்தவர்கள் அனைவரும் நடுங்கும் படியாக மதம் பிடித்துத் திரிய முடியாதபடி கம்பத்தில் கட்டுப்பட்டிருக்கும் யானையின் மீது சாதாரண மனிதர்களால் ஏற முடியாது. ஆனால் அதனை தன் சொல்வழிப்படி நடத்தும் மாத்தன் வார்த்தைக்குக் கட்டுப்பட்டு ராஜாக்களைத் தம்மீது ஏறியிருக்க விடும்படியான யானைகள். (உள்ளுறைப் பொருளில் யானைகள் என்பது எம்பெருமானையும், அவனை வழிநடத்தும்படியான மாத்தன் இடத்தில் ஆழ்வார்களையும் குறிக்கும்). யானையின் மீது அமர்ந்திருக்கும் பெருமையும் அரசர்குரிய போகங்களும், செல்வமும், அரசாட்சியும் அடியேனுக்கு தேவையில்லை. திருமலையிலேயே முளைத்து அங்கேயே காய்ந்து போய் தூணாக நிற்கும் மரமாக ஆசைப்படுகிறார்.

திருமலையில் நிற்பதே போதும். எவருக்கும் பயன்பட வேண்டும் என்கிற அவசியமில்லை.

இவ்வாறு திருமலையில் காய்ந்த மரமாக பயனற்று இருப்பதுவும் பல பிறவிகளில் பண்ணிய புண்ணியத் தின் பயன் என்று நினைக்கும் படியான பெருமையை உடையவரன்றோ குலசேகரப் பெருமாள்.

ஆறாம் பாட்டில் குலசேகரர் இராஜாவான படியாலே இராஜாக்களுக்கு உண்டான இன்பங்களை அனுபவித்தல் பலபடியாகவுள்ளது. அதில் ஒன்று சபா மண்டபத்தில் நாட்டியத்தைக் காண்பது. ஆனால் இவருக்கோ தேவ மாதர்களான ஊர்வசி, அரம்பை, மேனகை முதலானவர்களே வந்து ஆடல்களையும் பாடல்களையும் ஆடினாலும் பாடினாலும் யான் விரும்ப மாட்டேன் என்றும், எதை விரும்புவேன் என்றால், ***''தென்னா தெனாவென்று வண்டு முரல் திருவேங்கடத்து''*** என்று ஸ்வாமி நம்மாழ்வார் அருளிச் செய்தபடியே வண்டுக் கூட்டங்கள் பண்களைப் பாடுவதுபோல் ரீங்காரம் செய்யும் திருமலையிலே தனக்குத் தானே ஒப்பான பொன் போன்ற சிகரமாக ஆக வேண்டும் என விரும்புகிறார்.

ஏழாம் பாட்டிலே ஆகாசம் முழுவதும் சந்திரன் மட்டுமே தன் ஒளிக்கற்றையை வீசுவதுபோல், உலகனைத்தையும் தன்னுடைய திருவெண் கொற்றக் குடையின் கீழே ஒதுங்கும் படியாகவும், நட்சத்திரக் கூட்டங்கள் எல்லாம் சந்திரனை அண்டை கொண்டிருப்பது போலே மற்ற எல்லா அரசர்களைக் காட்டிலும் தலை சிறந்தவனாகவும், அவ்வனைவரும் வந்து பணியும்படியான "ராஜாதி ராஜஸ் ஸர்வேஷாம்'' என்னும்படியான நிலைமையும் செல்வங்களும் என் கண்களுக்கு ஒரு துளியும் புலப்படுவதில்லை. அடியேன் விரும்புவதோ தேன் மிகுந்து பூக்களோடு கூடின பொழில்களையுடைய திருமலை மேல் ஓரிடத்தில் தோன்றி மற்றோரிடத்தில் வற்றிப்போகும் காட்டாறாய் இருக்க வேணும் என விரும்புகிறார்.

எட்டாம் பாசுரத்தில் ஜடையோடு கூடி இருந்தாலும் இன்பத்தில் விருப்பமுடையவன் என்பதைக்காட்டும்படி சந்திரகலையை தரித்துக் கொண்டிருக்கும் சிவனும், அவனுக்கும் தந்தையான பிரம்மாவும், பிரம்மாவுக்கும் ருத்திரனுக்கும் அடுத்த படியாக செல்வமுடைய காரணத்தினால் அவர்களோடு ஒரு சேரப் படிக்கப்படும் இந்திரனும் , அவரவர்களுடைய பதவிகளுக்குத் தகுந்தபடி பலவிதமான யாகங்களைச் செய்து அதன் பலனாக அந்த அந்த பதவிகளைத் தரும்படியானவன் எம்பெருமானே என்று வேதத்தாலே போற்றப் படுபவன். அவனே திருமலையில் கோயில் கொண்டுள்ளான். அவன் இருக்கும் இடமோ பரிமளம் மிகுந்து குளிர்ந்த சோலைகளையுடைய திருமலை. அங்கே எப்போதும்



## நோய் தொற்று தடுப்பு முறைகள்

- தவறாமல் கோவிட் நிபந்தனைகளை கடைப்பிடித்தல் வேண்டும்.
- முகக்கவசம் தவறாமல் அணிந்திருத்தல் வேண்டும்.
- பயன்படுத்திய முகக்கவசங்களை அதற்குரிய குப்பைத் தொட்டியில் போடவும்.
- சானிடைசர் தவறாமல் உபயோகித்தல் வேண்டும்.
- இடைவிடாமல் 20 நிமிடத்திற்கு ஒருமுறை கைகளை கழுவுதல் வேண்டும்.
- கூட்டமாக எங்கும் இருத்தல் கூடாது.
- சமூக இடைவெளியை கடைபிடித்தல் வேண்டும்.
- தவறாமல் இரண்டு தவணை தடுப்பூசிகளை போட்டுக்கொள்ள வேண்டும்.








ஸ்ரீவைஷ்ணவர்களுடைய பாதத் தூளி படும் மலையேறும் நிலையான படிகளாய் இருக்க வேணும் என விரும்புகின்றார்.

ஒன்பதாம் பாட்டில் தன் திருவடிகளில் சரணாகதி பண்ணினவர்களுக்கு அவரவர்கள் செய்த பாபங்களால் விளைந்தவைகளை, அத்திருவேங்கட முடையானைத் தவிர மற்றொருத்தராலும் தீர்க்க முடியாதவைகளான வல்வினைகளையும், அவ்வல்வினைகளினால் ஏற்படும் ஸம்ஸாரத் தொடர்பைத் தீர்த்துக் கொள்வதற்கு சேதனர்களுக்கு புருஷகாரமாகிய சிபாரிசு செய்யும் பெரிய பிராட்டியரோடு கூடியிருப்பது மட்டுமல்லாமல், அடியவர்கள் விஷயத்தில் மிகவும் ப்ரீதியுடையவனாகத் திகழ்கின்றான். தனக்காக செய்யும் கைங்கர்யங்கள் சிறந்தவையல்ல. எம்பெருமான் திருவுள்ள உகப்புக்காகச் செய்யும் கைங்கர்யங்களே சிறந்தவை என்னும் அடிப்படையான அர்த்தம் காட்டப் பெறுகிறது.

பத்தாம் பாட்டில், இந்திரனுடைய போகம் மட்டுமில்லை. மேலேயுள்ள தேவலோகங்களையும் என் குடைக்கீழ் ஆளும்படியாக அரசாட்சி செலுத்தியும் அனைத்து வித போகங்கள் எல்லாம் கிடைத்தாலும் அவற்றில் எனக்கு ஆர்வமில்லை. எது தேவை எனக் கேட்க, சிவந்த பவளம் போன்ற நிறத்தோடு கூடிய வாயையுடைய திருவேங்கடமுடையானுடைய திருமலையிலே எத்தனை தாழ்ந்த பொருளாகவும் ஆக ஆசைப்படுகிறார். இந்த இடத்திற்கு பொருள் அருளிச் செய்த திருமலை அநந்தாழ்வான் என்னும் ஆசாரியர், இதன் கருத்து என்னவெனில் கீழ்ப்பாட்டுகளில் ஆசைப்பட்டது எம்பெருமானுக்கு அடிமைப் பட்டிருக்கும் வஸ்துக்களையே அவ்வாறான பொருட்களில் வேறுபட்டதாய், அடிமை கொள்ளும் பொருளான திருவேங்கடமுடையான் திருமேனியாகவே ஆவது சேதனனுடைய ஸ்வரூபத்துக்குத் தகுந்ததன்று. இக்காரணத்தினால் வேறு பொருள்களாக இல்லாவிட்டாலும், இதுவாவது கிடைக்க வேண்டும் என ஆசைப்படுகிறார். அவ்வாறாக பொருள் கொள்ளாமல் கூரத்தாழ்வானுடைய திருக்குமாரரான ஸ்ரீபராசர பட்டர் “அடியேனும் அறிய வேண்டாம்; திருவேங்கடமுடையானுக்கும் தெரிய வேண்டாம்; காண்பவர்களுக்கும் தெரிய வேண்டாம்; திருமலையில் இருக்கும் ஏதாவது ஒரு பொருளாக ஆனாலே போதும்” என்றருளிச் செய்வர்.

ஈற்றுப் பாசுரத்தில் விட்டுப்பிரியாதபடி களைப்பையாற்றும் திருத்தாழ்வாரைகளையுடைய தமிழகத்தின் வடக்கு எல்லையாக இருக்கும் திருமலையப்பனின் சிறந்த திருவடித் தாமரைகளை காண்பதற்காக தம் திருவாயாலே கவி பாடியருளினார். அவர் எப்படிப்பட்டவரென்றால், எதிரிகளை வெல்லுவதில் ஸாமர்த்யமுடையவர் மட்டுமல்ல, கவி பாடுவதிலும் சிறந்தவர் என்பதை எடுத்துக் காட்டுவதற்காகவே அருளிச் செய்தருளிய இப்பதினொரு பாசுரங்களையும் பாடும்படியான பெருமை பெற்றவர்கள் அத்திருவேங்கடமுடையான் விருப்பப்படி ஆட்படுத்திக் கொள்ளும் பக்தர்களாக ஆவார்கள் என இப்பதினொரு பாசுரங்களின் பலன் கூறும் முகத்தால் முடித்தருளுகிறார்.

இவ்வாறாக காரணங்கொண்டே ஸ்ரீவசநபூஷண திவ்ய சாஸ்த்திரத்தில் ஸ்ரீகாஞ்சி தேவப் பெருமாளுடைய அபராவதாரமான பிள்ளை லோகாசார்யர் என்னும் ஆசார்யர் “இராஜாவான குலசேகரப் பெருமாள் திர்யக் ஸ்தாவர ஜங்கமங்களை ஆசைப்பட்டார்” என சூத்திரம் அருளிச் செய்தார். அதுபோல் நாமும் எம்பெருமானுடன் ஏதாவது ஒரு சம்பந்தத்தை பெற முயல்வோமாக!

**– திரு. பி.ப. ராஜஹம்ஸாசார்யர் ஸ்வாமி,**
**காஞ்சிபுரம்.**

# நந்தி தரிசனம்



நந்தி என்ற சொல்லுக்கு ஆனந்தமாக இருப்பவன் என்று பொருள். சிவாலயத்தில் சிவ பெருமானை வழிபடுவதற்குமுன் நந்தியை வழிபட வேண்டும் என்று ஞான நூல்கள் கூறுகின்றன.

நந்தியின் அருகில் நெய் விளக்கு ஏற்றி வழிபட நினைத்த நல்ல காரியங்கள் நிறைவேறும். எதிரிகள் அழிவர். குடும்பத்தில் குதூகலம் பிறக்கும்.

சிவலிங்கம் முன் வலது காலைச் சற்றே தூக்கியபடி நந்தி அமைந்திருப்பது காயத்ரி மந்திரம் தவக்கோலம் ஆகும். எனவே அவர் காதருகில் ரகசியமாக தங்கள் கோரிக்கைகளைக் கூறுவது தவிர்க்க வேண்டும் என்று சாஸ்திரம் கூறுகிறது.

இருந்தாலும் வலது புறம் தன் தலையை சற்றே திருப்பியிருக்கும் நந்தியின் காதில் குடும்ப பிரச்சனைகள், துன்பங்களைக் கூறினால் சிவனருளால் நிவர்த்தி கிட்டும். மேலும், இடது புறம் தலையைச் சற்றே திருப்பிய கோலத்தில் காட்சி தரும் நந்தீஸ்வரரிடம் திருமணத்தடை, குடும்பத்தில் ஏற்படும் கருத்து வேறுபாடுகளைக் கூற நிவர்த்தி கிட்டும்.

சிவபெருமானை நேரிடையாக நோக்கியிருக்கும் நந்தியை வணங்கினால் விரோதம் பகைமையிலிருந்து நிவாரணம் பெறலாம் என்கிறது சிவ புராணம்.

சிவபெருமான் ஆலகால விஷம் உண்டதால் மயங்கிய நிலையில், இறைவியின் மடியில் படுத்தபடி காட்சி தரும் கோலத்தினை ஆந்திர மாநிலம், சித்தூர் மாவட்டம், சுருட்டப்பள்ளி தலத்தில் உள்ள பள்ளி கொண்டீஸ்வரர் ஆலயத்தில் காணலாம். இங்கு நந்தி, சிவபெருமானின் தலைப்பக்கமாக கவலை தோய்ந்த முகத்துடன் காட்சி தருகிறார்.

காஞ்சிபுரத்திற்கு முப்பது கி.மீ. தொலைவில் உள்ள திருவோத்தூர் கோயில், முந்தைய வடஆற்காடு மாவட்டத்தில் உள்ள வல்லம், திருச்சிராப்பள்ளி புள்ளம் பாடி சுந்தரேஸ்வரர் கோயில், கடலூர் மாவட்டம் விருத்தாசலம் பெண்ணாடகம் பிரகதீஸ்வரர் ஆலயம், திருவைகாவூர், சென்னை திருமுல்லைவாயில் ஆகிய கோயில்களிலும் நந்தி சிவபெருமானை நோக்கியில்லாமல் வாசலைப் பார்த்தபடி காட்சி தருகிறார். மேலும் கர்நாடக மாநிலம் நஞ்சன்கூடு ஸ்ரீநஞ்சுண்டேஸ்வரர் கோயிலில் உள்ள நந்தி இறைவனைப் பார்க்காமல் வடக்கு திசை பார்த்தபடி காட்சி தருகிறார்.

தமிழகத்தில் வேந்தன்பட்டி திருத்தலத்தில் நந்தி தேவருக்கு சாத்தப்படும் பசும் நெய் எத்தனை நாளானாலும் கெட்டுப் போவதில்லை. மேலும், அந்த நெய்யில் ஈக்கள், எறும்புகள் மொய்ப்பதும் இல்லை.

பொதுவாக நந்தி தரிசனம் பாபவிமோசனம் என்று சாஸ்திரம் கூறுகிறது. அடுத்து இந்த நெய் நந்தீஸ்வரரின் இரு கொம்புகளுக்கு நடுவே சக்கரம் ஒன்று இயற்கையாக அமைந்துள்ளது தனிச் சிறப்பு என்று போற்றப் படுகிறது. இத்தலம் புதுக் கோட்டை மாவட்டம் பொன்னமராவதியின் தெற்கே சுமார் ஐந்து கி.மீ. தூரத்தில் உள்ளது.

சிவாலயத்தில் காட்சி தரும் நந்தியிடம் வேண்டிக் கொண்டால் நினைத்த நல்ல காரியங்கள் நிறைவேறும் என்று ஞான நூல்கள் கூறுகின்றன.



- திரு. டி.ஆர். பரிமளரெங்கன்,
திருச்சி, 97156 64450

# திருவேங்கடவன் திருவருள்



எனக்கு திருமணம் ஆகி ஓராண்டுக்குப் பின் என் மூத்தமகன் பிறந்தான். பிறந்தது முதல் குழந்தை தாய்ப்பால் குடிப்பான். உடனே வாந்தி எடுத்து விடுவான். வயிற்றில் குண்டு போல் உருவாகி, வலமிருந்து இடப்புறமாகச் சென்று மறையும். குணப்படுத்த பல மருத்துவமனைகள் சென்றும் குணமாகவில்லை. பக்கத்து ஊரில் உள்ள ஒரு பெரிய மருத்துவ மனைக்கு தூக்கிச் சென்றோம். அங்கே இருந்த மருத்துவர் குழந்தையை பரிசோதித்து விட்டு குழந்தைக்கு அறுவை சிகிச்சை செய்ய வேண்டும் எனக் கூறி விட்டார்.

குழந்தை பிறந்து பதினாறு நாட்களே ஆகிறது. இதற்குள் அறுவை சிகிச்சையா என அழுது புலம்பினோம். இனி அந்த திருமலை வாசனே நமக்கு துணை. கோவிந்தா, நாராயணா குழந்தையைக் காப்பாற்று. உமக்கு வெள்ளியினால் செய்த குண்டு ஒன்று உண்டியலில் காணிக்கையாக செலுத்துகிறோம். கோவிந்தா, நாராயணா இனி நீயே கதி என அழுது வேண்டி உறங்கி விட்டேன்.

இரவு கனவில் எங்களூரில் உள்ள நாட்டு வைத்தியர் பழனி நாட்டார் அவருடைய பெயர் பலகை வந்து காட்சி தந்து மறைந்தது. உடனே அன்று காலை குழந்தையைத் தூக்கிக் கொண்டு பழநி நாட்டார் வைத்தியசாலைக்குச் சென்றோம். அவர் குழந்தையை பரிசோதித்து விட்டு இது "பிரளவாயு" எனக் கூறி மூன்று வேளைக்கு மருந்து கொடுத்தார்.

என்னே பெருமாள் கருணை. ஒரே வேளை மருந்து கொடுத்தோம். அந்த நோய் இருந்த இடம் தெரியாமல் போய் விட்டது. பெருமாள் கருணை, நினைத்து ஆனந்தக் கண்ணீர் விட்டோம். வேண்டியவாறே திருமலை சென்று உண்டியல் காணிக்கை செலுத்தினோம். எல்லாம் ஸ்ரீநிவாசனின் திருக்கருணை.

ஓம் நமோ நாராயணா

**– திரு. பி. இராமன். தேவமங்கலம்.**
**9486358433.**



# மங்கள சுலோகங்கள்

*அச்வத்தாமா பலிர் வ்யாஸோ ஹநூமாம்ஸ்ச விபீஷண ஹ ।*
*க்ருபஹ் பரசுராமஸ்ச ஸப்தைதே சிரஜீவிநஹ ॥*

அசுவத்தாமன், பலி, வியாசர், ஹநுமார், விபீஷணர், கிருபர், பரசுராமர் இவ்வெழுவரும் சிரஞ்சீவிகள் (இறப்பற்றவர்கள்).

## புராண வரலாறு :

இந்நகரை அரசாண்ட வ்ருஷாதர்பி என்கிற மன்னன் காலத்தில் வளம் ஒழிந்து பஞ்சம் பெருத்ததாகவும், அப்போது மன்னன் தன் நாட்டுக்கு வந்த சப்தரிஷிகளிடம் பஞ்சத்தை ஒழித்தால் பொன்னும் பொருளும் தருவதாகச் சொன்னதாகவும், முனிவர்கள் பகவானின் அருளை நாடுமாறு சொல்லியும் செல்வச் செருக்கால், அவர்களுக்குப் பழங்கள் முதலியவற்றைக் கொடுத்தபோது ஏராளமான பொன்னையும் கலந்து கொடுத்ததாகவும், அப்போதும் சப்தரிஷிகள் பகவானின் அருளை வேண்டுமாறு அரசனுக்குப் புத்தி சொல்ல, அதை ஏற்காத அரசன், புரோகிதர்கள் மூலமாக ஒரு யாகம் செய்து, ஒரு தீய தேவதையை யாக குண்டத்திலிருந்து வெளிவரச் செய்து ரிஷிகளை அழிப்பதற்காக ஏவ, ரிஷிகளைக் காப்பாற்றுவதற்காக இத்தலத்து எம்பெருமான் இந்திரனை அனுப்ப, இந்திரன் புலி உருவத்தில் வந்து, தீய தேவதையை அழித்ததாகவும் அதனால், இத்தலம் "திருப்புலியூர்" என்று அழைக்கப்பட்டது.

பஞ்சபாண்டவர்களில் ஒருவனான பீமன், இங்கு தவம் செய்து, இந்த எம்பெருமானின் அருளைப் பெற்றான் என்பர்.

## சிறப்புகள் :

பரமபதவாசியான பகவான் இத்திவ்ய தேசத்தில் வாசம் செய்ய மிக விரும்பி வந்து அடைந்தானாம். *"அவன் சென்று சேர் தண் திருப்புலியூர்"* என்கிறார் நம்மாழ்வார்.

| | | |
|---|---|---|
| பெருமாள் | : | மாயப்பிரான், (கிழக்கு நோக்கிய நின்ற திருக்கோலம்). |
| தாயார் | : | பொற்கொடி நாச்சியார். |
| விமாநம் | : | புருஷ சூக்த விமாநம் (புருஷோத்தம் விமானம் என்றும் சொல்வர்) |
| தீர்த்தம் | : | பிரக்ஞா சரஸ், பூஞ்சுனை. |
| ப்ரத்யக்ஷம் | : | சப்த ரிஷிகள் |
| ஆகமம் | : | நம்பூதிரிகளின் பூஜா க்ரமம் |
| மங்களாசாஸனம் | : | ஸ்ரீநம்மாழ்வார், திருமங்கை ஆழ்வார். |

## விசேஷம்:

நம்மாழ்வாரின் திருவுள்ளத்திலே எப்போதுமே "திருப்புலியூர்" நினைவுதானாம். ஆழ்வார், பராங்குச நாயகியாகப் பெண்மை ஏறிப் பேசுவது. இதை நம்பிள்ளை என்கிற ஆசார்யன் "சீதாப்பிராட்டி, திருமிதிலையை விட்டு, திருஅயோத்தியைப் புகழுமாப் போலே ஆழ்வாரும் தான் அவதரித்த ஆழ்வார் திருநகரியை மறந்து, திருப்புலியூர் புகழே புகழா நின்றான்" என்கிறார்.

## த்யானச்லோகம்

*மாயா விஷ்ணு: கதகலதிகா தீர்க்க சார்த்தூல ஸம்ஜ்ஞே*
*க்ஷேத்ரே ப்ரஜ்ஞா ஸரஸி சுபதே பும்ஸி ஸூக்தே விமாநே ।*



**– உருப்பட்டூர் ஸௌந்தரராஜன், சென்னை.**



# 108 திவ்ய தேச வைபவம் 65
# திருப்புலியூர்

*ப்ராதர் பாஸ்வத் திகபிவதந:*
*ஸப்தயோகீச்வராணாம்*
*ப்ரத்யக்ஷா யஸ்ஸ மம ஹ்ருதயே ஸர்வதா*
*ஸந்நிதத்தாம் ||*

**பாசுரம்**

*"கருமாணிக்க மலைமேல் மணித்தடந்தாமரைக்*
*காடுகள் போல்*
*திருமார்வுவாய் கண்கை உந்தி*
*காலுடையாடைகள் செய்யபிரான்*
*திருமால் எம்மான் செழுநீர் வயல்குட்டநாட்டுத்*
*திருப்புலியூர்*
*அருமாயன் பேரன்றிப் பேச்சிலன் அன்னைமீர்!*
*இதற்கு என் செய்கேனோ?"*

– நம்மாழ்வார்

*"பேராலி, தண்கால், நறையூர் திருப்புலியூர்"*

– திருமங்கை ஆழ்வார் – சிறிய திருமடல்

*"முதல் வண்ணம் ஆமே முலைவண்ணம்:*
*முன்னே*
*விதி வண்ணம் நீங்கி விடுமே - சதுரத்*
*திருப்புலியூர் நின்றான் திருத்தண் துழாயின்*
*மருப்புலி ஊர் தென்றல்வரின்"*

– பிள்ளைப்பெருமாள் ஐயங்கார்.

**நாமாக்கள்**

*601. ஓம் வ்ருபாக்ஷ: நம:*

தர்மத்தைக் கண்ணாக உடையவனே.

*ஓம் ஸுவீர்யாயை நம:*

ஆஸ்திகர்களை ரக்ஷிக்கும்போது தம்மிடம் களைப்பு போன்ற விகாரங்கள் எதுவும் இல்லாதவளே.

*602. ஓம் வ்ருஷப்ரிய: நம:*

தர்மத்தில் அன்பு உள்ளவனே.

*ஓம் துஸ்ஸவப்ந ஹராயை நம:*



கெட்ட கனவு போல் துக்கம் அளித்த சம் சாரத்தை அதன் அடையாளம் கூட இல்லாதபடி அழிப் பவளே.

*603. ஓம் அநிவர்த்தீ நம:*

ப்ரவர்த்தி தர்மத்தில் இருப்பவர்களை ஸம்சாரத்திலிருந்து திருப்பாமல் இருப்பவனே.

*ஓம் தேவக்யை நம:*

ஜகத்சுருஷ்டி போன்ற லீலா விபூதிகளில் பெருமாளை ஈடுபடச் செய்பவளே.

*604. ஓம் நிவ்ருத்தாத்மா நம:*

நிவ்ருத்தி தர்மத்தில் இருப்பவர்களுக்கு ஆத்மாவே.

*ஓம் வஸுதேவதாயை நம:*

தானும் பெருமாளைப் போல எல்லாருடைய ஹ்ருதயத்தில் அந்தர்யாமியாக இருந்து அந்தந்த யாகங்களில் ஹவிஸ்ஸைப் பெறுபவளே.

*605. ஓம் ஸம்க்ஷேப்தா நம:*

ப்ரவர்த்தி தர்மத்தில் இருப்பவர்களின் அறிவும் மகிமையும் குறையும்படி செய்பவனே.

*ஓம் ஸௌதாமிந்யை நம:*

எங்கு வியாபித்தாலும் அதன் அழுக்குகள் தன்னிடம் ஒட்டாதபடி மின்னல்போல பிரகாசிப்பவளே.

*606. ஓம் க்ஷேமக்ருத் நம:*

நிவ்ருத்தி தாமத்தில் இருப்போருக்கு மோக்ஷம் அளிப்பவனே.

*ஓம் மேகரதாயை நம:*

நீருண்ட மேகம் போன்ற பெருமாளின் திருமார்பில் அமர்ந்து அவருடன் எங்கும் சஞ்சரிப்பவளே.

*607. ஓம் சிவ: நம:*

நன்மைகளை அளிப்பவனே.

*ஓம் தைத்யதாநவமர்த்திந்யை நம:*

திதி, தநு இவர்களின் மக்களான அஸுரர்களை அழிப்பவளே.

*608. ஓம் ஸ்ரீவத்ஸ வக்ஷா: நம:*

ஸ்ரீவத்ஸம் என்கிற மருவைத் திருமார்பில் உடையவனே.




## தியான சுலோகங்கள்

மயி சன்யஸ்ய சர்வம்
த்வம் ஆத்மானம் யஸ்மிந் தவாஸ்தி ச |
மதர்த்தம் குரு கர்மாணி
மா ச தர்ம வ்யதி க்ரமந் ||

தர்ம மார்க்கத்தை தெரிந்துக்கொண்டு உன்னை என்னிடம் சரணாகதி செய்து விடு! நான் காப்பாற்றுகிறேன்!

தொகுப்பு : திருநாங்கூர் உ.வே. ஸௌந்திரராஜபட்டர், புதுடில்லி.



*ஓம் ஸ்ரேஸ்கர்யை நம:*

அடியார்கட்குச் சகல நன்மைகளையும் அளிப் பவளே.

609. *ஓம் ஸ்ரீவாஸா: நம:*

திரு விளையாடுமிடமாக இருப்பவனே

*ஓம் சித்ரலீலாயை நம:*

தாவா, மிருக, மனுஷ்ய, தேவ என்று பலவகை இவற்றுள்ளும் பலவகை. ஜங்கம ஸ்தாவர ரூப ப்ரபஞ்ச ச்ருஷ்டி இவைகளை விளையாட்டாகச் செய்பவளே.

610. *ஓம் ஸ்ரீபதி நம:*

திருவின்பதியே

*ஓம் ஏகாகிந்யை நம:*

பெருமாள், அடியவரிடம் சீறினாலும் அவரிட மிருந்தும் பயமின்மையை அடியவர்க்கு அருளச் செய்பவளே! தனிப் பெருமை வாய்ந்தவளே.

*ஸ்ரீஹேமவல்லீநாயிகா ஸமதே ஸ்ரீஆசார்ய ஸக்தியுத ஸ்வாமி பரப்ரஹ்மணே நம:*

**குறிப்பு :**

எர்ணாகுளம் திருவனந்தபுரம் சாலையில் சேங்கனூர் அருகே அமைந்துள்ளது இத்திருத்தலம்.

திவ்ய தேச வைபவம் வளரும்...

# வடுக நம்பி இயற்றிய ஸ்ரீயதிராஜ வைபவம்



*ததஸ்து காஞ்சித் பரிணீய கந்யாம் க்$_3$ருஹஸ்த$_2$த$_4$ர்மஸ்தி$_2$*
*திராப காஞ்ச்யாம் |*
*ஸ பூர்வபக்ஷாப்$_4$யஸநாய மாயிஸந்ந்யாஸிநம்*
*யாத$_3$வஸம்ப்ரகாசம் ||*

(11)

**அதற்குப்பின், ஒரு கன்னியை மணம் புரிந்து இல்லறம் மேற்கொண்டவராய், பூர்வபக்ஷசாஸ்த்ரங்கள் வாசிப்பதற்காகக் காஞ்சியில் வாழ்ந்த மாயாவாதி (அத்வைதி) ஸந்யாஸியான யாதவப்ரகாசரை அடைந்தார்.**



– "ஸுதர்சனம்" ஆசிரியர் இயற்றியது

தொடர்



# அப்பிள்ளை அருளிய ஆழ்வார் ஆசார்யர்கள் வாழித்திருநாமமும் உரையும்

உ.வே. டாக்டர் மாடபூசி வரதராஜன் ஸ்வாமி, சென்னை, 9841884972

**திருக்கண்ணமங்கையாண்டான் வாழித்திருநாமம் தொடர்ச்சி ...**

*(எழிலுடனே நாதனாக ஆட்சி செய்தான்)* எழில்– அழகு, நாதன் – தலைவன். "அஸ்மந் நாதாய" என்று சொல்லுகிறபடியே நம் வைணவ தர்சனத்துக்குத் தலைவராவார். ஸ்ரீபாகவத புராணம் பன்னிரண்டாம் ஸ்கந்தத்தில், பன்னிரண்டாம் அத்தியாயத்தில், பதினாறு நாதர்களுடைய விஷயம் சொல்லப் பட்டுள்ளது காணலாம். தலைமையாம் தன்மைக் கேற்ப தம் ஆசார்யரான ஸ்ரீமந்நாதமுனிகளைப் போல ஞானம், பக்தி,வைராக்கியம் முதலான நற்குணங்களுக்கு ஓர் கொள்கலமானவர்.

ஐந்தாவது உபாயமான ஆசார்யனே உபாயம் என்ற ஊற்றத்தை உடையவர். தமிழ் வேதம் வட மொழி வேதம் ஆகியவற்றின் ஸாரத்தை அறிந்தவர். ஆட்சியாவது எம்பெருமானுக்குக் கைங்கர்யம். கைங்கர்யமாவது ஸ்ரீமந்நாதமுனிகள் நியமனத்தினால் திருக்கண்ணமங்கை திவ்ய தேசத்தை அடைந்து ஊக்கத்துடன் ஸ்ரீகிருஷ்ண துளசி மாலைகளை ஸமர்ப்பிக்கும் கைங்கர்யத்தில் ஈடுபடுத்திக் கொண்டதாகும். மேலும் ஆழ்வார்களைப் போல பகவத் கைங்கர்யமாகிற சுவையை பருகுபவராய் இருந்தார்.

கண்ணமங்கையில் துளசி தோட்டத்தை உண்டாக்கி, தினமும் துளசி இதழ்களைத் தொடுத்து, மாலையாக்கி, பக்தியுடன் கண்ணமங்கை பக்தவத்ஸலப் பெருமாள் உகப்புக்கு ஏற்ப ஸமர்ப்பித்து வந்தவர். ஆண்டாளிடமும், அவள் அருளிய நாச்சியார் திருமொழியிலும் மிக்க பக்தி உடையவராகையாலே வாசிக கைங்கர்யமாக "அல்லிநாள்..." என்ற ஒரு தனியன் மூலம் அப்போது அலர்ந்த தாமரைப்பூவில் பொருந்தி இருக்கும் தெய்வப் பெண்ணான பெரிய பிராட்டியாருக்கு இனிமையான துணைவி என்றும், மல்லிநாட்டை தன் குணத்தாலே ஈடுபடுத்தி ஆண்ட அழகிய மயில் போன்றவள் என்றும், மென்மைத் தன்மையுடையவளான ஆண்டாள் கண்ணன் திருமேனியில் பொருத்தமுடையள் என்றும், அழகிய ஸ்ரீவில்லிபுத்தூரில் வேயர் குலத்தில் பெரியாழ்வாராலே பெறப்பட்ட விளக்கு என்றும் அருளியது காணலாம். இதனால் காயிக வாசிக கைங்கர்யமாகிற ஆட்சி நடத்தினபடி.

*(துன்பமென தன்முயற்சி நீத்த செல்வன் – தாமணிவண்ணன் தாள் கதி என்றான்)* கைம்மாறு கருதாது பெருமாளுக்குக் கைங்கர்யம் செய்து வரும் ஆண்டாள் ஒருநாள் இரண்டு சேவகர்கள் கையில் கத்தியை ஏந்தியவர்களாய், செருப்பு அணிந்துக் கொண்டு நாயை ஒவ்வொருவரும் அழைத்துக் கொண்டு வந்தனர். பெருமாள் பெருமையைக்

கேட்டு அவர்கள் இருவரும் பெருமாளை சேவிக்க கோயிலுக்குள் சென்றனர். தங்கள் செருப்புக்களை கோயில் வாசலில் விட்டு, அவற்றை பாதுகாக்க தங்கள் நாயை காவலாக வைத்துச் சென்றனர். அதற்குள் ஒரு நாய் மற்றொரு சேவகன் செருப்பை கவ்வவே நாய்கள் சண்டையிட்டன.

ஒரு சேவகனுடைய நாயை ஒரு சேவகன் அடிக்க, அவன் அதை பொறுக்காது அடித்தவனோடு எதிர்த்த பொழுது அவனையும் கொன்று தானும் குத்திக் கொண்டு இறப்பதைக் கண்டார் ஆண்டான்.

உடனே ஒரு தாழ்ந்த சேதனன் தன் அபிமானத்திலே நாய் ஒதுங்கினது என்னும் இவ்வளவுக்காகத் தன்னை அழிய மாறினபடியைக் கண்டால், பரம சேதனான பெருமாள் அபிமானத் திலே ஒதுங்கினால் அவன்என்படுமோ? என்று தன் முயற்சிகளை முழுவதும் விட்டு, அந்த நாயைப்போல தம்மை நினைத்துக்கொண்டு திருக்கண்ண மங்கையில் அப்போதே வாசல்படியின் மேல் கட்டையிலிருந்து குதித்து பத்தராவிப் பெருமாள் கோபுர வாசலுள் உள்ளிருக்கிற ஒட்டுத்திண்ணையில் இருந்து வாழ்நாளைக் கழித்தார்.

பகவத் பக்தராய் தனது பொறுப்பு முழுவதையும் ஸ்ரீய:பதியான பக்தவத்ஸல பெருமாளிடம் ஒப்படைத்தார். தனக்காக தான் முயல்வதை விட்டு எல்லா நித்ய நைமித்திக கர்மாநுட்டானங்களையும் விட்டு நாயைப் போல இரண்டு கைகளையும் கால்களாக்கிக் கொண்டு நான்கு கால்களாலே திரியலானார். பெருமாள் கோயிலில் ஒரு மகிழ மரத்தடியில் மௌனமாக இருப்பவராய், பெருமாள் பிரசாதத்தை உண்டு வாழ்ந்தார். இது கொண்டு திருக்கண்ண மங்கையில் "தன் முயற்சி நீத்த செல்வன்" என்று சொல்லப்பட்டது.

இதுபற்றியே பிள்ளை லோகாசார்யார் ஸ்ரீவசனபூஷணத்தில் (சூ82) திருக்கண்ணமங்கை ஆண்டான் ஸ்வவ்யாபாரத்தை விட்டான் என்று அருளினார். ஸ்வவ்யாபாரமாவது – தன் முயற்சி யால் தன்னைக் காத்துக் கொள்ளுதல். இதனால் ஆண்டானுடைய அரிய விச்வாஸம் சொல்லப் பட்டது. பெரியவாச்சான் பிள்ளையும் தாம் அருளிய மாணிக்க மாலையில் "...... திருக்கண்ண மங்கை யாண்டானைப் போல பரபரப்பற்று வகுத்தவன் எம்பெருமான் வாசலிலே தன்னைப் பேணாது ஒதுங்கும்" என்று உரைப்பார்.

மேலும் தொண்டரடிப் பொடியாழ்வார் அருளிய திருமாலையில் முப்பத்து எட்டாவது பாசுரத்தில் "உன் கடைத்தலை இருந்து" என்ற தொடருக்குச் சேர திருக்கண்ண மங்கையாண்டான் எம்பெருமான் திருவாசலைப் பற்றிக் கிடந்ததை எடுத்து உரைப்பர். இந்த விச்வாஸத்தினால் தூமணிவண்ணனான பத்தராவிப் பெருமாளையே கதியாகப் பற்றினார் என்க.

*(அன்பால் உலகாரியனார் போற்ற நின்றான்)* உலகாரியான் – வடக்குத் திருவீதிப் பிள்ளையின் குமாரருக்கு நம்பிள்ளை இட்டபெயர் பிள்ளை லோகாசார்யார் என்பதாகும். இவர் அருளிய ஸ்ரீவசன பூஷணம் என்னும் நூலில் மூன்றாம் பிரகணத்தில் (சூ80) ஆண்டானிடம் அன்பு கொண்டு "உபாயத் துக்கு.... திருக்கண்ணமங்கை ஆண்டானைப் போல இருக்க வேணும்" என்று சூத்திரமிடுகிறார். இதற்கு மாமுனிகளும் அற்புதமான வியாக்கியானம் வழங்கியுள்ளார். இதனால் இவருக்கு ஆண்டான் பால் கொண்ட அன்பின் வெளிப்பாடாக போற்றுவது காணலாம்.

*(அழகாரும் திருக்கண்ணமங்கை யாண்டான்)* அழகு– அவயவ அழகு, பராத்பரர் என்ற நித்யஸுரி அம்சமாகப் பிறந்தவராதலால் அழகு மிக்கிருந்தவர். இதனால் கல்வி, ஒழுக்கம், நிரம்பப் பெற்றவரானார். அதாவது தந்தையால் உபநயனம் செய்வித்த பிறகு பிரம்மசரிய விரதத்தில் ஊன்றியவர்; ஆசாரியனிடத்தில் எல்லா வேதங்களையும் அத்யயனம் செய்தவர்.

விடியற்காலையில் நீராடி சாஸ்த்ரங்களில் விதிக்கப்பட்ட கர்மங்களை செய்தவர். வைதீக ஆசாரங்களோடு கூடியவர். பஞ்சமஹா வேள்வி களைச் செய்பவர். வேத வேதாந்தங்களை அர்த்தத் துடன் கற்றவர். நல்லோர்களின் ஒழுக்கத்தைக் கடைபிடிப்பவர். ஸ்ரீமந்நாதமுனிகளிடம் பஞ்ச ஸம்ஸ்காரம் செய்யப் பெற்றவர். ஸ்ரீவைஷ்ணவர் களில் சிறந்தவர். அறிவாளி. பெரும் புகழாளராய் விளங்கினார். இத்தகைய பெருமைப் பெற்ற திருக்கண்ணமங்கை ஆண்டானுக்கு பல்லாண்டு பாடுவோமாக.

# உத்தரகோச மங்கைக்கு பெருமை தந்த மாணிக்கம்

தமிழகத்துப் பாண்டி நாட்டுப் பகுதி சார்ந்த இராமநாதபுரம் நகருக்கு சுமார் 10 கி.மீ. தூரம் மதுரை செல்லும் சாலையில் பயணித்து நெடுஞ்சாலையினின்று விலகி சற்று தூரம் சென்றால் வருவது ஒரு சிற்றூர். ஊரின் பெயர் உத்தரகோசமங்கை. இரயில் நிலையமும் உண்டு. தூரத்திலிருந்து பார்த்தால் உயர்ந்த ராஜ கோபுரம் தென்படும். கோயிலின் தென் புறமாக இடிந்த நிலையில் ஒரு கோபுரம் அதுவும் பெரிதாக. பாடல் பெற்ற சிவத்தலமாகும். பாடியவர் சமயக் குரவர் நால்வருள் ஒருவரான மாணிக்க வாசகப் பெருமான்.

இறைவன் மங்கள நாயகர், அம்மனின் திரு நாமம் பூண் முலை நாயகி என்பதாகும். சமயம் மற்றும் இலக்கிய சிறப்புடைய தலம். திருப்பொன்நூசல் எனத் தலைப்பிட்டு வாசகப் பெருமான் ஊசற் பாட்டாகப் பதிகம் பாடிய தலமிது.

**ஆலய வரலாறு :**

முன்பொருகால் கயிலாயத்தில் இறைவன் உமையவளுக்கு வேதத்தை உபதேசிக்கிறார். கற்றுக் கொண்டும் அவளால் அதை நினைவில் நிறுத்த இயலவில்லை. அதைக் கண்ட ஈசன் கோபமுற்று அன்னையை பூவுலகில் ஒரு வேதியர் மகளாகப் பிறக்குமாறு பணிக்கிறார். இராசமாணிக்க சதுர் வேத புரமெனும் தலத்தில் ஒரு வேதியரின் மகளாக அவதரிக்கிறாள் தேவி. பூண்முலையாள் என்று பெயர் சூட்டப்படுகிறாள். மணப்பருவம் வந்ததும் அங்கு ஒரு கிழவேதியர் வருகிறார் (இறைவனைத் தவிர வேறு யார்!). அவளை மணம் முடித்து தருமாறு கேட்க, அவ்வாறே திருமணமும் நடந்தேறுகிறது. தனது உண்மை உருவை காட்டி அத்தலத்தில் கல்யாண ஈசுவரனாகக் கோயில் கொண்டார். முறைப்படி திருமண சடங்குகள் நடத்தப்பட்டவுடன் மீண்டும்



**திரு, கே.ஆர். சந்தான கோபாலன்**
**சென்னை**



வேதம் பற்றிய கேள்விகளை கேட்டான் ஈசன். அம்மைக்கு இன்னும் ஐயம் தெளியாததால் மறுமுறை வேதத்தை உபதேசித்தார். இவ்வாறு வேத நெறிகளை இரண்டாம் முறையாக உபதேசம் பெற்ற மங்கை கல்யாண சுந்தரி கோலத்தில் அருளும் தலமே உத்தரகோச மங்கையாம். (உத்தரம் என்பது மறுபடி பெறும் விளக்கம், கோசம் என்பது வேதம்.)

கோயில் வடதிசை பிரகாரத்தில் நடராசர் சன்னதி, சந்தனக் காப்பிட்டு நிற்கிறார். மரகதச் சிலை என்பதால் மிக்க ஒளி பொருந்தியதால் ஊனக் கண் கொண்டு பார்த்தல் இயலாதென்பதால் இவ்வாறு அலங்கரிக்கப்படுகிறது. மார்கழி திருவாதிரை அன்று புதிய காப்பிடப்படுகிறது. அர்ச்சகர் கண்களை கட்டியபடி காப்பிடுவார். பிரதான கோயில் பகுதியிலும் நடராசர் சன்னதி உண்டு. நின்று ஆடி கொண்டிருக்கும் நடராசரின் எழிலான திருவுருவம்.

**பிழை திருத்தம்**

**பிப்ரவரி 2022 பக்கம் எண்.7- ல் கட்டுரை ஆசிரியர் பெயரை திரு. அத்தி வரதராஜன் என்பதற்கு பதிலாக திரு. அத்தி ரங்கராஜன் என்று திருத்தி வாசிக்கவும்.**

### தலப்பெருமை :

இத்தலத்திற்கு மாணிக்கவாசகர் வந்து தங்கியிருந்து முக்தியடைய இறைவனிடம் விண்ணப்பித்ததோடு அவரது அவதாரத்துடனும் தொடர்பு கொண்ட பெருமை உண்டு. கயிலையோன் ஒரு முறை தனது சீடர்களுடன் இலங்கை செல்லும் போது, அவர்களிடம் திருமுறைகளை பாதுகாக்கும் படி பணித்தார்.

பொய்கை ஒன்றில் ஒரு சுடர் எழுகையில் மூழ்குவோர் முக்தியடைவர் என்று கூறிச் சென்றார். ஒரே ஒரு சீடர் மட்டும் திருமுறை காப்பதற்காக பொய்கையில் மூழ்காது இருந்தார். அச்சீடரது கடமை உணர்வை எண்ணி மகிழ்ந்த கண்ணுதலோன் அவரை வாதவூரராக அவதரிக்கச் செய்தார்.

### ஆலயச் சிறப்பு :

ஏழு நிலை ராஜ கோபுரம் எழிலாக உள்ளது. மங்களநாதர் மங்களாம்பிகை மற்றும் நடராஜர் மூவருமே பிரதான மூர்த்திகள். ஆறடி உயர நடராசர் சிலை வேறெங்கும் இல்லாத படி மரகதத்தால் உருவானது.

ஒரு அறையில் ஆயிரம் லிங்கங்கள் அமைந்துள்ளது விஷேசம். நுழைவுவாயிலில் ஒரு பெரிய யாளியின் உருவத்தின் வாயில் ஒரு கல்லினால் ஆன பந்து காணப்படுகிறது. இது சிற்ப கலை நயத்தை பறை சாற்றுகிறது.

விநாயகர், முருகர் மற்றும் நவக்கிரக சந்நதிகள் உண்டு. அருணகிரி நாதர் இக்கோயிலில் முருகன் மீது பதிகம் பாடியுள்ளார். முருகப் பெருமானுக்கு இந்திரன் ஐராவத யானையை அளித்ததாக ஒரு வரலாறு.

முன் பகுதியில் ஸ்படிக லிங்கங்கள் அமைந்துள்ளன. சிவாலயங்களில் நடைபெறும் அனைத்து உற்சவங்களும் விமரிசையாகக் கொண்டாடப்படுகின்றன. இத்தலத்தில் மட்டும் இறைவனுக்கு தாழம்பூ சார்த்தப்படுகிறது. வேறெங்கும் இல்லை. திருவாதிரை திருவிழா விமரிசையாகக் கொண்டாடப்படுகிறது. மாணிக்க வாசகர் ஸ்படிக லிங்க வடிவில் உள்ளார். பழமை வாய்ந்த ஆலயமிது.முடியை தேடிய பிரமன் கண்டதாக பொய்யுரைத்து முக்கண்ணனால் சாபம் பெற்று இத்தலம் வந்து சாப விமோசனம் பெற்றார்.

# ஸ்ரீமத் பகவத்கீதை

**தெலுங்கு மூலம் : திரு.கே. விஸ்வநாத சாஸ்திரி**
**தமிழாக்கம் : டாக்டர் சி. கோவிந்தசாமி**

***************



*சென்ற இதழின் தொடர்ச்சி...*

விராடனின் தயவினால்தான் பாண்டவர்கள் தலைமறைவு வாழ்க்கை வாழ முடிந்தது. நான் மட்டும் அவர்களின் தலைமறைவு வாழ்க்கையைக் கண்டு பிடித்து முடிவுக்கும் கொண்டு வந்திருந்தால், மீண்டும் பதிமூன்று ஆண்டுகள் அவர்கள் வனவாசம் தொடர்ந்திருக்கும்.

மேலும், இந்தப் போரும் வந்திருக்க வாய் பில்லாமல் போயிருக்கும். எனவே, இப்பொழுது வந்திருக்கும் போருக்குக் காரணம் விராடன் மட்டுமே. எனவே அவனுடைய பெயரை இரண்டா வதாகக் குறிப்பிடுகிறான்.

மூன்றாவது பெயராக "த்ருபதஸ்ச" என்று துருபதனின் பெயரைக் குறிப்பிடுகின்றான். துருபதனுக்கும் துரோணாச்சாரியருக்கும் பகைமை இருந்து வந்தது. ஆனால், துருபதன் துரோணாச் சாரியரிடம் பகைமை வளர்த்து வந்தானே தவிர, துரோணாச்சாரியார் துருபதனிடம் எவ்வித பகைமை யும் பாராட்டவில்லை என்றாலும், துருபதனன், எப்படியாவது என் மகன் அவர் தலையை வெட்ட வேண்டும் அதை நான் பார்க்க வேண்டும் என்ற நோக்கத்தில் அவன் யுத்த களத்தில் நிற்கின்றான். இவன் நோக்கம் அங்குள்ள அனைவருக்கும் தெரியும். அங்குள்ளவர்கள் அனைவரும் மிகப் பெரும் வீரர்கள், மஹா ராஜாக்கள். பொதுவாக இவர்களைப் போன்றவர்கள் சபதங்கள் மேற்கொள் வது வழக்கம். மேலும், இவர்கள் வெளியிலும், உள்ளேயும் பேசிக் கொள்ளும் செய்திகள் அனைத் தையும் துரோணாச்சாரியரும் அறிந்தே இருந்தார். மறுபடியும் *"த்ருபதபுத்ர:"* என்று கூறி, உன்னைக் கொல்வதற்காகவே துருபதன் பிள்ளையைப் பெற்றிருக்கிறான். அப்படிப்பட்டவனான துருபதன் இங்கே இருக்கிறான் என்று கூறி துரியோதனன் தன் துர்குணத்தை வெளிபடுத்துகிறான். மேலும், இத்தகைய செயல்கள் யாவும் பிறரை இழிவு படுத்துவதாகும். மேலும், பல வீரர்களின் பெயர் களையும் துரியோதனன் இங்கு உச்சரிக்கிறான்.

*"த்ருஷ்டகேதுச்சேகிதான: காசிராஜச்ச வீர்யவான்*
*புருஜித்குந்தி போஜச்ச ஷைப்யஸ்ச நரபுங்கவ:"*

த்ருஷ்டகேது "சேகிதானன்" என்றும், புருஜித், குந்தி போஜன் என்றும், பாண்டவர்களுக்கு உறவு முறையாகும் இரண்டு வீரர்களையும் குறிப்பிடுவ தோடு மேலும், "ஷைப்யன்" என்ற சிபிதேசத்து மன்னன் பெயரையும் குறிப்பிடுவதின் மர்மம் என்ன வென்றால், த்ருஷ்டகேது சேதிதேசத்து மன்னன் "சேத்ய:" என்பது அவனுடைய பெயர். த்ருஷ்டகேது சிசுபாலனுடைய குமாரன். சிசுபாலன், யாரென்றால் மஹா கிருஷ்ண துவேசி. அவன் வாழ்நாள் முழுவ தும் கிருஷ்ணனை ஏசுவதே தொழிலாகக் கொண்ட வன். கிருஷ்ணனின் சுதர்ஷன சக்கரவர்த்தினால் பலியானான். அவனுடைய மகன்தான் த்ருஷ்டகேது.

இவன் தன் தந்தையைப் போல் கிருஷ்ண பரமாத்மா வின் மீதும், பாண்டவர்கள் மீதும் பகைமை பாராட்ட வில்லை. மேலும், பாண்டவர்களோடு இவன் சேர்ந்து விட்டான்.

தன்னுடைய சகோதரியான "சுருனுமத" என்பவளை நகுலனுக்குத் திருமணம் செய்து கொடுத் தான். தன்னுடைய சகோதரியான ""உறவுகளை வளர்த்துக் கொள்வதற்கு நல்லவர்களோடு சேர்ந்து வாழ வேண்டும் என்றும், என் தந்தை செய்த அத்தவறை நானும் செய்ய வேண்டிய அவசியம் இல்லை என்ற தீர்மானத்தோடு இருக்கின்றவனைப் பற்றி முக்கியமாக அவன் பேச்சில் குறிப்பிட்டான்.

குறிப்பாக "சேக்தானன்" ஒரு மகாவீரன். இவன் போர்க்களத்தில் பல விநோதங்களை நிகழ்த்தக் கூடியவன். அதற்காகவே பிறந்தவன். இவனுக்கு யுத்தம் என்பது ஒரு தவம். அர்ச்சுனனின் நண்பன். அர்ச்சுனனின் பக்கம் சார்ந்து நிற்பவன். அப்படிப்பட்ட சேக்தானனுக்குப் பிறகு காசிராஜனைக் குறிப்பிடுகிறான்.

"காசிராஜச்ச வீர்யவான்" என்கிறான். "காசி" என்ற சொல்லை உச்சரித்தாலே புண்ணியம் கிட்டும் என்று சொல்லக் கூடிய இடத்தில் இருப்பவனாகிய காசி ராஜன் மிகவும் வீரம் மிகுந்தவன். இந்த மண் ணில் பிறந்த யாவரும் வீரம் மிக்கவராகவே பிறப்பர்.

சிலர் அந்தந்த வம்சத்தில் பிறந்தும் பிறவாமலும் இருப்பார்கள். ஆனால், ஒரு வம்சத்தில் ஒரு தலைமுறையில் மட்டும் இல்லாமல் மேலும் மேலும் வருகின்ற தலைமுறைகளிலும் இப்படிப் பட்டவர்களே பிறக்கின்ற வம்சங்களும் சில உள்ளன.

*தொடரும்...*


## ஏப்ரல் மாத பண்டிகைகள், பருவ தினங்கள் மற்றும் தி.தி.தே. ஆலய உற்சவங்கள்

| | |
|---|---|
| மார்ச்30-7 | திருப்பதி ஸ்ரீகோதண்டராம ஸ்வாமி பிரம்மோத்ஸவம் |
| 02 | தெலுங்கு வருட பிறப்பு (ஸ்ரீசுபக்ருத் நாமம்) |
| 03 | ஸ்ரீமத்ஸ்ய ஜெயந்தி |
| 06-14 | வாயல்பாடு ஸ்ரீபட்டாபிராம ஸ்வாமி பிரம்மோத்ஸவம் |
| 10 | ஸ்ரீராமநவமி |
| 10-18 | ஒண்டிமிட்டா ஸ்ரீகோதண்டராம ஸ்வாமி பிரம்மோத்ஸவம் |
| 14 | தமிழ் வருட பிறப்பு |
| 14-16 | திருமலையப்ப ஸ்வாமி வஸந்தோத்ஸவம் |
| 16-24 | நாகுலாபுரம் ஸ்ரீவேதநாராயணஸ்வாமி பிரம்மோத்ஸவம் |

## ஸ்ரீகோதண்ட ராமஸ்வாமி ஆலயம், திருப்பதி

**திருப்பதி நகரத்தின் மையப்பகுதியில் ஸ்ரீகோதண்டராம ஸ்வாமி ஆலயம் அமைந்துள்ளது. இந்த பழமையான ஆலயத்தை கி.பி. 10 ஆம் நூற்றாண்டில் சோழ அரசன் நிர்மாணித்தார். 15ஆம் நூற்றாண்டில் ஸ்ரீகிருஷ்ண தேவராயர் மேலும் விரிவுபடுத்தினார். ஸ்ரீசீதா சமேத கோதண்டராம லஷ்மண ஸ்வாமி விக்ரகங்களும், இவ்வாலயத்திற்கு எதிரில் ஸ்ரீஆஞ்சநேய ஸ்வாமியும் வீற்றிருக் கிறார். திருப்பதி பேருந்து மற்றும் இரயில் நிலையங்களிலிருந்து 10 நிமிடத்தில் சென்று அடையலாம். இந்த ஆண்டு மார்ச் மாதம் 30ம் தேதி முதல் ஏப்ரல் 7ஆம் தேதி வரை பிரம்மோத்ஸவம் நடை பெறுகிறது. ஸ்ரீராமநவமி மறுநாள் ஸ்ரீசீதாராம திருக்கல்யாண உத்ஸவமும், அதனை தொடர்ந்து ஸ்ரீராமபட்டாபிஷேகமும் நடைபெறுவது சிறப்பு அம்சமாகும்.**





அலசுவோம்......
அறிவோம்....
ஆதிகாவிய நாயகர்களை......



# கசன் தேவயானி

திரு. சத்யதாரா,
சென்னை,
9894526302.

*சென்ற இதழின் தொடர்ச்சி...*

தங்களது குருவின் மந்திர சக்தியினால் மீண்டும் மீண்டும் இரு முறை பிரகஸ்பதியின் மகன் உயிர் மீட்கப்பட்டதை சகியாத அரக்கர்கள் தங்களது குருவால் மீட்க இயலாத வகையில் கசனை தீர்த்துக் கட்டிவிட திட்டமிட்டார்கள். கசனை ஒரு நாள் தனி யாக பிடித்து, துண்டு துண்டாக வெட்டி கொலை செய்து, அக்னியில் எரித்து பஸ்பம் ஆக்கி விட்டனர். பின்பு அந்த பஸ்பமான சாம்பலை எடுத்து, தங்களது ஆசார்யருக்கு, மதுவுடன் கலந்து ஊற்றிக் கொடுத்து விட்டார்கள். அன்றிரவு முதல் கசனை காணாமல் தேவயானி துடித்தாள். அவனுடைய இழப்பினை அவளால் தாங்க முடியாத அளவு, கசனிடம் பேரன்பு கொண்டிருந்தாள். தனது தந்தை யிடம் சென்று முறையிட்டாள். சுக்ராசாரியார் அவளுக்கு ஆறுதல் கூறி, அசுரர்கள் தொடர்ந்து அவனை அழிக்கவே முற்படுவார்கள். இனி உனது மனதில் அவன் மீது கொண்டுள்ள வாஞ்சையை சிறிது சிறிதாக மறந்து விடு. மூவுலகிலும் பெருமை கொண்ட அசுர குருவின் மகள் நீ. மிக உயர்ந்த கௌரவம் கொண்ட நீ, கசனை மறந்து மனதை மாற்றிக் கொள் என்று உபதேசம் செய்தார்.

தேவயானியால் கசனை மறக்க இயலவில்லை. தனது தந்தையிடம் கண்ணீர் உகுத்தாள். எவ் வழியிலாவது கசனை உயிருடன் மீட்டால் தான் தனது வாழ்வுக்கு பொருள் உண்டு என்று தந்தை யிடம் மன்றாடினாள். தனது மகளின் மீது அளவற்ற பாசம் கொண்டவர் ஆசார்யர். தனது அளவற்ற தவவலிமைதனை கொண்டு ஞான திருஷ்டியில், நடந்த நிகழ்வுகளை நோக்கினார். கொடுமையான முறையில் கொலையுண்ட கசனை, பெயர் கூறி அழைத்தார். அந்த க்ஷணமே. ஆசார்யரின் வயிற்றினுள் இருந்து கசனின் குரல் ஒலித்தது. குருவே, நான் தங்கள் வயிற்றினுள் இருக்கிறேன் என்று தொடங்கி, அசுரர் கூட்டம் தன்னை வெட்டி, தீயினில் எரித்து, சாம்பலை எடுத்து, மதுவில் கலந்து குருவுக்கு கொடுத்தது வரை அனைத்து நிகழ்வு களும் அவனது குரலில் ஒலித்தது. பெரும் அதிர்ச்சிக் குள்ளானார் ஆசார்யர்.

தேவயானியை அழைத்தார். அதுவரை தானறிந்த வரை முழுவதுமாக விளக்கி, கசன் தனது வயிற்றுக்குள் மதுவுடன் சாம்பலாக கரைந்து விட்ட கொடுமைதனை விளக்கினார். மகளே... இனியும் அவனை நினைக்காதே. எவ்வளவு முறைகள் உயிர்ப் பித்தாலும் மீண்டும் மீண்டும் அசுரர்களால் கொலை செய்யப்படுவான். இவன் பொருட்டு நீ இத்துணை துக்கம் கொள்ளுவதால் எந்தப் பயனும் இல்லை என்று பொறுமையாக அறிவுறுத்தினார். ஆனால் துக்கம் தாங்காத தேவயானி, தனது தந்தையிடம் தாங்கள் சொல்லும் அறிவுரைகள் அனைத்தும் பொருள் பதிந்து இருந்தாலும், என்னுடைய மனம் பலஹீனமாகவேதான் இருக்கிறது. எப்பாடு

பட்டாவது கசனை உயிர்ப்பிக்க வேண்டும் என்று தந்தையின் மனம் உருகும்படி வேண்டினாள்.

ஆசார்யர் விளக்கினார். அருமை மகளே, இந்நிலையில் நான் அவனை உயிர்ப்பித்தால், எனது வயிற்றை கிழித்துக் கொண்டுதான் வெளியே வருவான். நான் இறக்கவே நேரிடும் என்றும் கூறினார். தேவயானி பதறினாள். தந்தையே கசன் இறந்தால் எனது மகிழ்ச்சி முற்றிலும் அழிந்து விடும். தாங்கள் இறந்தால் என் வாழ்வே அத்துடன் முடிந்து விடும் என்று அழுது புலம்பி துடித்தாள். சுக்ராசார்யாரின் மனதில் இறுதியாக ஒரு யோசனை தோன்றியது. இறைவனது சங்கல்பம் இதுவே போலும்! என்று நினைத்து, தனது தவவலிமை கொண்டு மீண்டும் தனது வயிற்றுக்குள் இருக்கும் கசனிடம் பேசினார். "தேவகுருவின் புத்திரனே!... உனது எண்ணம் ஈடேற வேண்டும் என்பது ஈஸ்வரனின் சித்தம் போலும்! நான் சொல்வதை கவனமாக கேள். வயிற்றினுள் கரைந்த நிலையில்... நீ உணருமாறு, "அமிர்த சஞ்சீவினி" எனப்படும் மிருத்யுஞ்ஜய மந்திரத்தை உபதேசிப்பேன். உடனே நீ என் வயிற்றினை கிழித்துக்கொண்டு பழைய உடலுடன் உயிர் பெற்று எழுவாய். நான் இறந்து விடுவேன். பின்னர் நான் உனக்கு உபதேசித்த "அதே மிருத்யுஞ்ஜய" மந்திரத்தை பிரயோகம் செய்து என்னை உயிரோடு மீண்டும் எழுப்புவாயாக" என்கிறார்.

அவ்வாறே சில கணங்களில் ஆசார்யரின் "அம்ருத மிருத்யுஞ்ஜய மந்திர" பிரயோக சக்தியினால் வயிற்றினைக் கிழித்துக் கொண்டு, புதிய தேஜஸுடன், தெளிவான வானத்தில், முழு நிலா உதயம் ஆனது போல் உயிருடன் எழுந்தான் கசன். சுக்ராசார்யார் வயிறு கிழிந்தது. உயிர் பிரிந்தது. உடல் கீழே சாய்ந்தது. (நான்கு வேதங்களும் இணைந்து குரு மனித உருக்கொண்டது போல அவரது உடல் காட்சியளித்தது என்று வேதவியாசர் தனது மூல காவியத்தில், அவரது உடலை வர்ணனை செய்கிறார்.) அடுத்த நொடியில், கசன், குரு உபதேசித்தபடி "அம்ருத சஞ்சீவினி" எனப்படும் "ம்ருத்யுஞ்ஜய மந்திரத்தினை" பிரயோகம் செய்ய, பரிபூரணமான தேஜஸுடன், சுக்ராசார்யார் உயிர் பெற்று எழுகிறார்.(கடந்த யுகங்களில், வேத மந்திரங்களின் சக்தி எவ்வளவு அமோகமாக வலிமையுடன் இருந்து இருக்கிறது என்பதனை உலக அளவில் இன்றைய பெரும்



ஆராய்ச்சியாளர்கள் உணர்ந்து இருக்கிறார்கள். இதுவே நமது வேத மந்திரங்களின் பெருமையும் ஆகும்.)

தான் பயில வந்த "அம்ருத ம்ருத்யுஞ்ஜய சஞ்சீவினி" மந்திரத்தை குருவின் மூலமாக உபதேசம் பெற்று, குருவின் மூலமாகவே ஒரு பரிசோதனை செய்து அதன் வலிமை நிரூபணம் ஆனது பற்றி மட்டற்ற மகிழ்ச்சி கொள்கிறான் கசன். குருவை நோக்கி சாஷ்டாங்கமாக நமஸ்காரம் செய்து, தாங்கள் ஓர் ஈடிணையற்ற மஹாத்மா. ஈஸ்வரன் நடத்திய திருவிளையாடல்களினை தொடர்ந்து தங்களையே தியாகம் செய்யத் துணிந்து எனக்கு ஒப்பற்ற அம்ருத ம்ருத்யுஞ்ஜய சஞ்சீவினி மந்திரத்தினை உபதேசம் செய்தீர். தங்கள் வயிற்றில் இருந்து உயிரோடு வெளி வந்தபடியால், தாங்களே எனக்கு தாயும், தந்தையும் ஆக உணர்ந்து, உரிய சேவையில் ஈடுபடுவேன் என்று மொழிந்தான்.

அவ்வமயம், மதுவினால் ஏற்பட்ட கொடிய தீமையை உணர்ந்து, "இன்று முதல் அறிவின்மையால் மதுபானம் செய்யும் எவனும் புத்தி இழந்து அல்லல் படுவர். ப்ரம்ம ஹத்தி தோஷம் பிடித்து உலகத்தாரால் இகழப் படுவார்கள்" என்று ஒரு சாபமும் அளித்தார். அசுரர்களை அழைத்து "உங்களது தொடர்ந்த

ஆணவத்தினாலும் அறியாமையாலும் இறுதியில் பிரகஸ்பதியின் புத்ரன் மாபெரும் வலிமை கொண்ட மாண்டவரை மீண்டும் உயிர் கொள்ளச் செய்யும் அம்ருத ம்ருத்யுஞ்ஜய சஞ்சீவினி மந்திரத்தினை என்னிடமிருந்தே உபதேசமாகப் பெற்று விட்டான் என்று எச்சரித்து அனுப்பினார். வெட்கி தலை குனிந்தனர் அசுரர் கூட்டம்.

கசன் தொடர்ந்து பல்லாண்டுகள் கடுமையான பிரம்மசர்ய விரதம் காத்து குருகுலத்தில் சேவை செய்தான். தனது சேவை காலம் முடிந்தவுடன், மங்கல சடங்குகளை முடித்து தேவலோகம் திரும்ப குருவிடம் அனுமதி கோரினான். அவ்வமயம் தேவயானி கசனிடம் வந்தாள். ஆங்கீரஸின்பேரனும், பிருஹஸ்பதியின் புத்திரனும் ஆகிய உனது பண்பும் அடக்கமும், குருபக்தியும், தவறாத துல்லியமான ப்ரம்மசர்யமும், மென்மேலும் உன்னை பெருமை உடையதாய் செய்துள்ளன. நான் உன்னிடம் வைத்த அன்பின் பொருட்டே எனது தந்தை அரக்கர்ளால் சிதைக்கப்பட்ட உனது உயிரை மூன்று முறை மீட்டுக் கொடுத்தார். நீ வந்த காரியமும் வெற்றிகரமாகவே முடிந்தது.

இனியும் கால தாமதம் வேண்டாம். சாஸ்திரப்படி என்னை விவாஹம் செய்து கொண்டு வாழ்வாய் என்று மிகவும் கனிவாக வேண்டினாள்.

கசனுடைய மனநிலை வேறுபட்டு இருந்தது. அவன் தேவயானிக்கு மிக்க அடக்கத்துடன் பதில் இறுத்தான். “நீ மனதில் களங்கமில்லாத தூய அன்பு கொண்ட உத்தமமான பெண். உனக்கு நான் கடமைப்பட்டவன். ஆனால் நானும் உனது தந்தையின் வயிற்றினில் இருந்தே உயிர் பெற்று எழுந்தேன். இந்த நிலையில் நீ என்னுடைய உடன் பிறந்த சகோதரியாகிறாய். ஆகையால் நமக்குள் வேறு விதமான உறவுகள் இருக்க முடியாது. தவிரவும் எனது உயிரை குருவின் மூலம் மூன்று முறை மீட்க நீயே காரணமாக இருந்து இருக்கிறாய். ஆகையால் நீயும் குருவிற்கு இணையான ஸ்தானத்தில் வைத்து பூஜிக்கப்பட வேண்டியவள். இந்த நிலையை உணர்ந்து உன் மனதினை மாற்றிக் கொள்வாய்” என வேண்டிக் கொண்டான்.

தேவயானி அவனுடைய நிலைப்பாட்டினை முற்றிலும் மறுத்தாள். நீ ஆங்கீரஸ் மஹரிஷியின் பேரன். உனது பிதாமகர் எனது தந்தையால் வணங்கப்படுகிறார். ஆகையால், நீயே உயர்ந்து நிற்கிறாய். என் மனதில் தோன்றியது முறையான தர்ம நெறிக்கு இழுக்கு இன்றி, எழுந்த இச்சை, உனது அறநெறி வழுவாமல் இருக்க, என்னை ஏற்றுக் கொள்ள வேண்டும். மனதில் எழும் தேவையற்ற குழப்பங்களை நீக்குவாய். என்னை மணம் புரிந்து கொண்டு ஏற்றமாக வாழ்வாய் என்று தொடர்ந்து வலியுறுத்தினாள்.

தேவயானியின் வேண்டுகோளை முற்றிலுமாக பிடிவாதமாக நிராகரித்தான் கசன். ஆங்கிரஸின் பேரனும், தேவகுரு பிரகஸ்பதியின் புத்திரனுமான எனது சிந்தனைகளும் செயலும் என்றும் தர்மத்திற்கு மாறாக நிலை கொள்ளாதவை. இதுகாறும் நான் எனது குருவிற்கு செய்து வந்த சேவையை, என் சார்பாக தொடர்ந்து நீயே செய்து வந்து மன அமைதி கொள்வாய். நான் இங்கிருந்து புறப்பட்டு என் இருப்பிடம் செல்கிறேன்'' என்று கூறியவன் மீது கடுமையான சினம் கொண்டாள் தேவயானி.

கசனே, தேவரும் அசுரரும் வணங்கும் மஹிமை கொண்டவர் எனது தந்தை. அறநெறி மாறாமல் எழுந்த எனது கோரிக்கையை நிராகரித்த உனக்கு இப்போதே சாபமிடுகிறேன். எனது தந்தை மூலம் உனக்கு கிடைத்த “அம்ருத மிருத்யுஞ்ஜய மந்திரம்” உனக்கு பயன்படாமல் போகும் என்று கடுமையாக எச்சரித்தாள்.

கசன் சிறிதும் தடுமாற வில்லை. தேவயானியை நோக்கி, “நீ எனது குருவின் மகள் என்பதால், நான் உன்னிடம் சிறிதும் சினம் கொள்ள மாட்டேன். ஆனால் நீ உனது காம இச்சையை முன்னிட்டு எனக்கு சாபம் அளித்தாய். உனது சாபத்தினால் உபதேசம் கொண்ட மந்திரத்தின் பலன், எனக்கு உதவாமல் போகலாம். நான் யாருக்கும் உபதேசம் செய்கிறேனோ அவர்கள் மூலம் அது தேவர்களை காக்க பயன்படும்” என்று அமைதியாக சாபத்தினை ஏற்று, குருவிடம் சென்று விடை பெற்றுக் கொண்டு தேவலோகம் திரும்பினான். இத்துடன் கசனின் வரலாறு முடிகிறது. தேவயானி, யயாதி மன்னனை மணக்கும் வரலாறு தொடர்கிறது.

தொடர்ந்து அலசுவோம் அடுத்த இதழில்...



# சுக்கு



தெலுங்கு மூலம் :
டாக்டர். சி.மதுசூதன சர்மா, 90007 61390
தமிழாக்கம் :
திருமதி வி.உஷா, 99850 02156

பழங்காலம் முதற்கொண்டே மருத்துவத்திற்கு உபயோகிக்கப்படும் ஓர் அரிய மருந்துப் பொருள் சுக்கு. அற்புதமான பலனை அளிப்பதால் இதனை "விஷ்வ பேஷஜம்" என்றும், "மஹௌஷதி" என்றும், காரமான சுவையை உடையதால் "கடுக்ரந்தி" என்றும், கபம் ஜலதோஷம் ஆகியவற்றைக் குறைப்பதால் "கபாரி" என்றும் சமஸ்க்ருதத்தில் இதற்கு பெயர்கள் உண்டு.

ஜிஞ்ஜிபரேசி என்ற தாவரக்குடும்பத்தைச் சேர்ந்த இதன் அறிவியல் பெயர் ஜிஞ்ஜிபர் அபிஷனாலிஸ். ஆங்கிலத்தில் ட்ரை ஜிஞ்ஜர் என்று கூறுவர்.

## ஜலதோஷம் நீங்க :

15 கிராம் சுக்கு பொடி, 15 கிராம் மிளகு பொடி ஆகியவற்றை கலந்து வைத்துக்கொண்டு நாள் தோறும் இரண்டு முறை வேளைக்கு ஒரு கிராம் பொடியை தகுந்தளவு தேனுடன் கலந்து உட்கொண்டால் ஜலதோஷம் குறையும்.

## வாயுத்தொல்லை நீங்க :

சுக்கு, சோம்பு, சுனாமுகி, சைந்தவலவணம், கரக்காய் பொடி ஆகியவற்றை 25 கிராம் வீதம் கலந்து வைத்துக்கொண்டு, நாள்தோறும் 2 வேளை 2–3 கிராம் அளவு பொடியை, 100 மி.லி. வெதுவெதுப்பான நீரில் கலந்து உட்கொண்டால் நாம் உண்ணும் உணவு நன்கு செரிக்கப்பட்டு பசி ஏற்படும். ஜீரணம் ஆகும்.

வயிற்று வலி, வயிற்று உப்பசம், புளியேப்பம் போன்ற வியாதிகள் நீங்கும். மலச்சிக்கல் குறையும். "அஜீர்ணே வினானரோகம்" என்ற வாக்குப்படி அஜீர்ணம் இல்லை என்றால் எவ்வித வியாதிகளும் நமக்கு உண்டாகாது என்று ஆயுர்வேத மருத்துவம் குறிப்பிடுகிறது. செரிமான சக்தியை அதிகரிக்க இந்த அற்புத மருந்து உபயோகப்படுகிறது.

## எலும்பு மற்றும் மூட்டு வலியை போக்க :

சுக்கு பொடி, கருப்பு எள் ஆகியவற்றை வறுத்தது , வெல்லப்பொடி ஆகிய ஒவ்வொன்றையும் 50 கிராம் வீதம் கலந்து பொடி செய்து வைத்துக் கொண்டு காலை மாலை ஆகிய இரு வேளைகளில் 2–3 கிராம் பொடியை 100 மி.லி. வெதுவெதுப்பான பாலுடன் அல்லது நீருடன் கலந்து உட்கொண்டால் நல்ல பலன் கிட்டும். இம்மருந்தை உட்கொள்வதால் தோள் வலி, இடுப்பு வலி, பாதம் வலி குறையும்.

## மாதவிடாய் சீராய் வருவதற்கு :

50 கிராம் சுக்குபொடி, 50 கிராம் உலர்ந்த பேரிச்சம் பழம் ஆகியவற்றை கலந்து வைத்துக் கொண்டு காலை வெறும் வயிற்றில் 100 மி.லி. சூடான பால் அல்லது சூடான நீரில் ஒரு டீஸ்பூன் பொடியை கலந்து உட்கொள்ள வேண்டும். மாதவிடாய் வந்த பின் அதை நிறுத்த வேண்டும். மறுபடியும் மாதவிடாய் வருவதற்கு 10–15 நாட்களுக்கு முன் இதனை குடிக்க ஆரம்பித்து மாதவிடாய் வந்தபின் நிறுத்தி விட வேண்டும். இவ்வாறு 3–4 மாதங்கள் இடைவிடாமல் செய்தால் மாதவிடாய் சீராய் ஏற்படும்.

## அதிக சிறுநீர் கழிப்பவருக்கு :

சுக்கு பொடி, மிளகு பொடி, கல்கண்டு பொடி ஆகிய ஒவ்வொன்றையும் 30 கிராம் வீதம் கலந்து வைத்துக் கொண்டு, காலை மாலை இரு வேளை களில் 1–2 கிராம் பொடியை தகுந்தளவு நெய்யுடன் குழைத்து உட்கொண்டால் இந்த உபாதை நீங்கும்.

## பலவிதமான வயிற்றுப் போக்குகள் குறைய :

சுக்கு பொடி, சீரகத்தை வறுத்து எடுத்த பொடி, ஓமப்பொடி, மிளகுப்பொடி ஆகியவற்றுடன் ஆயுர்வேதக் கடையில் கிடைக்கப் பெறும் கொடி சபாலப்பொடி முதலானவற்றை கலந்து வைத்துக் கொண்டு, சம அளவில் நாள்தோறும் காலை மாலை ஆகிய 2 வேளைகளில் இதனை 2–3 கிராம் வீதம் எடுத்துக் கொண்டு வெண்ணெய்யுடன் கலந்து உட்கொண்டால் இப்பிரச்சனை நீங்கும்.

## விக்கல் நிற்க :

நாள்தோறும் 2–3 முறை 1–2 கிராம் சுக்குப் பொடியை தகுந்தளவு தேனுடன் கலந்து உட் கொண்டால் விக்கல் விரைவில் நின்று விடும்.

## குறிப்பு :

மருந்துகளை உபயோகிப்பதற்கு முன்பு ஆயுர் வேத மருத்துவரை அணுகி, ஆலோசனைப் பெறவும். இக்கட்டுரை வாசகர்கள் பொது அறிவை வளர்த்துக் கொள்ளவே தவிர நோய்களுக்கு நிரந்தர தீர்விற்கு அல்ல.

தொடரும்...



## ஸ்ரீவேத நாராயண ஸ்வாமி ஆலயம், நாகுலாபுரம்

ஆந்திர மாநிலம், சித்தூர் மாவட்டம், நாகுலாபுரத்தில் ஸ்ரீவேத நாராயண ஸ்வாமி ஆலயம் அமைந்துள்ளது. இது திருப்பதியிலிருந்து 70 கி.மீ. தூரத்திலும், சென்னையிலிருந்து 90 கி.மீ. தூரத்திலும் உள்ளது. இங்கு ஸ்வாமி பத்து அவதாரங்களில் முதன்மையான மச்ச அவதார வடிவில் கொலுவீற்றிருக்கிறார். திருமலை திருப்பதி தேவஸ்தான நிர்வாகத்தின் கீழ் இவ்வாலயம் இருக்கிறது. இங்கு ஒவ்வொரு வருடமும் பங்குனி மாதம் சுக்ல பக்ஷ துவாதசி, திரியோதசி மற்றும் சதுர்தசி நாட்களில் சூரிய பூஜை மிகவும் விமரிசையாக நடை பெறுகிறது.

சூரிய ஒளிக்கதிரானது மாலையில் சூரியன் மறையும் நேரத்திற்கு முன்னர் மேற்கு முகமாக எழுந்தருளியிருக்கும் ஸ்ரீவேத நாராயண ஸ்வாமியின் மீது படும் நிகழ்வையே சூரிய பூஜையாகக் கொண்டாடப்படுகிறது. இந்த சூரிய ஒளிக்கதிர்கள் கோபுரத்தின் மேலிருந்தோ அல்லது ஏதாவது ஒரு நுழைவு வழியாகவோ வருவது இல்லை. இக்கதிர்கள் மேற்கில் சூரியன் மறையும் போது கோபுர நுழைவுவாயிலின் வாயிலாக வந்து இவ்வாலயத்தின் 600 மீட்டர் தூரத்தில் கருவறையில் கொலு வீற்றிருக்கும் ஸ்ரீவேத நாராயண ஸ்வாமியின் மீது படுவது சிறப்பான ஒன்றாகும். முதல் நாள் சூரிய ஒளிக்கதிர்கள் ஸ்வாமியின் திருப்பாதங்களிலும், இரண்டாம் நாள் ஸ்வாமியின் நாபிப்பகுதியிலும், மூன்றாம் நாள் ஸ்வாமியின் நெற்றியின் மீதும் (கிரீடம்) படும். ஒவ்வொரு ஆண்டும் இந்த மூன்று நாட்கள் மட்டுமே சூரிய ஒளிக்கதிர்கள் ஸ்வாமி மீது விழும். இவ்வாறு நிகழ்வதை சூரிய தேவன் ஸ்வாமியை தன் ஒளிக்கதிர்களின் வாயிலாக வணங்குவதாக எண்ணத் தோன்றுகிறது. எனவே இதனை சூரிய பூஜை என்றும் கூறுவர். இந்நிகழ்ச்சியை திருமலை திருப்பதி தேவஸ்தானம் ஐந்து நாட்கள் அடங்கிய நிகழ்ச்சியாக சிறப்பாகக் கொண்டாடுகிறது.

நீதிக் கதை

# லட்சுமி கடாக்ஷம்



– திரு. எம். முத்துராம் சுந்தர்.
ஆழ்வார் குறிச்சி

அர்ஜுனனும், கிருஷ்ணரும் தெருவில் உலவிக் கொண்டிருந்த போது ஒரு முதியவர் தர்மம் செய்யும்படி கேட்டார். அர்ஜுனன் ஆயிரம் பொற்காசுகளைக் கொடுத்தான். முதியவர் மகிழ்ச்சியுடன் வீட்டுக்குப் புறப்பட்டார். இதை கவனித்த ஒரு திருடன், பொற்காசுகளை வயோதிகரிடமிருந்து பறித்துச் சென்று விட்டான்.

சில தினங்கள் கழித்து மீண்டும் அவ்வழியே வந்த அர்ஜுனனிடம் முதியவர் நடந்ததைச் சொல்ல, அர்ஜுனன் விலையுயர்ந்த நவரத்தின கல்லைக் கொடுத்தான். முதியவரும் வீட்டுக்குக் கொண்டு சென்று, யாரிடமும் சொல்லாமல் பரணில் இருந்த பானையில் ஒளித்து வைத்து விட்டார். இதை அறியாத அவரது மனைவி பரணிலிருந்த பானையில் தண்ணீர் எடுக்க ஆற்றில் பானையைக் கழுவும் போது உள்ளிருந்த கல் ஆற்றில் விழுந்து விட்டது. அவள் பானையு டன் வீட்டில் நுழைந்த போது, வயோதிகர் குடத்தைப் பார்த்து அதிர்ச்சியாகி கல் எங்கே என மனைவியிடம் கேட்டார். பின் ஆற்றிற்குச் சென்று தேடியும் பயனற்று திரும்பினார்.

சில தினங்கள் கழித்து மீண்டும் கண்ணனையும் அர்ஜுனனையும் கண்ட முதியவர் நடந்ததைக் கூற, அர்ஜுனன் கண்ணனிடம் இவர் அதிர்ஷ்டக் கட்டை என்றான். அதை ஆமோதித்த கண்ணன் இந்த முறை நீ இவருக்கு இரண்டு காசு மட்டும் கொடு என்றார். அர்ஜுனனும் அதைக் கொடுத்தனுப்பி விட்டு கண்ணனைப் பார்த்து, “இரண்டு காசுகள் அவருக்கு என்ன சந்தோஷத்தைக் கொடுத்து விடும்” எனக் கேட்டான். பின்னர் இருவரும் முதியவரை பின் தொடர்ந்தனர். செல்லும் வழியில் மீனவர் ஒருவர் உயிருடன் வைத்திருந்த இரண்டு மீன்களை வாங்கிக் கொள்ளும்படி முதியவரிடம் கேட்டான்.

யோசித்த முதியவர் இந்தக் காசுகள் எப்படியும் தன் குடும்பத்திற்கு ஒரு வேளை பசியைக் கூட போக்காது என எண்ணி அந்த மீன்களை வாங்கி ஆற்றிலேயே விட்டு புண்ணியமாவது மிஞ்சட்டும் என தீர்மாணித்தார். இன்னொரு மீனின் தொண்டையில் ஏதோ சிக்கியிருப்பதைப் பார்த்த அவர் மீனின் வாயைப் பிளந்து பார்த்தார். அதைப் பார்த்ததும் வியப்பு அடைந்தான். அது அவர் மனைவி ஆற்றில் தவற விட்ட கல். சந்தோஷ மிகுதியில் சிக்கி யாச்சு என்று கூச்சலிட்டார். அதே நேரம் யதார்த்தமாக அவ்வழியே இவரிடம் கொள்ளயடித்த திருடன் வர, அவன் திடுக்கிட்டு தன்னைத்தான் முதியவர் கூறுகிறார் என்றெண்ணித் திரும்ப ஓடினான்.

அர்ஜுனன் கண்ணனிடம் வழியில் தான் எத்தனை விசித்திரங்கள். அதிலும் இது போன்ற நிகழ்வுகள் எப்படி சாத்தியம்? என்று கேட்டான். கண்ணன் சிரித்துக் கொண்டே இவர் நீ முன்பு கொடுத்ததை தனக்கும் தன் குடும்பத்திற்கும் மட்டுமே எடுத்துச் செல்ல வேண்டும் என எண்ணினார்.


அடுத்து நீ கொடுத்த விலை உயர்ந்த கல்லைத் தானும் உபயோகிக்காமல் மற்றவருக்கும் பயன்படாமல் ஒளித்து வைத்திருந்தார். ஆகவே அவையிரண்டும் அவரிடம் தங்கவில்லை. இப்போதோ தன்னிடமிருந்தது மிகக் குறைவானது என்றாலும் தனக்கு உதவாவிட்டாலும் இன்னொரு உயிராவது வாழட்டுமே எனக் கருதினார். இந்த புண்ணியத்தால் இழந்த செல்வத்துக்கும் மேலாகவே அடைந்தார். பொது நலமுள்ளவர்களுக்கே லட்சுமி கடாக்ஷம் கிடைக்கும்! என்றார்.




# வாயில்லா ஜீவன்களுக்கும் முக்தி

சித்திரக் கதை

கதை மூலம்: திரு. ஸ்ரீநிவாச தீக்ஷிதுலு
சித்திரம் : திரு. கே. துளசிபிரசாத்




முதலில் பாம்பு நதியில் நீராடி விட்டு வில்வத்தை சிவலிங்கம் மீது வைத்து பூஜித்து விட்டு சென்றது. பின்னர் யானை தும்பிக்கையில் நீரை கொணர்ந்து வந்து...
எனக்கு முன்பாகவே யாரோ சிவ பூஜை செய்துள்ளனர். இந்த இலைகளை எடுத்து விட்டு அபிஷேகம் செய்வோம்.
தினமும் பூஜை செய்து கொண்டு வந்த பாம்பும் யானையும் பூஜையின் பொருட்டு எதிரிகளாயின. பாம்பு எண்ணியது...
எனக்குப் பிறகு இந்த யானை வந்து பூஜை செய்கிறதே, இதனை பழி தீர்த்தல் வேண்டும்.
பாம்பினை கண்ட யானையும் எனக்கும் முன்னதாகவே பாம்பு பூஜை செய்கிறதோ. இதனை பழி தீர்த்தல் வேண்டும் என எண்ணியது.
யானை தும்பிக்கையால் நீரை கொணர்ந்து அபிஷேகம் செய்யும் போது பாம்பு தும்பிக்கையுள் புகுந்தது. யானை தும்பிக்கையை பாறையின் மேல் முட்டியது.
என் பூஜையையா சீர்குலைக்கிறாய்?
பாம்பு யானையின் தலைக்குள் சென்றது. யானையும் தலையை கொண்டு பாறையின் மீது முட்டியது.
அம்மா... அம்மா...
ஐயோ! ஐயா!
பக்தியின் பெருக்கால் பாம்பும் யானையும் யார் முதலில் பூஜை செய்வது என்ற போட்டியில் இரண்டும் ஒருவரையொருவர் தாக்கி வருத்திக் கொண்டு தன்னுயிர்களை மாய்த்துக் கொண்டன. சிவபிரான் உமையவளோடு அங்கு காட்சி அளித்து...
உங்களிருவருக்கும் முக்தியை அளிக்கின்றேன். விலங்குகளான உங்களுடைய பெயராலேயே இது “ஸ்ரீ காளஹத்தி” என இத்தலம் சிறப்புப் பெறட்டும். (ஸ்ரீ–சிலந்தி, காள–பாம்பு, ஹத்தி–யானை)
அடுத்த இதழில் வேறொரு கதையை பார்த்து படித்து மகிழலாம்.
முற்றும்.


ப
ல்
சு
வை

ப
கு
தி

## சித்திரம் வரைதல்

இந்த சித்திரத்திற்கு வண்ணம் தீட்டுவோமா...

பக்கத்தில் உள்ள படத்தை இந்த கட்டத்தில் வரையுங்கள்...



### பொருத்துக...

| | |
|---|---|
| 1. மஹாலக்ஷ்மி | - அ. நந்தி |
| 2. திருவிருத்தம் | - ஆ.மாயப்பிரான் |
| 3. சிவாலயம் | - இ. பங்குனி உத்திரம் |
| 4. திருப்புலியூர் | - ஈ. திருஷ்டகேது |
| 5. சிசுபாலன் | - உ.நம்மாழ்வார் |

1.இ, 2.உ, 3.அ, 4.ஆ, 5.ஈ.



### தெரிந்து கொள்வோமே...

"அகலகில்லேன் இறையுமென்று
அலர்மேல் மங்கை உறை மார்பா"

- நம்மாழ்வார்

எம்பெருமானை விட்டு கணப்பொழுதும் அகலாமல் பிராட்டி தன் சேவைகளை செய்வது போல், நாமும் எம்பெருமானிடம் நமக்காக சிபாரிசு செய்யும் பிராட்டியை என்றும் சரணடைந்து உய்யுவோம்!

### வார்த்தைகளை சரியாக அணிவகுத்து வாக்கியம் அமைக்கவும்...

லக்ஷ்மி கிட்டும் பொது உடையவர்க்கே கடாக்ஷம் நலம்.

பொதுநலம் உடையவர்க்கே லக்ஷ்மி கடாக்ஷம் கிட்டும்.



ஏழு வித்தியாசங்களை கண்டுபிடியுங்கள்



1. மாவிலைத்தோரணம்
2. புக்களின் தோரணம்
3.பிறை
4. வாழை இலை
5. பழங்களின் தட்டு
6. முந்தானை
7. பாய்

### விடுகதை பகுதி...

1. பார்ப்பதற்கு ஐந்து கால் எண்ணினால் நான்கு கால்?
2. நூல் நூற்கும் இராட்டை அல்ல ஆடை நெய்யும் தரியும் அல்ல. அது என்ன?
3. காலில்லாதவன் நெளிவான், ஓடுவான் அவன் யார்?

1. யானை, 2.சிலந்தி, 3.பாம்பு


Printed by Sri P. Ramaraju, M.A., and Published by Dr. K. Radha Ramana, M.A., M.Phil., Phd., on behalf of Tirumala Tirupati Devasthanams and Printed and Publised at Tirumala Tirupati Devasthanams Press, K.T. Road,Tirupati 517 507. Editor : Dr.V.G. Chokkalingam, M.A., Ph.D.



திருமலை திருப்பதி தேவஸ்தானம்

# திருப்பதி ஸ்ரீகோதண்டராம ஸ்வாமி பிரம்மோத்ஸவம்

## 2022 மார்ச் 30 முதல் ஏப்ரல் 07 வரை

**30-03-2022**
புதன் கிழமை
பகல் : துவஜாரோஹணம்
இரவு : பெரிய சேஷ வாகனம்

**31-03-2022**
வியாழக்கிழமை
பகல் : சிறிய சேஷ வாகனம்
இரவு : ஹம்ஸ வாகனம்

**01-04-2022**
வெள்ளிக்கிழமை
பகல் : சிம்ம வாகனம்
இரவு : முத்துப்பந்தல் வாகனம்

**02-04-2022**
சனிக்கிழமை
பகல் : கல்பவிருக்ஷ வாகனம்
இரவு : சர்வபூபால வாகனம்

**03-04-2022**
ஞாயிற்றுக்கிழமை
பகல் :
பல்லக்கில் மோகினி அவதாரம்
இரவு : கருட வாகனம்

**04-04-2022**
திங்கட்கிழமை
பகல் : ஹனுமத்வாகனம்
மாலை : வஸந்தோத்ஸவம்
இரவு : யானை வாகனம்

**05-04-2022**
செவ்வாய்க்கிழமை
பகல் : சூரியப்பிரபை வாகனம்
இரவு : சந்திரப்பிரபை வாகனம்

**06-04-2022**
புதன் கிழமை
பகல் : திருத்தேர்
இரவு : குதிரை வாகனம்

**07-04-2022**
வியாழக்கிழமை
பகல் : சக்கரஸ்நானம்
இரவு : துவஜாவரோஹணம்

SAPTHAGIRI (TAMIL) ILLUSTRATED MONTHLY Published by Tirumala Tirupati Devasthanams Printing on 20-02-2022 & posting at Tirupati RMS Regd. with the Registrar of Newspapers for India under RNI No.APTAM/2021/80590. Postal Regd.No.TRP/157/2021-2023 "LICENCED TO POST WITHOUT PREPAYMENT No. PMGK/RNP/WPP-04(5)/2021-2023" Posting on 20th of Every month.

